இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 202 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 02 வெள்ளிக்கிழமை 16.06.2017

## ஐங்கரநேசன் பதவி துறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடக்கு மாகாண விவசாய அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை, பொ.ஐங்கரநேசன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் நேற்றுக் கையளித்துள்ளார்.
அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையின் அடிப்படையில் பதவி விலகப் பரிந் »04

## பொருத்து வீடு குறித்து அரச அதிகாரிகளுக்கு நேற்று வகுப்பெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
பொருத்து வீடு நிர்மாணிக்கவுள்ள நிறுவனத்தினர், வடக்கு - கிழக்கு மாவட்டச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலர்களைச் »25

## நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரித்தது ஏன்?

மக்கள் காங்கிரஸ் விளக்கம்

கொழும்பு, ஜூன் 16
வடக்கு மாகாண சபை அசமந்தப்போக்கிலேயே செயற்பட்டுவருகின்றது. எனவே, »25

## பிரிகேடியர் குணவர்த்தன குற்றவாளி

ஆயினும் அவரைப் பதவியிறக்க இராணுவத் தளபதி மறுப்பு

கொழும்பு, ஜூன் 16
கம்பகா ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தனவைப் பதவியிறக்கம் செய்யுமாறு இராணுவ நீதிமன்றம் அளித்த பரிந்துரையை இராணுவத் »04

# இணைக்க முயற்சி சறுக்கல்

## அமைச்சுப் பதவிகளுக்காக மட்டும் விட்டுக்கொடுக்க தமிழ் அரசுக் கட்சி தயாரில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பதவி நீக்குவதற்கான முயற்சிகளை அடுத்து அவருக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்த நேற்று எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் விக்னேஸ்வரனுக்கும் இடையில் நடந்த பேச்சுக்கள் இணக்கம் ஒன்றுக்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்ற பிம்பத்தை நேற்றுப் பகலில் ஏற்படுத்தினாலும் கூட நேற்று இரவு வரையில் முதலமைச்சருக்கு எதிரான



நம்பிக்கையில்லாப் பிரேரணை நகர்வுகளை தமிழ் அரசுக் கட்சி கைவிடவில்லை.
சம்பந்தனுக்கும் விக்னேஸ்வரனுக்கும் இடையில் நேற்றுப் பகல் தொலைபேசி வழியாக நடந்த பேச்சையடுத்து இந்த முரண்பாட்டுக்கு ஓர் இணக்கம் ஏற்படும் போல் தென்பட்டது. அமைச்சர்கள் இருவர் விடுமுறையில் செல்ல வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டில் இருந்து இறங்கிவர தான் தயார் என சம்பந்தரிடம் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். ஆனால் தமிழ் அரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களும் தலைமையும் அந்த இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்று தெரியவருகிறது.
தமது அமைச்சுப் பதவிகளை பாதுகாப்பதற்காக இத்தகைய ஓர் இணக்கப்பாட்டுக்கு »25

## பதவியில் தொடர முதல்வர் விட்டுக்கொடுப்புக்கு தயார்

யாழ்., ஜூன் 16
வடக்கு மாகாண முதலமைச்சராகப் பதவியில் நீடிக்கும் வகையில் தனது நிலைப்பாடுகளில் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்ய »25

## விக்கியின் ஆதரவு அணியும் நேற்றிரவு ஆளுநரிடம் மனு

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்கள் ஒப்பமிட்டு »25

## தமிழ் அரசுக் கட்சியை ஒதுக்கும் முதல்வரின் போக்கு மாறினால் மட்டுமே இணக்கம் வரும்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் பதவியில் தொடர்வது தமிழ் அரசுக் கட்சியை ஒதுக்கும் போக்கிலிருந்து அவர் மாறினால் மட்டுமே சாத்தியமாகும் என்று தெரிகிறது.
விக்னேஸ்வரனை முதலமைச்சராக்க தமிழ் அரசுக் கட்சி முதன்மையாகவும் முழுமையாகவும் செயற்பட்டாலும் அவர் பதவியேற்றதில் இருந்து கட்சியை ஓரங்கட்டிச் செயற்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. தற்போதைய நிலையில் இதுவே அவருக்கும் »25

## "யாருக்குமே இனி அஞ்சமாட்டேன்"

விக்கி நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
"நான் இனி யாருக்கும் அஞ்சத் தேவையில்லை. என்னுடைய பலம் மக்களின் அன்பு தான். அரசியல் ரீதியான பலம் எதனையும் நான் சேர்த்திருக்கவில்லை. பொது மக்களுக்குச் செய்யும் எனது சேவையே எனக்குப் பலமாக இருக்கும். ஆகவே நடப்பதை இருந்து »25

## இலங்கையில் இன்னமும் தாக்குதல் அச்சம் உள்ளது

எச்சரிக்கை செய்கிறது பிரிட்டன்

கொழும்பு, ஜூன்16
இலங்கையில் இன்னமும் தீவிரவாதத் தாக்குதல் அச்சம் நிலவுவதாக பிரிட்டன் தனது நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.
பிரிட்டன் அயலுறவு மற்றும் கொமன்வெல்த் பணியகம், தமது நாட்டு குடிமக்களுக்கு »24

## விக்கிக்கு ஆதரவாக அடைப்புக்கு அழைப்பு

தமிழ் மக்கள் பேரவை விடுத்தது

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டதைக் கண்டித்தும், முதலமைச்சருக்கு ஆத ரவு தெரிவிக்கும் முகமாகவும், இன்று வெள்ளிக்கிழமை பொதுக் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளதாக தமிழ் மக்கள் பேரவை »25



## முதல்வர் விக்கிக்கு ஆதரவாக மாகாண சபை முன் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையின் முன்பாக இளைஞர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் »25

## சிறுமிகள் மீதான பாலியல் வதைக்கு நீதிவேண்டி நாளை உடுவிலில் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 16
மூதூர் பகுதியில் அறநெறிப் பாடசாலை தமிழ்ச் சிறுமிகள் மீதான பாலியல் வதையைக் கண்டித்தும், அதற்கு நீதி »25

## உறவுகளை மீட்பதற்காக கடலில் இறங்கிப் போராட்டம்



திருமலை, ஜூன் 16
திருகோணமலை மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கடலுக்குள் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.
காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி 104 நாள்களாக போராட்டம் நடத்தி வரும் நிலையில் நேற்று அவர்கள் கடலுக்குள் இறங்கிப் போராட்டம் நடத்தினர். விரிவு: பக். 04

## தமிழ் அரசுக் கட்சியுடன் கூட்டு

## அமைச்சர் டெனீஸ்வரனிடம் ரெலோ விளக்கம் கோருமாம்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடக்கு மாகாண சபை அமைச்சர் பா.டெனீஸ்வரன், முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்திட்டமை தொடர்பில் விளக்கம் கோரப்படும் என்று, ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் ந.சிறீகாந்தா »25

## வடக்கு மாகாணச் சிக்கல்; தூதரகங்கள் தீவிர கவனம்

கொழும்பு, ஜூன் 16
வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் கூடுதல் கவனம் செலுத்தியிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களி »25

## அடாவடிக் கும்பலைச் சேர்ந்த 6 பேருக்கு 10 ஆண்டுகள் சிறை

வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

வவுனியா, ஜூன் 16
கத்திகள், வாள்கள் மற்றும் கைக்குண்டு என்பவற்றை உடமையில் வைத்திருந்த குற்றத்துக்கு 6 பேர் அடங்கிய கும்பலுக்கு 10ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனைவழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.
"வடக்கு மாகாணத்தில் அடாவடிக் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான குற்றச்செயல்களை சமூகத்தில் அனுமதிக்க »04

Vardhana சஹய
சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கடன்

DFCC வங்கியின் வர்தன சஹய கடனைப் பெற்று உங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யுங்கள்

- வியாபாரமொன்றை ஆரம்பித்தல்
- வியாபாரத்தை விரிவுபடுத்தல், புதிய இடத்திற்கு மாற்றுதல், வியாபாரத்திற்கு அவசியமான இயந்திர வகைகளை கொள்வனவு செய்தல்
- தொழிற்படு மூலதன வசதி
- பிணை முறிகளைப் பெறும் வசதி

கடன் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக காப்புறுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
www.dfcc.lk

DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டட்டின் AA-(lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது. DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## பள்ளிவாசல் மீது தாக்குதல்; சந்தேகநபர் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 16

குருநாகல் மல்லவபிட்டிய பள்ளிவாசல் மீது கடந்த மே மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பெற்றோல் குண்டு தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் பொதுபல சேனா அமைப்பின் செயற்பாட்டாளர்கள் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. '

(ஐ)

# நாட்டுக்குத் தீவைக்க முயற்சிக்கிறார் மகிந்த

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 16

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இந்த நாட்டுக்கு மீண்டும் தீ வைப்பதற்கு முயற்சி செய்கின்றார். இவ்வாறு ஐக்கிய தேசிய காட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

போர் முடிந்த பின்னர் நாட்டில் இனங்களிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பு மகிந்தவுக்கு அதிகம் இருந்தது. நாட்டில் இலங்கையர் என்ற ஓரினம் மட்டும் தான் உள்ளது என்று அவர் கூறினார். அவரால் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியவில்லை. அவரது ஆட்சியில் தான் முஸ்லிம்களுக்கு எதிராகவும் தமிழர்களுக்கு எதிராகவும் இனவாதம் தூண்டப்பட்டது. அவர் பல அமைப்புகளை உருவாக்கி முழு அரச ஆதரவை வழங்கிப் பேரழிவை ஏற்படுத்தினார். அதனால் அழுத்கமை பற்றி எரிந்தது. அதுவே அவரது தோல்விக்கும் காரணமாக இருந்தது. அதை அவர் இப்போது ஏற்றுக் கொண்டுள்ளார்.

அவரது ஆட்சியில் 200க்கும் மேற்பட்ட இனவாத சம்பவங்கள் இடம்பெற்றன. அவை ஒன்று தொடர்பிலும் அவர் விசாரணை நடத்தவில்லை. குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்படவில்லை. இந்த ஆட்சியிலும் அவரே மீண்டும் இனவாதத்தைத் தூண்டுகின்றார். மீண்டும் இந்த நாட்டுக்குத் தீ வைக்கப் பார்க்கின்றார். இதற்கு மேற்கு நாடுகளின் அமைப்புகளின் உதவிகள் இருக்கக்கூடும். நாடு போர்க் காலத்தில் போல் மீண்டும் பின்னோக்கிச் செல்வதை நாம் விரும்பவில்லை. அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். இப்போது நாடு பன்னாட்டு ரீதியில் நற்பெயரைச் சம்பாதித்துள்ளது.

இதை வைத்துக்கொண்டு நாம் பொருளாதார வெற்றியைப் பெற்று வருகின்றோம். இந்த நிலைமையைக் குழப்புவதற்கு முன்னாள் ஆட்சியாளர்கள் முயற்சி செய்கிறார்கள்.

இதற்கு நாம் ஒருபோதும் இடங்கொடுக்க மாட்டோம்.

அரசு என்ற வகையில், தற்போதைய இனவாதச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புப்புள்ளி வைத்து சதிகாரர்களைத் தோல்வியடையச் செய்யும் பொறுப்பு அரசுக்கு உண்டு. அரசு அந்தப் பொறுப்பை உடனே நிறைவேற்ற வேண்டும். என்றார்.

(ஐ-3)

# அரசியலுக்காக மக்களுக்கு உதவிகளை வழங்கவில்லை

## இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஜூன் 16

அரசியலுக்காக உதவிகளை வழங்கவில்லை, தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவே உதவிகளை வழங்குகின்றோம். இவ்வாறு இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளர் இ.சாணக்கியன் தெரிவித்தார். மண்முனைத் தென்மேற்கு கோட்டத்துக்குட்பட்ட அதிபர்களுக்கு நேற்று முன்தினம் காரியாலயப்பை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கல்வியை உயர்த்த வேண்டும் என்பதற்காகவே இராசமாணிக்கம் மக்கள் அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக மாணவர்களுக்குப் பல உதவிகளைச் செய்து வருகின்றோம்.

அத்தோடு வாழ்வாதார உதவிகளையும் வழங்கி வருகின்றோம். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கல்விக்காக எவ்வாறான உதவிகளை வழங்கமுடியுமோ அவ்வாறான உதவிகளை வழங்குவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்." என்றார்.

(ஐ-10)

# நிலத்துக்காகப் போராடும் எம்மை கவனிப்பாரில்லை

## இரணைதீவு மக்கள் வேதனை



கிளிநொச்சி, ஜூன் 16

"எமது சொந்த இடத்துக்கு மீள்குடிமர்த்துமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எங்களை கவனிப்பார் எவருமற்ற நிலையில் எமது போராட்டம் தொடர்கிறது" இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இரணைதீவு மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரணைதீவில் தம்மை மீள்குடியமர்த்துமாறு கோரி கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் சுழற்சி முறையிலான போராட்டத்தைப் பாதிக்கப்பட்ட மக்கள் நடத்துகின்றனர்.

இது தொடர்பாக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள கொன்லஸ் என்பவர் தெரிவித்ததாவது," நாங்கள் இன்றுடன் (நேற்று) 46 ஆவது நாளாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். இரணைதீவு மக்களாகிய எங்களை எமது சொந்த இடத்தில் மீள்குடியமர்வு செய்து, எமது வாழ்வாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு பெற்றுத் தர வேண்டும்." என்றார்.

(ஐ-6)

## ஞானசாரதேரருக்கு பிடியாணை உத்தரவு

கொழும்பு, ஜூன் 16

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரைக் கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்று நேற்று பிடியாணை உத்தரவைப் பிறப்பித்தது. இரு தடவைகள் வழக்குகளில் ஞானசார தேரர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# இலண்டன் நீதிமன்றால் இலங்கையர்களுக்குச் சிறை

கொழும்பு, ஜூன் 16

இலண்டனில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் இலங்கை இளைஞர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

லண்டன் நீதிமன்றில் நேற்று இந்த தீர்ப்பு விதிக்கப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டன் மிச்சம் என்ற பகுதியில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்களுக்கு இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அந்தக் கருத்து முரண்பாடு இருகுழுக்களுக்கிடையில் மோதலாகியுள்ளது. இதன் போது 26 வயதுடைய இளைஞர் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து லண்டன் உயர் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில் இலங்கையைச் சேர்ந்த பிரசாத் சோதிலிங்கத்துக்கு 29 ஆண்டுகளும், சுகன் செல்வராசனுக்கு 14 ஆண்டுகளும், சிவாகரனுக்கு 31 மாதங்களும், விசுபரன் தயாபரனுக்கு 21 மாதமும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

(ஐ-10)

# தீர்வின்றித் தொடரும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களால் முன்னெடுக்கும் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் தீர்வின்றித் தொடர்ந்தவண்ணம் உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உரிய தீர்வை அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். வடக்கு மாகாணம் உட்பட கிழக்கிலும் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 100 ஆவது நாளை எட்டியுள்ளது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் மூன்று மாதங்களைக் கடந்துள்ள நிலையில், தொடர்ந்து இடம்பெற்று வருவதுடன் இதுவரை எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படவில்லை என்று உறவினர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

(ஐ)




மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல நகரப் பிரதேசங்களிலும் 'சிறுவர் பாதுகாப்பு ஆபத்தில்' எனும் தலைப்பிட்டு பரவலாகப் பெரிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஊழியர் சங்கத்தினால் ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டிகளில் 'சிறுவர் பாதுகாப்பு ஆபத்தில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் சகல ஊழியர் பிரச்சினைகளையும் உடன் தீர்ப்பீர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-46)

# உழவு இயந்திரம் குடைசாய்ந்ததில் 20 பேர் காயம்

கொழும்பு, ஜூன் 16

லிந்துலை மட்டுக்கலைச் சந்தியில் உழவு இயந்திரம் ஒன்று குடைசாய்ந்ததில், அதில் பயணித்த 20 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. தேயிலை மலைக்குத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரமே குடைசாய்ந்து. விபத்தில் காயமடைந்தவர்கள் லிந்துலைப் பிரதே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(ஐ)

# நானுஓயாவில் பெரும் பதற்றம்

## சிறுமியின் சாவை அடுத்து வாகனத்துக்கும் தீவைத்தனர் மக்கள்





நுவரெலியா, ஜூன்16
பாதசாரிக் கடவையால் சாலையைக் கடக்க முற்பட்ட 7 வயது பாடசாலை மாணவிமீதுகனரகவாகனம் மோதியது. அந்த விபத்தில் சிறுமி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தை அடுத்து நானுஓயாவில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் கொந்தளித்து விபத்தை ஏற்படுத்திய வாகனத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்தச் சம்பவம் நேற்று நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயாநகரத்தில்இடம்பெற்றது. ரதல்லகீழ்பிரிவைச் சேர்ந்த ஆக்காஷா தேவ்மிணி என்ற 7 வயதுச் சிறுமியே சம்பவத்தில் உயிரிழந்தார்.

நுவரெலியா தலவாக்கலைநோக்கிசென்றகனரகவாகனமேசிறுமியை மோதியுள்ளது.

பிரதேச வாசிகளும், தோட்ட மக்களும் இணைந்து பிரதான சாலையைஇடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பந்தப்பட்டகனரக வாகனத்துக்குப் பொது மக்கள் தீ வைத்தனர். சம்பவத்தைபார்வையிட வந்த நுவரெலியா மாவட்ட நீதிவானையும் பொதுமக்கள்அனுமதிக்கவில்லை.

பொலிஸார் உரிய நேரத்தில் பாதசாரிக் கடவையில் கடமையில் ஈடுபட்டிருந்தால் இதுபோன்ற துக்ககரமான நிகழ்வு இடம்பெற்றிருக்காது என்று அந்தப் பகுதி மக்கள்தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர்.

சிறுமி உயிரிழப்புடன் சம்பவ இடத்தில் கலவரம் ஏற்பட்டதால், அங்கு பதற்ற நிலை நிலவி வருகின்றது. நிலைமையைக் கட்டுப்பட்டுத்துவதற்கு சிறப்பு அதிரடி படையினர், பொலிஸார், இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தால் ஹற்றன் நுவரெலியா ஊடான பொதுப் போக்குவரத்து பல மணி நேரம் முற்றாக தடைப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

## சங்காபிசேகம்

தென்மராட்சி, ஜூன்16
கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின் சங்காபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை8மணிதொடக்கம்இடம்பெறும். இணைந்த ஆலயங்களான பஞ்சமுகப் பிள்ளையார் இராமலிங்க சுவாமிகள்பார்வதவர்த்தினி அம்பாள் சிவகாமி அம்பாள் சமேத சிதம்பர நடராஜர் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் தட்சணாமூர்த்தி பூலட்சுமி மகாலட்சுமி சமேத மகா விஷ்ணு ஆகியோருக்கு108சங்காபிசேகம் இடம்பெறும். (ஐ-9)

## பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன்14
கொழும்புத்துறைமேற்குவிநாயகர் ஆலயத்தின் தேரடிப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமைநடைபெறும். மாலை 5 மணிக்கு சிறப்புப் பூசைகள்வழிபாடு இடம்பெற்று பொங்கல் இடம்பெறும். என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## இருவர் காயம்

தென்மராட்சி, ஜூன்16
சந்தைக்கு விளைபொருள்களுடன் மோட்டார் சைக்கிளில் சென்றவரை வாகனம்மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கைதடியில் இடம்பெற்றது.

காயமடைந்த 76 வயது முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அதேவேளை வகுப்பில் தன்னைத் தாக்கிய சக மாணவனைக்கல்லால்எறிந்துகாயப்படுத்தினார் மற்றொரு மாணவன். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரியில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றது. தரம் 11 வகுப்பில் கற்கும் மாணவன் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## கிழக்கு மாகாணத்தில் 259 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

மட்டக்களப்பு, ஜூன்16
கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டன. கிழக்கு மாகாண கல்வியமைச்சர்எஸ்,தண்டாயுதபாணிதலைமையில் திருகோணமலைஉவர்மலைவிவேகானந்தாபாடசாலையின் விவேகானந்தா கலையரங்கத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது,

சிங்களம் தமிழ் மற்றும் வரலாறு உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கான நியமனங்கள் கிழக்கு முதலமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டன. பட்டம் பெற்ற 259 பட்டதாரிகள் ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொண்டனர்,



முன்னர்வழங்கப்பட்ட நியமனங்களின்போதுபோட்டிப் பரீட்சைமற்றும்நேர்முகப்பரீட்சையில்வரலாறுபாடத்தில் தோற்றி சித்தியடைந்தும் வெற்றிடங்கள் இன்மையால் நியமனங்கள் வழங்கப்படாதிருந்தவர்கள், மற்றும் குறைந்த வெட்டுப்புள்ளிகளைப் பெற்றவர்கள் ஆகியோருக்கானவெட்டுப்புள்ளிகளைக்குறைத்துஇந்தநியமனங்கள்வழங்கப்பட்டன. (ஐ-10, 46)

## மட்டு. மாவட்டச் செயலகத்தில் கொடிதின நிகழ்வு ஆரம்பம்



மட்டக்களப்பு,ஜூன்16
தேசிய இந்து சமய அறநெறிக கல்வி விழிப்புணர்வு வாரத்தின், கொடி தின நிகழ்வுகள்மட்டக்களப்புமாவட்டச்செயலகத்தில்மாவட்ட மேலதிகசெயலர்எஸ். கிரிதரன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜீ.ஸ்ரீநேசன், சி.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கெரண்டனர். அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. அறநெறிக் கல்வி ஊக்குவிப்புக்கான கொடிவாரத்தின் மூலம் நிதி சேகரிப்புக்களும் நடைபெற்றன.

"சிறுவர்கள் அறநெறி, ஒழுக்க விழுமியங்களுடன் வளர்ந்து வந்திருந்தால் மூதூரில் அறநெறி வகுப்புக்களுக்குச் சென்ற சிறுவர்கள் மீதுகைவைத்திருக்கமாட்டார்கள். அறநெறிக்கருத்துக்கள், அறநெறிவகுப்புக்கள் என்பவை முக்கியமானவை என்று நாடாளுமன்றஉறுப்பினர்ஜீ.ஸ்ரீநேசன்தெரிவித்தார்.

" அறநெறிக்கல்வியானது ஒரு மனிதனின் வாழ்க்கையின் ஒழுக்கத்துக்கு மிக முக்கியமானதாக இருக்கிறது. அறநெறிக் கல்வி சரியான முறையில் வழங்கப்படாமை காரணமாகவேவன்முறைகளும்பிரச்சினைகளும் தோன்றுகின்றன. இதனைச் சரியான வழிமுறைப்படுத்தவதற்காக எதிர்வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இதற்கான முன்மொழிவுவைக்கப்பட்டுதீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-10,46)

## கிழக்குப்பல்கலைக்கழகத்தின் 21 ஆவது பொதுப்பட்டமளிப்பு

மட்டக்களப்பு,ஜூன்16
கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 21 ஆவது பொதுப் பட்டமளிப்பு வந்தாறுமூலை வளாக, நல்லையா மண்டபத்தில்நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை காலை8.30 மணியிலிருந்து மாலை வரை நடைபெறும் என்று பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் கலாநிதி தங்கமுத்து ஜயசிங்கம்தெரிவித்தார். கிழக்குப்பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு,வந்தாறுமூலைமற்றும்திருகோணமலை ஆகியவளாகங்களைச்சேர்ந்தஉள்வாரிமற்றும்வெளிவாரி பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த 852 பேர் இதன் போதுபட்டம்பெறவுள்ளனர். கலைகலாசாரத்துறையில் கற்ற 450 பேரும், மருத்துவத்துறையில் கற்ற 50 பேரும், விவசாயத்துறையில் கற்ற11பேரும், சித்தமருத்துவத் துறையில் கற்ற10 பேரும்பட்டம்பெறவுள்ளனர். அதேவேளை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, பல்கலைக் கழகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் கறுப்புக் கொடிகளைக் கட்டி, பந்தல் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-46)

## மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகள் களப்பயணம்

தென்மராட்சி, ஜூன்16
தென்மராட்சிக் கல்விவலய மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இலங்கை நாடாளுமன்ற அமர்வுகளைப் பார்வையிட நாளை சனிக்கிழமை சாவகச்சேரியிலிருந்து புறப்பட்டுச் செல்கின்றனர். வலய மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகள்50பேர்உட்பட வலயஅதிகாரிகளும் செல்லவுள்ளனர். நடுவண் கல்வி அமைச்சின் சமூக ஒருங்கிசைவு சமாதான நோக்குடனான அனுபவப் பகிர்வு திட்டத்தின் கீழ் களப் பயணத்தை மேற்கொள்ளும் வலய மாணவர் நாடளுமன்றப் பிரதிநிதிகள் எதிர்வரும் திங்கட்கிழமை கேகாலை மாவட்டத்திலுள்ள ஹெட்டிமுல்லபண்டாரநாயக்காமகாவித்தியாலய மாணவர் நாடாளுமன்ற அமர்வைப் பார்வையிடுவர். மறுநாள் நடுவண் நாடாளுமன்ற அமர்வுகளைப் பார்வையிடும் மாணவர்கள் அலரி மாளிகை மற்றும் நடுவண் கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கும் சென்று, அனுராதபுரம் புனிதப் பிரதேசத்தையும் பார்வையிடுவர் என்று வலயக்கல்விப்பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (ஐ-9)

## மருதமடுக்குளத்துக்குள் 2லட்சம் இறால் குஞ்சுகள்

முல்லைத்தீவு, ஜூன் 16
நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதுக்குடியிருப்பு மேற்கு மருதமடுக்குளத்தில் 2 இலட்சம் இறால் குஞ்சுகள் நேற்று விடப்பட்டன.

மருதமடுக்குளத்தில் 45 குடும்பங்கள் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின்வாழ்வாதாரத்தைமேம்படுத்தும் நோக்குடன் கடந்த மாதம் பேரண்டினா நிறுவனத்தால் ஒரு இலட்சம் மீன்குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டன. அதனைத் தொடர்ந்து டிபறோன் நிறுவனத்தால்இரண்டுஇலட்சம்இறால் குஞ்சுகள் நேற்று குளத்தில் விடப்பட்டன. இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவையாளர், அபிவிருத்திஉத்தியோகத்தர். பொதுமக்கள்கலந்துகொண்டனர். (ஐ-7)



## பல்கலை. ஆசிரியர் சங்கம் கடையடைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம் ஜூன் 16

தமிழ் மக்கள் பேரவையால் இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ள கடையடைப்பு போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகச் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போருக்குப் பின்னரான சூழ்நிலையில் குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபைக்குள் பிரவேசித்து தமது அரசியலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வடக்கு மாகாண சபையில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் அதிர்ச்சியையும் வேதனையையும் தருவதாக அமைகின்றது. இந்த ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்வுகளைக் கல்விச் சமூகம் என்ற வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையான கண்டனத்தை தெரிவிக்கின்றது.

குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபையைப் பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில் கொண்டு இயக்க வேண்டிய சூழல் இருந்து வந்தது. இந்த வகையில் வடக்கு மாகாண சபைக்குத் தெரிவான மக்கள் பிரதிநிதிகள் தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு தாம் ஏன் தெரிவு செய்யப்பட்டார் என்ற நோக்கம் அறியாது அதிகார முறைகேடுகளிலும் மோசடியிலும் ஈடுபட்டனர். ஆளும் தரப்பினாலேயே இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து சுயாதீனமான விசாரணைக் குழு முதலமைச்சரினால் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையும் வெளியிடப்பட்டது. முதலமைச்சரின் நடவடிக்கை இயற்கையின் நியாயாதிக்கச் செயற்பாட்டுக்கும் ஏற்றதொன்றாகவே அமைந்துள்ளதென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கருதுகின்றது. தமிழ் மக்கள் பேரவையால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு எமது முழுமையான ஆதரவை தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (வ-8)

## தபாலக சேவைகள் நேற்று வழமைக்கு

தென்மராட்சி, ஜூன் 16

தபால் திணைக்களத்தின் பணிப்புறக்கணிப்பு முடிந்த பின்னர் தபாலகப் பணிகள் நேற்று வழமைக்குத் திரும்பியது. ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி நேற்றுடன் நிறைவு பெறுவதால், பெருமளவு பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தபாலகங்களில் அனுப்பி வைத்ததைக் காண முடிந்தது. அத்துடன் பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரும் தபாலகங்களில் பெருமளவில் காணப்பட்டனர். (ஜ-9)

# உறவுகளை மீட்பதற்காக கடலில் இறங்கிப் போராட்டம்



திருமலை, ஜூன் 16

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகவுள்ள கடலில் இறங்கி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக 104 ஆவது நாளாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்துக்குத் தீர்வு கிடைக்காத காரணத்தால் அவர்கள் கடலில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



"சிறுபான்மை மக்களின் வாக்குகளால் ஆட்சிக்குவந்தநல்லாட்சிஅரசேஎங்கள்பிள்ளைகள்களை மீட்டுத் தா, கடத்தப்பட்டவர்கள் கொள்ளப்படவில்லை அவர்கள் உயிருடனே உள்ளனர். கடத்தியவர்களையும் எங்களுக்குத் தெரியும். அரசே! எங்கள்பிள்ளைகளைஎங்கள்கணவன்மார்களை உடனேவிடுவித்துவிடு" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அழுது புரண்டனர்.

"நாம்இதுவரைகாலமும்முன்னெடுத்தபோராட்டத்துக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. அரசியல்வாதிகள், அதிகாரிகள்எவரும்எம்மைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. எமது போராட்டத்துக்குநியாயமானதீர்வை அரசுபெற்றுக்கொடுக்கவேண்டும். காணாமல்ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகத்தீர்க்கமான பதிலை அரசு வழங்க வேண்டும்." என்று போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் திருகோணமலை, வவுனியா மாவட்டங்களைச்சேர்ந்த 150 இற்கும்மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் கலந்துகொண்டனர். (ஜ-45,40)

## ஞனசாரருக்கு பிடியாணை

கொழும்பு, ஜூன்16

பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதி ராகக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இனமுரண்பாடுகளைத் தோற்று வித்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட் டுள்ள ஞானசார தேரருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அவரை முன்னிலையாகுமாறு நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்தும் உதாசீனப்படுத்தி வந்த நிலையில், நேற்று இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இன ரீதியான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளைப் பொதுபலசேனா முன்னெடுத்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்ததையடுத்து, அதன் பொதுச் செயலாளரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

எனினும், ஞானராச தேரரின் உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், அதனால் அவர் மறைந்து வாழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த-ய)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## ஐங்கரநேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரைத்திருந்த அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன் மற்றும் த.குருகுலராசா ஆகியோரை, தமது பதவிகளை தியாகம் செய்யுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கோரியிருந்தார்.

இவர்கள் தமது பதவி விலகல் கடிதங்களை நேற்று மதியத்துக்குள் வழங்க வேண்டும் எனவும் முதலமைச்சர் கேட்டிருந்தார். இந்த நிலையிலேயே, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தனது பதவி விலகல் கடிதத்தை, முதலமைச்சரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)

## பிரிகேடியர்...

தளபதி நடைமுறைப்படுத்தவில்லை என்பது தெரியவந்துள்ளது.

2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி ரதுபஸ்வெலவில் சுத்தமான குடிதண்ணீர் கோரிப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். இதில் 3 பேர் உயிரிழந்ததுடன் 33 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்து ஐந்து நாள்களில், இராணுவத் தளபதி ஆறு பேர் கொண்ட இராணுவ நீதிமன்றத்தை அமைத்து விசாரணை நடத்த உத்தரவிட்டிருந்தார்.

இராணுவ நீதிமன்றத்தின் விசாரணைகளில், துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்ட பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு அவரைப் பதவியிறக்கம் செய்யுமாறும் இராணுவ நீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது.

எனினும், பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன மீது இராணுவத் தளபதி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் ரத்துபஸ்வெல துப்பாக்கிச்சூடு தொடர்பான வழக்கு கம்பகா நீதிவான் மன்றத்தில் விசாரணைக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு பற்றிய விவரங்கள் தெரியவந்தன.

அதேவேளை, விசாரணைகளின் முடிவில் பிரிகேடியர் குணவர்த்தனவை ஜூன் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த-ய)

## அடாவடிக்...

முடியாது. இவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை வவுனியா மாவட்ட இளைஞர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்" என்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பில் சுட்டிக்காட்டினார்.

2013ஆம் ஆண்டு ஜூன் 16ஆம் திகதியன்று 6 பேர் அடங்கிய இளைஞர் குழு பயணித்த முச்சக்கர வண்டி பொலிஸாரால் சோதனையிடப்பட்டது. அதன் சாரதியிடம் சாரத்திய அனுமதிப் பத்திரம் இல்லை என்பது கண்டறியப்பட்டது. அதனால் துவிச்சக்கர வண்டி பொலிஸாரால் சோதனையிடப்பட்டது. அந்தக் கும்பல் வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் நோக்கிப் பயணித்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அவர்களிடமிருந்து பொல்லுகள், வாள்கள், கத்திகள் மற்றும் கைக்குண்டு என்பனவும் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், முச்சக்கர வண்டியில் பயணித்த பிரான்சிஸ் தர்சன் (வயது -27), சதாசிவம் நிறஞ்சன் (வயது- 23), சிவலிங்கம் உதயசூரின் (வயது- 29), ஜெயக்குமார் யதுகுமார் (வயது- 22), சிவலிங்கம் உதயன் (வயது -22) தர்மலிங்கம் சுபராஜ் (வயது -26) ஆகியோர் அபாயகரமான ஆயுதங்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக வவுனியா நீதிவான் மன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அவர்கள் 6 பேரும் 9 மாதகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வழக்கு விசாரணைகளின் பின்னர் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இந்த வழக்கு சட்டமா அதிபரால் கடந்த வருடம் ஜூலை 22ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களை உடமையில் வைத்திருந்தார்கள் என்ற குற்றஞ்சாட்டப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன. தீர்ப்புக்காக நேற்று வழக்கு நியமிக்கப்பட்டது.

"கடந்த இரண்டு வருடங்களாக வவுனியாவில் இளைஞர்கள் மத்தியில் வாள் வெட்டு அடிதடி போன்ற சமூகவிரோத செயல்கள் வெகுவாக இடம்பெற்று வருகின்றன. இதனால் பாதிக்கப்படும் மக்கள் சாதாரண அப்பாவிகளே. இதற்கு எந்தவொரு இடத்திலும் நியாயம் கிடைப்பதில்லை. இந்தக் காரணத்தின் அடிப்படையில் இந்த எதிரிகளுக்குத் தண்டனை வழங்கவேண்டும். இந்தச் சம்பவத்திலே குறித்த தினம் இந்த எதிரிகளைப் பொலிஸார் தடுக்காமல் இருந்திருந்தால் இவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று எவருக்கும் தெரியாது. இந்த எதிரிகள் ஆயுதங்களுடன் சென்று என்ன மன நிலையில் துணிந்து சென்றிருப்பார்கள் என்று புரிகின்றது" என்று மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பில் சுட்டிக்காட்டினார்.

எதிரிகள் கைக்குண்டு ஒன்றை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டை வழக்குத் தொடுநர் தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபித்த காரணத்தால் எதிரிகள் 6 பேரையும் மன்று குற்றவாளிகளாக இனங்காண்கின்றது என்று மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

"குற்றவாளிகள் ஒவ்வொருவருக்கும் 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. 6 பேரும் தலா 10ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும்" என்றும் மன்று தண்டனைத் தீர்ப்பளித்தது.

இந்தத்தீர்ப்பினை நீதிபதி வழங்கியவுடன் எதிரிகள் ஆறுபேரும் அழுது புலம்பியதுடன் எதிரிகளுடைய உறவினர்களும் சத்தமிட்டு அழுது புலம்பினார்கள். நீதிமன்றுக்கு வெளியே உறவினர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களை அந்த இடத்திலிருந்து பொலிஸார் வெளியேற்றினர். வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். (வ)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன் 16
சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கான நெறி முறைசார் அறிக்கையிடல் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமையும், நாளைசனிக்கிழமையும்யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் செயலமர்வில் கலந்து கொள்ளலாம், செயலமர்வில் கலந்துகொள்பவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிரந்தரக் கட்டடம் கல்லடியில் திறப்பு

மட்டக்களப்பு,ஜூன் 16
மட்டக்களப்பு கல்லடியில் அமைக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்துக்கான நிரந்தரக் கட்டடம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டது. யுனிசெப் நிறுவனத்தின் 6 மில்லியன் ரூபா நிதியுதவியில் கல்லடியில் அமைக்கப்பட்ட கட்டடத்தை தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சர் நிறோஷன் பெரேரா திறந்தார்.



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் காலீதீன் ஹமீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பௌலா புலசியா, கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர்அலி, தமிழ் தேசிய கூட்டமைப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வ ரன்,ஞ. ஸ்ரீநேசன், ச.வியாழேந்திரன், அலி ஸாஹிர் மௌலானா கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## திருவள்ளுவர் உருவச்சிலை திரைநீக்கம்

தென்மராட்சி, ஜூன் 16
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள தென்மராட்சிப் கலைமன்றக் கலாசார மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் உருவச்சிலை திரைநீக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும். தென்மராட்சிக் கலைமன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் திருவள்ளுவர்உருவச்சிலையைத் திரைநீக்கம் செய்து வைப்பார். (ஐ -9)

# சூனியத்தால் என்னை எங்கும் விரட்ட முடியாது

## அரச தலைவர் பதிலடி

கொழும்பு,ஜூன் 16
சூனியத்தால் ஆட்சியிலிருந்து ஒரு போதும் என்னை விரட்ட முடியாது. அதற்கெல்லாம் ஒரு போதும் நான் அஞ்சமாட்டேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். சுயாதீன தொலைக்காட்சியின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பத்தரமுல்லையில் ஐந்து மாடிகள் கொண்ட கட்டடத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைத்து உரையாற்றிய போதே அரச தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
"நாட்டின் வரலாற்றில் அரச ஊடகத்தை மிகவும் மோசமான ஒழுக்கமற்ற ரீதியில் பயன்படுத்திய ஒரு காலத்தில் தான் நான் பொது வேட்பாளராகப் போட்டியிட்டேன். நான் நினைக்கின்றேன் இந்த நாட்டின் எந்தவொரு அரச தலைவர் வேட்பாளரும் என்னைப்போன்று சவால்களுக்கு முகங்கொடுத்திருக்க மாட்டார்கள் என்று. ஊடகங்கள் இந்த நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தக்கூடிய சிறந்த கருவி. அதனை மனதில் கொண்டு செயலாற்றுமாறு நான்



கேட்டுக்கொள்கின்றேன்.
இன்றும் எனக்கு எதிராக அநுராதபுரத்தில் சூனியம் செய்யப்பட்டுள்ளது என்று கேள்விப்பட்டேன். இன்னும் எனக்கெதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது தெளிவாகின்றது. ஆனால் நான் இதற்கெல்லாம் அஞ்சமாட்டேன். அநுராதபுரத்தில் சூனியம் வைத்துள்ளார்கள் என்றால், அதனை யார் வைத்திருப்பார்கள் என எல்லோருக்கும் தெரியும்" என்றார். (ஐ)

## வே. பாலசுப்பிரமணியம் நினைவுப்பேருரை நாளை


யாழ்ப்பாணம்,ஜூன் 16
அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் வே.பாலசுப்பிரமணியத்தின் 25 ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் நினைவுப் பேருரை நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் தே.ம.சுவாமிநாதனும், சிறப்பு விருந்தினராக மாமன்றத்தின் அறங்காவலர் சபைப் பிரதித் தலைவர் தெ.ஈஸ்வரனும் கலந்து கொள்வர். வே.பாலசுப்பிரமணியம் நினைவுப்பேருரையை தமிழ்நாட்டைச் சேர்ந்த கி.சிவகுமார் 'ஆறுமுகனும் அறுபடை வீடும்' என்ற தொனிப்பொருளில் நிகழ்த்துவார். (ஐ)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, ஜூன் 16
மிருசுவில் அ.த.க .பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமைபிற்பகல்1.30மணிக்குப்பாடசாலை முதன்மை மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் ஐ.தேவஈஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக லங்கெம் நிறுவன சிரேஷ்ட பொறியியலாளர் த.விஜயானந்தன், தென்மராட்சிக் கல்வி வலய சைவ சமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ -9)

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ்ப்பாணம் நீர்வேலி றோ.க.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்று பாடசாலைச் சமூகம் அறிவித்தது.
நிகழ்வின் முதன்மை விருந்தினராக நீர்வேலி நலன்புரிச் சங்கத்தின் முன்னாள் தலைவர்வரும் பாடசாலையின் பழைய மாணவருமான கோபாலசிங்கம் ஜீவா கலந்து சிறப்பிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)



மட்டக்களப்பு பெரியபோரதீவு சிறி முத்துவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமானது. சிவஸ்ரீ மோஹன் சிவாச்சாரியர் தலைமையில் மங்கள வாத்தியங்கள் முழங்க பக்தர்களின் அரோகர ஓசையுடனும் பூர்வாங்கக் கிரியைகளுடனும் கொடியேற்றம் இடம்பெற்றது. (ஐ - 46)

## சமுர்த்தி உத்தியோகத்தர் இருவர் இடையே மோதல்

வவுனியா, ஜூன் 16
வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் இரு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்டப்பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
"நெடுங்கேணி சமுர்த்தி வங்கியில் பணிபுரியும் சக உத்தியோகத்தர் ஒருவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு வர்த்தக நிலையத்துக்குச் சென்று குளிர்பானம் அருந்தி விட்டு மதிய உணவு நேரத்தில் சக உத்தியோகத்தர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார். திடீரென அந்த இடத்துக்கு வருகை தந்த இன்னொரு சமுர்த்தி உத்தியோகத்தர் திருநாவுக்கரசு சுதாகரன் (வயது 38) என்பவரைத் தாக்கியுள்ளார். சம்பவத்தில் காயமடைந்த சமுர்த்தி உத்தியோகத்தர் நெடுங்கேணி மருத்துமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ -10)

# இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்திக் குழு ஆரம்பம்

உடுவில், ஜூன் 16
உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின், நலன்சார் நடவடிக்கைகளுக்காக இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்திக் குழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
உடுவில் பிரதேச செயலக இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில், சுன்னாகம் கதிரை மலைச் சிவன் ஆலய திருமணமண்டபத்தில் இந்த ஆரம்ப நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றிருந்தது.
உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 22 அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர்களும், ஆலய நிர்வாகத்தினரும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டிருந்தனர்.
இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்திக் குழுவின் நோக்கம், செயற்றிட்டம் தொடர்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி தர்ப்பனா சுதர்சனும், பொ. சந்திரவேலும் கருத்துரை வழங்கியிருந்தனர்.
வடக்கு மாகாணக் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ரஜனி நரேந்திராவும் அறநெறிக் கல்வியின் அவசியம் பற்றிக் கருத்துரை வழங்கியிருந்தார். இதனைத் தொடர்ந்து நடப்பு வருடத்திற்குரிய இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர் ந.பரமேஸ்வரன், உப தலைவர் திருமதி.சிவசக்தி சோமநாதன், செயலாளர் பா.தபோதரன் , இவர்களுடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக எம்.பி. ஸ்ரீந்திரன் , சோ.பரந்தாமன், சி.சிவகுமாரன், செல்வி நர்மதா, த. அனோஜ்குமார், திருமதி ரி. வாசுகி, திருமதி ரி. ரங்கேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
இந்தக் குழுவின் போசகராக உடுவில் பிரதேச செயலர் திருமதி மதுமதி வசந்தகுமார் பதவி வழியில் செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-28)

# கூட்டணியின் தலைமையை விக்கி ஏற்கவேண்டும்

## ஆனந்தசங்கரி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

எல்லோரையும் ஒன்றிணைத்துப் புனிதமான அரசியலுக்குத்தமிழர்விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து தலைமை தாங்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனைக் கேட்டுக் கொள்வதாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள பத்திரிகைஅறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்குமாகாணமுதலமைச்சர்சி.வி. விக்னேஸ்வரனுக்குஎதிராகஎடுக்கப்படும் நடவடிக்கைகளை கூட்டணி வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன், முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அரசியலுக்கு வந்தது ஒரு வரப்பிரசாதமென நான் ஏற்கனவே கூறியிருந்தேன். சகல அமைப்புக்களையும் ஒன்றிணைத்து எமது கட்சிக்குத் தலைமை தாங்கும் படியும் கேட்டிருந்தேன். அதற்கு நன்றி தெரிவித்த விக்னேஸ்வரன், நீங்கள் ஒற்றுமையாக செயற்படுங்கள் என்று கூறியிருந்தார்.

தற்போது அதற்கான சந்தர்ப்பம் வந்துள்ளது. எல்லோரையும் ஒன்றிணைத்து ஒரு புனிதமான அரசியலுக்கு எமது கட்சியுடன் இணைந்து தலைமை தாங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். முதலமைச்சருக்கு எதிராக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாக கண்டிக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி நேற்று மாலை சந்திப்பு நடத்தின. இதன்போது வடக்கு முதலமைச்சருக்குஎதிராகஎடுக்கப்படும்நடவடிக்கைகளைக் கண்டிப்பதாகவும் அவற்றை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

'அரசமைப்புஉருவாக்கமுயற்சிநடக்கும் முக்கிய கால கட்டத்தில் வடக்கு மாகாண சபையின் குழப்ப நிலை பாரதூரமான விளைவுகளைஏற்படுத்தும்'என்றுவவுனியாவளாக ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராகஇலங்கைத்தமிழ்அரசுக்கட்சி எடுத்திருக்கும்அரசியல்பழிவாங்கல் நடவடிக்கையைமுற்போக்குதமிழ்த் தேசியக் கட்சி கண்டிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர்மேற்கொள்கின்றநடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும்என்றுரெலோஅமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

(வ-5-402)

# உடலையும் உடமையையும் தானமாக வழங்கினார் பெண்

## உடலம் மருத்துவ பீடத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 16

தனித்து வாழ்ந்து வந்த பெண்ணின் விருப்பப்படி, அவர் இறந்தபின்னர் அவரது உடமைகள் சிவபூமி நிலையத்துக்கும், கண்கள், கண்பார்வை யற்ற வருக்கும், உடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக் கும் தானமாக வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் மணல்தறை ஒழுங்கையை சேர்ந்த செல்வி வைத்தியலிங்கம் கனகேஸ் வரி (வயது-68) என்பவரே இவ் வாறு தானம் செய்தார்.

தான் உயிரிழந்த பின்னர் தனது உடல்,உடமைஆகியவற்றை இவ்வாறு தானம் செய்யப்பட வேண்டும் என்று உயிருடன் இருக்கும்போதே எழுத்து மூலமாக உறுதியுரை வழங்கியிருந்தார். அண்மையில் கடுமையாக நோய்வாய்ப்பட்டபோதும் தனது சொந்தக் வீட்டிலேயே வசித்து வந்தார். அவர் கடந்த வாரம் உயிரிழந்தார். அவரது உறுதியுரையின்படி அவரது உட மைகளும் உடலும் தானமாக சிவபூமி இல்லத்தினராலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினராலும் கண்களை கண்பார்வையற்ற ஒருவரும் பெற்றுக்கொண்டனர். அவரது இறுதி விருப்பத்துக்கு அமைய உடலம்யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் கையளிக்கப்பட்டது.

(4-101)

# கூட்டமைப்பு கட்சிகளுடன் இணைந்தே பயணிப்போம்

## *முற்போக்குக் கூட்டணியின் தலைவர் விளக்கம்*

கொழும்பு, ஜூன் 16

கூட்டமைப்புக் கட்சிகளுடன் இணைந்தே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பயணிக்கும் என்று அதன் தலைவரான அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மையச் செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதன்போது சகல மாவட்டங்களிலிருந்தும் அரசியல் இணைப்பாளர்களை இணைத்துக்கொள்வதற்குரிய பணியை ஆரம்பிப்பது பற்றி இறுதி முடிவெடுக்கப்படும்.

இந்நிலையில், வடக்கு, கிழக்கிலும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தனித்துச் செல்லுமா? என்பது பற்றி விளக்கிய அவர், "வடக்கு கிழக்கு மாகாணங்களில் எம் பயணம் எப்போதும் போல் கூட்டமைப்புக்கட்சிகளுடன் இணைந்தே இருக்கும். தமிழர்களைத் துண்டு துண்டாகப் பிரிப்பதில் எமக்கு உடன்பாடு இல்லை" என்றார்.

(து)

# சைவநெறிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே சைவநெறிப் பரீட்சையை நடத்துவதற்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

நல்லைக் குமரன் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு, மாணவர்களின் சைவ சமய அறிவை விருத்திசெய்யும் நோக்குடன் தரம் 6 – 11 வரையான மாணவர்களுக்கு இந்தப் பரீட்சையை நடாத்தத் தீர்மானித்துள்ளதாக சைவ சமய விவகாரக் குழுத் தலைவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை வலிகாமம் , யாழ்ப்பாணம், தீவகம், வடமராட்சி , தென்மராட்சி ஆகிய கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவால் கல்வி வலயங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதிபர்கள் இந்த விண்ணப்பப்படிவங்களை முழுமை செய்து எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் தலைவர், சைவ சமய விவகாரக் குழு, மாநகர சபை, பருத்தித்துறை நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. இலவசமாக நடத்தப்படும் இந்தப் பரீட்சையில், வகுப்பு ரீதியாக அதிகூடிய புள்ளிகளைப் பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு சன்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

நல்லைக்குமரன் மலர் வெளியீட்டின் போது சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கும் வைபவம் இடம் பெறும். வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் அனுமதியுடன் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையானது பாடசாலைப் பாடத்திட்டத்துக்கு அமைவாகவும், சிறப்பாக நல்லூர் கந்தன் ஆலயம் பற்றியதாகவும் அமையும் என தெரிவிக்கப்பட்டது.

(வ-28)

# சிறுவர்கள் மீது பாலியல் துர்நடத்தை; சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி,ஜூன் 16

கிளிநொச்சி – முல்லையடிப் பகுதியில் பல சிறுவர்கள் மீது பாலியல் துர்நடத்தை மேற்கொண்ட குற்றச் சாட்டு க்காகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை மேலும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லையடிப் பகுதியில் வசித்து வந்த நபர் ஒருவர் பல சிறுவர்களை பாலியல் துர்ந டத் தைக்கு உட்படுத்துகி றார் என பொலிஸாருக்குத் தகவல் கிடைத்த நிலையில், குறித்த நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் பொலிஸார் நேற்று முற்படுத்தினர். அதன்போது சந்தேகநபரை மேலும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

(ஜ)

# லண்டன் தீவிபத்து: இலங்கையருக்கு பாதிப்பு இல்லை

கொழும்பு, ஜூன் 16

லண்டனில் குடியிருப்புத் தொகுதியில் ஏற்பட்ட தீவிபத்தால் இலங்கையர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் லண்டனில் வாழும் இலங்கை மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனப் பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் கூறியுள்ளார் என அறிக்கையொன்றினூடாக அயலுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

(து)

# அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 16

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை 108 சங்கு முழுக்குடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 108 சங்கு முழுக்குடன் திருவிழா நடைபெற்று அன்றைய தினம் இரவு சுவாமி நகர் வலம் வருவார்.

(ஜ-9)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 80 | 60 |
| கத்தரி | 140 | 140 | 100 | 140 | 150 |
| கரட் | 250 | 300 | 280 | 280 | 320 |
| மரவள்ளி | 60 | 80 | 55 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 80 | 50 | 120 | 120 |
| பாகல் | 160 | 200 | 140 | 160 | 180 |
| கருணைக்கிழங்கு | 140 | | 100 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 260 | 350 | 280 | 300 | 180 |
| பூசணி | 80 | 100 | 60 | 90 | 80 |
| தக்காளி | 160 | 160 | 130 | 150 | 160 |
| வாழைக்காய் | 60 | 80 | 30 | 40 | 60 |
| கீரை | 20 | 30 | 15-25 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 15 | 30 | 30 |
| பச்சை மிளகாய் | 300 | 400 | 400 | 400 | 320 |
| புடோல் | 140 | 100 | 50 | 100 | 80 |
| கோவா | 140 | 200 | 140 | 240 | 160 |
| வெண்டி | 120 | 120 | 70 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 240 | 180 | 140 | 200 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 140 | 120 |
| தேங்காய் | 70 | 60 | 50-60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 400 | 220 | 160 | 280 |
| இராசவள்ளி | 200 | - | 300 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 160 | 150 | 150 | 150 | 140 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 500 | 500 |
| கணவாய் | 800 | 700 | 800 | 1000 |
| பாரை | 600 | 700 | 700 | 1000 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 500 | 700 |
| விளை | 500 | 500 | 600 | 700 |
| முரல் | 400 | 500 | 500 | 400 |
| கும்பிளா | 400 | 600 | 800 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 600 |
| ஓரா | 400 | 400 | 400 | 500 |
| திரளி | 250 | 300 | 200 | 200 |
| நகரை | 300 | 200 | 500 | 300 |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 300 | 300 | – |
| திருக்கை | 350 | – | 500 | – |
| மதனம் | 250 | 150 | 300 | – |
| கொய் | 200 | 70 | 100 | 100 |
| பாலை | 250 | 250 | 600 | 500 |
| வாழை | 200 | – | 500 | 400 |




பெண்களுக்கான செருப்பு வகைகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. கால்களை மூடியவாறான வடிவில் இவை அமைந்துள்ளன. இவை ஆயிரத்து 900 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# வடக்கில் பயன்படுத்தப்படாதுள்ள 400 உழவு இயந்திரங்களையும் விவசாயிகளுக்கு வழங்குங்கள்

## அதிகாரிகளிடம் விவசாய அமைப்புக்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 16

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலுமுள்ள கமநல சேவைத் திணைக்களங்களிலும் 400 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் பாவனையின்றித் தூசி படிந்து மாதக்கணக்கில் காணப்படுகின்றன. அவற்றினை விவசாயிகளின் நேரடிப் பயன்பாட்டுக்கு வழங்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

வடக்கின் 5 மாவட்ட கமநல சேவைத் திணைக்களங்களுக்கும் இந்திய அன்பளிப்பு மற்றும் திணைக்களக் கொள்வனவுகள் மூலமாக வடக்கின் கமநல சேவைத் திணைக்களங்கள் என்பவற்றில் தற்போது 400 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் தற்போது சேவையில் உள்ளன. இவ்வாறு சேவையில் உள்ள உழவு இயந்திரங்களில் ஒரு சிலவற்றினைத் தவிர நூற்றுக்கணக்கானவை எந்தவிதமான பாவனையும் இன்றியே காணப்படுகின்றன. அவற்றினைக் கமக்கார அமைப்புக்கள் அல்லது நிரந்தர விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இவ்வாறு விவசாயிகளின் பயன்பாட்டுக்கு வந்த உழவு இயந்திரங்களில் பல மீண்டும் பெறப்பட்டு உள்ளூராட்சித் திணைக்களங்களிடமும் வழங்கப்பட்டன. எனவே இவ்வாறு காணப்படும் நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்களில் கமநல சேவைத் திணைக்களத்தின் பாவனைக்குத் தவிர்ந்த ஏனையவற்றினை கமக்கார அமைப்புக்கள் மற்றும் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இவ்வாறு கமநல சேவைகள் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கும் உழவு இயந்திரங்கள் தமது பாவனைக்கு அதிகமானவையென்பதனால் அவற்றினை மீளப்பெற்றுக் கொள்ளுங்கள் எனவும் சில கமநல சேவைகள் திணைக்களங்களில் இருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறு மேலதிகமாகத் தேக்கத்தில் பயன்பாடற்றுக் காணப்படும் உழவு இயந்திரங்களை விவசாயிகளுக்கும் கமக்கார அமைப்புகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுகின் றது. பூநகரி உள்ளிட்ட பல சபைகளிலும் இத்தகைய உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படாது வீணாகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-101)

# நெல்காயவிடும் தளங்கள் கிராம மத்தியில் அமையும்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்

முல்லைத்தீவு, ஜூன். 16

முத்துஐயன்கட்டு தட்டயமலைக் கிராம அலுவலர் பிரிவில் அமையவுள்ளதாகக் கூறப்பட்ட நெல் உலரவிடும் தளம் அனைத்து மக்களுக்கும் பொருத்தமான இடத்தில் அமைக்கப்படும் என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் புதிதாக மூன்றிடங்களில் நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கப்படவுள்ளன. வருடந்தோறும் கிராமங்களில் மேற்கொள்ளும் அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு அமைவாக இவை அமைக்கப்பட உள்ளன.

"கணேசபுரம், தட்டயமலை கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள விவசாயிகள் பயனடையும் வகையில் நெல் உலரவிடும் தளம் அமைக்கப்பட வேண்டும். அதனை விடுத்து தட்டயமலை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தரின் தனிப்பட்ட சிபார்சில் தெரிவு செய்யப்பட்ட இடம் கிராமத்தில் ஒதுக்குப்புறத்தில் காணப்படுகிறது. அதனால் நெல் உலரவிடும் தளம் கிராமத்தின் மத்தியில் அமைய வேண்டும்" என்பதனைக் கிராம மக்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளருக்கும் கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தினர்.

> “ விவசாயிகள் பயனடையும் வகையில் நெல் உலரவிடும் தளம் அமைக்கப்பட வேண்டும்.

அதற்கு அமைய நேற்றுமுற்பகல் 9 மணியளவில் நெல் உலரவிடும் தளம் அமைக்கப்படும் இடம் தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்கான கலந்துரையாடல் ஒட்டுசுட்டான் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

"முன்னர் தீர்மா னிக்கப்பட்டுள்ள இடம் கிராமத்தின் ஒதுக்குப்புறமான இடமாக உள்ளது. அங்கு செல்வதற்கு நீண்ட தூரமாக உள்ளதுடன் பொருத்தமானதாகவும் இல்லை. தளம் கிராமத்தின் மத்தியில் உள்ள பொதுக்காணியில் அமைக்கப்பட வேண்டும். இரண்டு பொதுக்காணிகள் பொது மக்களால் பரிந்துரைக்கப்பட்டது" என்று தெரிவித்த ஒட்டுசுட்டான் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், இனங்காணப்பட்ட காணிகள் அரச காணிகளாக உள்ளமையால் மக்களுடைய தீர்மானத்துக்கு அமைவாக நெல் உலரவிடும் தளம் அமையும் என்று மேலும் தெரிவித்தார். (4-7)

# ராணுவ நினைவுச் சின்னம் அமைந்த பகுதி பலமாகிறது



கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி டிப்போ சந்தியை அண்மித்துள்ள இராணுவ வெற்றியை குறிக்கும் வகையில் வெற்றிச் சின்னம் அமைக்கப்பட்டுள்ள இடம் பலமான சுற்றுவேலிகள் அமைக்கப்பட்டு பலப்படுத்தப்படுகிறது.

குறித்த இராணுவ வெற்றியை குறிக்கும் நினைவிடம் அவ்விடத்திலிருந்து அகற்றப்படவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானம் இன்னும் நிறைவேற்றப்படாமலுள்ள நிலையில், இராணுவத்தினரால் குறித்த பிரதேசத்தின் எல்லைகள் பலப்படுத்தப்பட்டு பலமான வேலிகள் அமைக்கப்பட்டு வருகிறன. போர் நிறைவடைந்த பின்னர் குறித்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (4-35)

# 500 மீற்றர் நீளமான உள்ளூர் வீதிச் சீரமைப்பு இவ்வருடத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

500 கிலோமீற்றர் நீளமான உள்ளூர் வீதிகளும் 700 கிலோமீட்டர் நீளமான முதன்மை வீதிகளும் சீரமைக்கும் பணி இந்த வருட இறுதிக்குள் தொடங்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

ஐரோட் செயற்திட்டத்தின் மூலம் உள்வாங்கப்பட்ட சாலைகளே இவ்வாறு சீரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் வடக்கு மாகாணத்தில் ஆயிரம் கிலோமீற்றருக்கு அதிகமான சாலைகள் ஐரோட் திட்டத்தின் கீழ் காப்பற் மற்றும் கொங்கிரீட் சாலைகளாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் பிரதேச சபைகளின் கீழ் உள்ள 500 கிலோமீற்றர் வரையான உள்ளூர் வீதிகள் மற்றும் 700 கிலோமீற்றர் வரையான முதன்மை வீதிகளும் சீரமைக்கப்படும். முதன்மை வீதிகள் சீரமைப்பின் போது 240 கிலோ மீற்றர் நீளமான வீதி யாழ்ப்பாண மாவட்டத்திலும், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தலா 130 தொடக்கம் 140 கிலோமீற்றர்களுக்கு இடைப்பட்ட நீளமுடைய வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் சீரமைக்கப்படும். இந்தத்திட்டத்தின்கீழ் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிலோ மீற்றர் நீளமுடைய சாலைகள் சீரமைக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

# மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிக மீன்கள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், அதற்கு முன்னைய மாதங்களை விடக் மீன் பிடிபடுவது அதிகரித்திருந்தன என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைகளத்தின் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. எனினும் தற்போதைய காற்றுடன் கூடிய காலநிலையால் அதில் வீழ்ச்சி ஏற்படலாம் என்று திணைக்களத்தினர் கருத்துக் கூறுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 பிரதேசங்களில் மீன்பிடித் தொழில் முன்னெடுக்கப்படுகிறது. 21 ஆயிரத்து 87 மீனவக்குடும்பங்கள் உள்ளன. கடந்த மார்ச் மாதம் 37 இலட்சத்து 22 ஆயிரத்து 13 கிலோகிராம் மீன் பிடிபட்டுள்ளன. 21 இலட்சத்து 8 ஆயிரத்து 200 கிலோகிராம் கருவாடு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 37 இலட்சத்து 43 ஆயிரத்து 710 கிலோகிராம் மீன்கள் பிடிபட்டு ள்ளன. 25 லட்சத்து 12 ஆயிரத்து 270 கிலோகிராம் கருவாடு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பருவகாலக் காற்றினால் கடந்த மாதம் மீன்பிடி சிறியளவில் பாதிக்கப்பட்டிருந்தாலும் மீன் மற்றும் கருவாடு உற்பத்திகள் அதிகரித்துச் செல்வதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. மேமாதத்திலும் அதிகரித்தநிலை உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு காணப்பட்டபோதும் சுழிபுரம், யாழ்ப்பாணம் கிழக்கு, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் கருவாடு உற்பத்தி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த மாதம் வீசிய காற்றினால் யாழ்ப்பாண குடாநாட்டில் கரையோரப்பகுதி மக்களின் மீன்பிடி அதிகளவில் பாதிக்கபட்டிருந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-ரி)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய ஐவருக்கு இரண்டரை லட்சம் ரூபா

## தண்டமாக விதித்தது கிளிநொச்சி நீதிமன்று

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு ட்பட்ட பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றியும் அனுமதிப்பத்திர விதிமுறைகளைமீறியும் மணல்கொண்டுசென்ற ஐந்து பேருக்கு 2 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்ப ளித்தது கிளிநொச்சி நீதிமன்று.

ஐந்து சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்த ப்பட்டனர். அவர்கள் தம்மீதான குற்ற ச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டனர்.

டிப்பர் வாகனத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச்சென்ற சாரதிக்கு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கட்டத்தவறின் 3 மாத கால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். அனுமதிப்பத்திரம் இன்றி உழவியந்திரத்தில் மணல் கொண்டு சென்ற சந்தேக நபருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கட்டத்தவறின் ஒரு மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். அனுமதிப்பத்திரம் இன்றி உழவியந்திரத்தில் மணல் கொண்டு சென்ற நபருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கட்டத்தவறின் ஒரு மாதகால சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும்.

அனுமதிப்பத்திரத்தில் உள்ள விதிமுறைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் கொண்டு சென்ற நபருக்கு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கட்டத்தவறின் 3 மாத கால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி உழவியந்திரத்தில் மணல் கொண்டு சென்ற நபருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டமும் கட்டத்தவறின் ஒரு மாகால சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது. (4-6)

# விவசாயிகளுக்கான விழாக்களுக்குச் செலவாகும் நிதி அபிவிருத்திக்கான முதலீடாகக் கருதப்படவேண்டும்

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை பற்றிய விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனின் தன்னிலை விளக்க அறிக்கையின் இரண்டாவது பகுதி

### குற்றச்சாட்டு இல 4.1

வவுனியா மாவட்டத்தில் மூங்கில், மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள்ளு விநியோகித்து சுயதொழிலை முன்னெடுக்க வைக்கும் திட்டம் ஆகியவற்றை கைலஞ்சம் பெறும் நோக்கத்துக்காக நிராகரித்தமை.

● விவசாய அமைச்சர் வவுனியாவில் மூங்கில் வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை மறுத்ததோடு, குறிப்பிட்ட முதலீட்டாளரை வேண்டிய ஆவணங்களுடன் வந்து தன்னைச் சந்திக்கும்படி கோரியமை விவசாய அமைச்சரின் நடத்தைமீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனவும்

● மூங்கில் நடுகைத் திட்டத்தை நிராகரித்தமை சட்டபூர்வமற்றது எனவும் விசாரணைக்குழு கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணக்குழுவின் இந்தக் கூற்றை முற்றாக நான் மறுக்கிறேன். வவுனியா மாவட்டச் செயலகத்தில் 11.09.2015 அன்று மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்திலேயே மூங்கில் செய்கைக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டு, அதற்கான அறிவித்தல் கடிதம் மாவட்டச் செயலாளரின் கையொப்பத்துடன் (இணைப்பு இல1) வவுனியாவின் நான்கு பிரதேச செயலர்களுக்கும், வவுனியா மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளருக்கும் வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதன் பின்பே முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவர் தொலைபேசியினூடாக என்னைத் தொடர்பு கொண்டு அனல் மின்சாரம் பெறும் பொருட்டு மூங்கில் செய்வதற்கான அனுமதியை முதலமைச்சர் தனக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். இதன்போதே ஆவணங்களைக் கொண்டுவந்து அலுவலகத்தில் என்னைச் சந்திக்குமாறு சொல்லியிருந்தேன்.

விஞ்ஞானரீதியாக எமது பிரதேசத்தில் மூங்கில் செய்கை பொருத்தமற்றது என்ற கருத்தை நான் கொண்டிருந்தபோதும் அனுமதி மறுத்தது வவுனியா மாவட்டச் செயலகமே ஆகும். இந்த நிலையில் நான் அனுமதி மறுத்தது சட்டபூர்வமற்றதெனக் குறிப்பிட்டிருப்பது பிழையானது என்பதோடு, நேரில் வந்து ஆவணங்களுடன் அலுவலகத்தில் என்னைச் சந்திக்குமாறு கோரியது எனது நடத்தை மீது தங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவது என்று குறிப்பிட்டிருப்பது அவர்களது ஊகத்தின் அடிப்படையில் அமைந்தது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

● திணைக்களங்கள் தொடர்பான விடயங்கள் விவசாய அமைச்சருக்குத் தெரிய வேண்டுமென திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அதனை நடைமுறைப்படுத்த நினைப்பது முதலீட்டாளர்களை விவசாயத்துறையில் முதலீடு செய்வதற்கு, போரினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளது வாழ்வதாரத்தை உயர்த்த முனைபவர்களுக்கு ஒரு முட்டுக்கட்டையாக உள்ளதெனவும், இது அமைச்சரின் அதிகார முறைகேடு என விசாரணைக்குழு அபிப்பிராயப்படுகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அதிகார முறைகேடு இல்லை

எதிர்காலத்தில் பசுமை உலகம் என்ற தனியார் நிறுவனம் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைகளோ அனுமதியோ இன்றி வடக்கில் விவசாயிகளைப் பெரிய அளவில் இஞ்சிச் செய்கையில் முதலிடச் செய்து அவர்களை நட்டமடைய வைத்தது. இழப்பீட்டைப் பெற்றுத்தருமாறு கோரி பாதிக்கப்பட்ட விவசாயிகள் முதலமைச்சரை அணுகியதையும், தாங்கள் இது தொடர்பாக என்னிடம் விளக்கம் கேட்டிருந்தமையும், நான் இதற்கான பதிலைத் தங்களுக்கு அனுப்பியிருந்தமையும், அந்தப் பதிலில், வடக்கு மாகாண சபையின் கவனத்துக்கு வராமல் தற்போது ஏராளமான திட்டங்கள் கொழும்பு அரசின் நேரடி அனுமதி அல்லது ஆசீர்வாதத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருவதால் இத்தகைய பதிவு ஒன்றை முதலமைச்சர் அலுவலகத்தில் மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொண்டிருந்தமையையும் தங்கள் நினைவுக்கு கொண்டுவர விரும்புகிறேன். (இணைப்பு இல2)

இவற்றின் அடிப்படையில், எனது அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களினூடாக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் எனக்கு அறியத்தருமாறு திணைக்களத் தலைவர்களை நான் கோருவதிலும், புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த முயல்பவர்கள் அதனைத் திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களது ஆலோசனைகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதிலும் எவ்வித முறைகேடும் இருப்பதாக நான் கருதவில்லை.

### குற்றச்சாட்டு இல 4.2

கண்காட்சிகள், பொங்கல் விழா, உழவர் விழா எனப் பல விழாக்களைப் பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்து நடாத்தியன் மூலம் மாகாண சபையின் பெரும் அளவிலான நிதியை வீண்விரயம் செய்தமை.

● முல்லைத்தீவில் 2016ஆம் ஆண்டு தைப்பொங்கல் நாளையொட்டி நடந்த, கவிஞர் வைரமுத்து அவர்கள் விருந்தினராகக் கலந்துகொண்ட உழவர் பெருவிழாவுக்கு செலவிடப்பட்ட முழு நிதியும் வீண் விரயம் செய்யப்பட்டதென்ற குற்றச்சாட்டை எண்பிப்பதற்கு முறைப்பாட்டாளர்கள் தவறிவிட்டனர் என்று விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. எனினும் இந்த நிகழ்ச்சியை ஒரு களியாட்டம் என்று குறிப்பிட்டுள்ள விசாரணைக்குழு, போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் இதற்கான தேவை ஏன்? எனவும் கேள்வி எழுப்பியுள்ளது.

### கவிஞர் வைரமுத்துவின் பன்முகத் தன்மையை அறியத் தவறிவிட்டது குழு

கவிஞர் வைரமுத்துவின் பன்முகத் தன்மையைத் தெரிந்து கொள்ளாமல், அவரை ஒரு திரைப்படக் கலைஞனாக மாத்திரமே விசாரணைக் குழுவினர் அறிந்து வைத்துள்ளார்கள் போலும். அதனால்தான் முற்றுமுழுதாக விவசாயிகளைக் கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை விசாரணைக் குழுவினர் களியாட்ட விழாவாகக் குறிப்பிட்டுள்ளனர். போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களின் உளவியல் ஒத்தடமாகவே கவிஞர் வைரமுத்துவின் உரை அமைந்திருந்தமையையும் அவர் தனது சொந்த செலவிலேயே இங்கு வந்து சென்றார் என்றும், அவருக்காக அமைச்சு செலவிட்ட தொகை ஆக 12,850 ரூபா மாத்திரமே என்றும் இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன்.

ஆண்டுதோறும் உழவர்களின் சாதனைகளைக் கௌரவிக்கும் முகமாக நடைபெறும் உழவர் பெருவிழா மாத்திரம் அல்ல, எமது அமைச்சால் ஏற்பாடு செய்யப்படும் எந்த ஒரு நிகழ்ச்சியும் களியாட்டமாக அமைவதில்லை என்று உறுதிபடத் தெரிவித்துக் கொள்வதோடு, அமைச்சின் முக்கிய நிகழ்சிகளில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட முதலமைச்சரும், மாகாண சபை உறுப்பினர்களும் இதை நன்கறிவார்கள் எனவும் நம்புகிறேன்.

உழவர் பெருவிழாவுக்கு பிரபலமான ஒருவர் விருந்தினராக அழைக்கப்படும்போது இந்த விழா தொடர்பான விடயம் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்படும். இந்தச் செய்தியினூடாக சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி தொடர்பாகவும், விவசாயம்சார் தொழில்நுட்பத் தகவல்களும் வெளிக்கொணரப்படுவதனால் இந்த விடயம் தொடர்பான செய்திகளை அறிந்து கொள்வோரின் எண்ணிக்கையும் ஆர்வமும் அதிகரிக்கின்றது. இதனால் விவசாயிகளும் விவசாயிகள் அல்லாத மற்றவர்களும் கவரப்பட்டு இந்த நிகழ்ச்சிக்கு வரும் வாய்ப்பு அதிகரிக்கும். இதன் மூலம் விவசாயம் சார் தொழில்நுட்பத் தகவல்கள் சென்றடையும் தன்மையும் அதிகரிக்கப்படுகின்றது.

### உழவர் விழாவுக்கு செலவிடப்பட்ட நிதி வீண் விரயமல்ல

மேலும் சிறப்பான முறையில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு இவ்வாறான போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் என்ற ஆர்வமும் விவசாயிகளுக்கு ஏற்படும். அந்தவகையில் இத்தகைய விழாக்களுக்கு செலவிடும் பணம் விரயம் அல்ல. மாறாக, அபிவிருத்திக்கான ஒரு முதலீடாகவே கருதப்பட வேண்டும்.

### குற்றச்சாட்டு இல 4.4

பீற்றா பவர் மற்றும் யூல்பவர் நிறுவனங்களிடமிருந்து 2015ஆம் ஆண்டு முதல் வருடம் ஒன்றுக்கு ரூபா 20 மில்லியன் வீதம் 2016ஆம் ஆண்டுவரை பெறப்பட்ட ரூபா 40 மில்லியன் பணத்தை மோசடி செய்தமை.

● பீற்றா பவர் மற்றும் யூல் பவர் காற்று மின் ஆலைகளின் வணிக நிறுவனங்களுக்கான சமூகக் கடப்பாட்டு நன்கொடையாக 2015ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் 20 மில்லியன் ரூபா தலைமைச் செயலாளரின் ஊடாக விவசாய அமைச்சின் செயற்பாடுகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த நிதியில் பெருமளவு மோசடி என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், விவசாய அமைச்சர் மோசடி செய்தார் என்பதை எண்பிப்பதற்கான சாட்சிகள், சான்றாவணங்கள் விசாரணக்குழுவுக்கு முன்வைக்கப்படாத காரணத்தால் இந்தக் குற்றச்சாட்டிலிருந்து விவசாய அமைச்சர் விடுவிக்கப்படுவதாக விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

● அத்தோடு நீர்விநியோகம் என்ற அமைச்சின் பெயரைத்தவிர நிதிக் குழுவாலோ அல்லது மாகாண சபை பாதீட்டிலோ நீர் விநியோகத்துக்கு எந்தவித நிதி ஒதுக்கமும் பெறாத விவசாய அமைச்சர் காற்றுமின் ஆலைகளால் அன்பளிப்பாக வழங்கப்பட் 6 தண்ணீர்த் தாங்கி வாகனங்களை விவசாய அமைச்சில் வைத்திருப்பது வீண்விரயம் என்று குறிப்பிட்டுள்ள விசாரணைக் குழு, இந்த வாகனங்களை உள்ளூராட்சி அமைப்புகளிடம் கையளிக்கவேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது.

விசாரணைக்குழுவினர் குறிப்பிட்டதைப்போல அல்லாது மாகாண சபை பாதீட்டில் நீர் விநியோகத்துக்கும் சுற்றாடலுக்கும் நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நீர்த்தாங்கி வாகனங்கள் தொடர்பாக தலைமைச் செயலாளரும் காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்களிடம் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டுள்ளனர். அதில் விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தேவைக்களுக்கான நீரை வழங்குவதற்கும், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு உடனடி நிவாரணமாக குடிதண்ணீரை வழங்கவும் இந்த நீர்த்தாங்கி வாகனங்கள் விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு இருந்தும் வலி. வடக்கு பிரதேச சபையிடமும், வலி. தெற்கு பிரதேச சபையிடமும் 2015ஆம் ஆண்டே இரண்டு நீர்த்தாங்கி வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என்பதையும், ஏனைய நான்கு நீர்த்தாங்கி வாகனங்களும் விவசாய அமைச்சின் பராமரிப்பில் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதற்கமைவாக சேவையில் ஈடுபட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோன்.

● காற்றுமின் ஆலை வழங்கிய நிதி விவசாயத் திணைக்களத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த 2016ஆம் ஆண்டு 252 விவசாயக் கிணறுகள் சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் சில கிணறுகளின் உரிமையாளர்களைச் விசாரணைக் குழு சந்தித்து உரையாடியது. அவர்கள் தங்களுக்கு முழுமையான செலவு தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்திருப்பதையடுத்து, இதில் நிதிமோசடி இடம் பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தை விசாரணைக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

● விவசாய அமைச்சரை இந்த மோசடிக் குற்றச்சாட்டில் இருந்து விடுவித்துள்ள விசாரணைக் குழு, திருத்தப்பட்ட கிணறுகளின் செலவு விவரங்கள் தொடர்பில் முழுமையான விசாரணை தேவை எனத் தெரிவித்துள்ளது.

### குழுவின் தவறான புரிதலே சந்தேகத்தை ஏற்படுத்தியது

விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள விவசாய சம்மேளனங்கள் ஆகிய மூன்று தரப்புகள் இணைந்து வினைத்திறன் மிக்கதாகவும் விளைபயன் மிக்கதாகவும் மேற்கொண்ட இந்தத் திட்டத்தில் எந்தவித மோசடிகளும் இடம் பெறவில்லை. இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்போது பொறியியலாளரின் வேலைச் சான்றிதழ், வேலை நடைபெற்றதை உறுதிப்படுத்தும் ஒளிப்படம், செலவுச் சிட்டைகள், விவசாயப் போதனாசிரியரின் உறுதிப்படுத்தல் கடிதம் போன்றவை சமர்ப்பிக்கப்பட்டு சரிபார்க்கப்பட வேண்டியிருந்ததால் ஒரே தடவையில் எல்லோருக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

டிசெம்பர் மாத இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆவணங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்பே இறுதிக் கொடுப்பனவுக்கான காசோலைகள் விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒவ்வொரு வேலையிலும் 5 சதவீத பணம் கழிக்கப்பட்டு திணைக்கள வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த வைப்புப் பணம் ஆறு மாதத்துக்கும் ஒரு வருடத்துக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வேலை திருப்திச் சான்றுதழ் வழங்கப்பட்ட பின்பே கொடுப்பனவு செய்யப்படும். இந்த நடைமுறைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளத் தவறியமையே குற்றச்சாட்டுகளுக்கு வழிகோலியுள்ளது.

சீரமைக்கப்பட்ட கிண்றுகளின் உரிமையாளர்களின் விவரங்கள், சீரமைக்கப்பட முன்பும் பின்பும் எடுக்கப்பட்ட கிணறுகளின் ஒளிப்படங்கள், செலவு தொகை உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய முழுமையான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மாகாணக் கணக்காய்வுத் திணைக்களத்தின் அறிக்கையிடலும் நிறைவு அடைந்துள்ளது. இவற்றைப் பார்வையிட்டு கிணறுகள் சீரமைப்பில் மோசடிகள் எதுவும் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### குற்றச்சாட்டு இல 4.5

பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் மாகாணநிதியை மோசடி செய்தமை.

● நடைமுறைப்படுத்த முடியாத பார்த்தீனியம் ஒழிப்புத் திட்டத்தை ஆரம்பித்து இடைநடுவில் கைவிட்டதன் மூலம் செலவு செய்யப்பட்ட பணம் வீண் விரயம் எனக் கருதுவதாகவும், இந்தப் பணம் மோசடி செய்யப்பட்டதாக சாட்சிகள் இல்லாத நிலையில் திட்டமிடப்படாத செலவு எனவும் கருதியுள்ள விசாரணைக் குழு இதற்கு விவசாய அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பார்த்தீனியம் உடனடியாக முற்றாக அழித்துவிடக்கூடிய களை அல்ல என்று தெரிந்தும், அழித்தே தீரவேண்டிய அந்நியக் களை என்பதால் இது தொடர்பாக விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி அவர்களை பார்த்தீனியம் ஒழிப்பில் ஈடுபட வைக்கும் நோக்கிலேயே விவசாய அமைச்சால் பார்த்தீனியம் ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. எனினும், திட்டம் ஆரம்பித்த பின்னர், பார்த்தீனியத்தை அழிப்பதற்கு விசிறப்பட்டு வந்த கிளைபோசேற் என்ற களை கொல்லியின் இறக்குமதிக்கு அரசு முழுமையாகத் தடை விதித்ததால், இந்தத் திட்டம் பின்னடைவைச் சந்தித்தது.

(தொடரும்)

# இனவாத அமைப்புகளை தடை செய்தல் அவசியம்

## அமைச்சர் ஹிஸ்புல்லா வலியுறுத்தல்

மட்டக்களப்பு, ஜூன் 16
நாட்டில் இனங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கும் பேரினவாதக் குழுக்களைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனப் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.
தலைசிறந்த புலனாய்வு வலையமைப்பைக் கொண்ட இலங்கைப் பொலிஸாரினால் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்ய முடியாதுள்ளமை எமக்குப் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
நாட்டில் தலைதூக்கியுள்ள இனவாதச் செயற்பாடுகள் குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:
போர் நிறைவடைந்த பின்னர் தலைதூக்கிய இனவாதச் சக்திகள் இன்று நாட்டில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. இதனால், இனங்களுக்கிடையில் முறுகல், பொருளாதாரப் பின்னடைவு, வெளிநாட்டு முதலீடுகள் வராமை என அது, எமது நாட்டுக்கும், நாட்டின் பொருளாதாரத்தின் மீதுமே அதிக தாக்கம் செலுத்தியுள்ளன.
சிங்கள தேசியவாதச் சக்திகள் கடந்த ஆட்சிக் காலப்பகுதியில் தோற்றம் பெற்றன. அதைக் கட்டுப்படுத்த தவறியதால் கடந்த ஆட்சியை மாற்றி புதிய ஆட்சியைக் கொண்டு வர முஸ்லிம்கள் பெரும் பங்களிப்புச் செய்தனர். ஆனால், இந்த ஆட்சியிலும் இனவாதச் செயற்பாடுகள் தொடர் கதையாகவே மாறியுள்ளன. இவை திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளாகும். இதனால் எமது பொருளாதாரம் சீர்குலைந்து அதள பாதாளத்துக்குள் சென்றுக் கொண்டிருக்கிறது. நாட்டின் அமைதியற்ற சூழல் கருதி முதலீட்டாளர்கள் முதலீடுகளைச் செய்ய முன்வருவதில்லை. இனவாதம் என்பது நாட்டின் முன்னேற்றத்துக்கு பெரும் தடையாக மாறியுள்ளது. இதனை அனைத்துத் தரப்பும் உணரவேண்டும்.
இனவாதத்தைப் பரப்பி இனங்களுக்கிடையில் முறுகலைத் தோற்றுவிப்பது எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகச் சட்டம் தன் கடமையை உரிய முறையில் செய்யவேண்டும். சட்டத்தைநடைமுறைப் படுத்தும் பொலிஸார் சுயா தீனமாக இயங்க வேண்டும்.
நாட்டில் இனவாதத்தைப் பரப்புகின்றவர்கள் யார்? எந்த அமைப்பு அவற்றைச் செய்கின்றது என்பது தொடர்பில் பொலிஸாருக்கும் தெரியும் அரசின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும்தெரியும். எனவே, அவ்வாறான அமைப்புகளையும், அவற்றுடன் சம்பந்தப்பட்ட நபர்களையும் கைதுசெய்ய அல்லது கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
இனவாதம் சமூக ஊடகங்கள் வாயிலாகவே அதிகம் பரப்பப் படுகின்றன. சிலர்தமது அடையாளத்தை வெளிக்காட்டிக் கொண்டே இனவாதத்தைப் பரப்புகின்றனர். மேலும் பலர் அடையாளத்தைக் காண்பிக்காது சமூக ஊடகங்களில் கொக்கரிக்கின்றனர். இவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இனவாதத்தைப் பரப்புகின்ற சமூக தளங்களை முடக்கவேண்டும். அத்துடன், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் சில வரையறைகளை மேற்கொள்வதன் ஊடாக, தலைதூக்கியுள்ள இனவாதத்தை ஓரளவுக்குத் தணிக்கமுடியும். ஞானசார தேரர் கைது விடயத்தில் பொலிஸாரின் மந்தகதி கவலையளிக்கின்றது.



தலை சிறந்த புலனாய்வு வலையமைப்பைக் கொண்ட இலங்கைப் பொலிஸார் ஒரு தேரரைக் கைதுசெய்ய இவ்வளவு நாள்களைக் கடத்துவது என்பது எமக்குப் பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என்றுள்ளது. (த-ய-46)

# வெளிநாடுகளில் லொத்தர் விற்கப் போகின்றாரா ரவி?

## தயாசிறி ஜயசேகர கேள்வி

கொழும்பு, ஜூன் 16
அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க வெளிநாடுகளுக்கு லொத்தர் சீட்டு விற்பனை செய்யப் போகின்றாரா என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.
அயலுறவு அமைச்சின் கீழ் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகிய நிறுவனங்களை உள்வாங்கும் வகையில் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என விளையாட்டுத்துறை அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
இந்த இரண்டு நிறுவனங்களும் நிதி அமைச்சின் கீழ் இயங்கி வந்ததாகவும், நிதி அமைச்சின் கீழ் இயங்கி வந்த நிறுவனங்களை அயலுறவு அமைச்சின் கீழ் கொண்டு வந்தமை நகைப்பிற்குரியது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (த)

# மாத்தளையில் 94 இடங்களில் அபாய நிலமை கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 16
சீரற்ற காலநிலை காரணமாக மாத்தளை மாவட்டத்தில் 94 இடங்களில் தரையில் வெடிப்புகள், தாழிறக்கம் மற்றும் மண்சரிவு அபாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
இடர் முகாமைத்துவக் கூட்டம் மாத்தளை மாவட்டச் செயலர் டீ.பி.ஜி.குமாரசிறியின் தலைமையில் கூடியபோது இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சமிந்த அமரவீர இந்தத் தகவலை வெளியிட்டார்.
அபாயநிலை தோன்றியுள்ள பிரதேசங்களில் 1,436 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவற்றில் 452 குடும்பங்கள் உச்சபட்ச அபாயப் பகுதிகளில் உள்ளன. அந்தக் குடும்பத்தினரை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
அபாயநிலை தோன்றியுள்ள பகுதிகளின் தற்போதைய நிலை பற்றி அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. எனினும், வலயக் கல்வி அதிகாரிகள் இன்னமும் தங்களது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.
இந்தக் கூட்டத்தில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமைப் புவியியலாளர் சமிந்த மொரேமாட, கண்டி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி டீ.எஸ். தம்பாவிட்ட ஆகியோரும் கலந்துகொண்டனர். (த)

# மரண அறிவித்தல்

## திருமதி.கணபதிப்பிள்ளை கண்ணம்மா



யாழ் சண்டிலிப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் கடக்கீரி அளவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கண்ணம்மா 15.06.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியாரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விசுவர், செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் ருக்மணிதேவி, குசலாதேவி, நாகேந்திராதேவி, அருந்தவராசா, லிங்காதேவி, லிங்கராசா ஆகியோரின் அன்பு தாயாரும் காலஞ்சென்றவர்களான இராசமணி, செல்லத்துரை, இராசம்மா, பொன்னம்மா, கனகம்மா, வைரவநாதன், அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லையா, முத்துப்பிள்ளை, நாகம்மா, மற்றும் வைத்திலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அருந்தவநாதன் (முன்னைநாள் அ.ம.ப.நோ.கூ.சங்க முகாமையாளர்), குணசேகரம், இரஞ்சிதமலர், சிவதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் மணிவதனி (சுவிஸ்), காஞ்சனா, காலஞ்சென்ற வேணுகோபால் மற்றும் கேதாரணி (ஜேர்மனி), சாம்பவி, கபேசன், திவீஜன், றஜிதா, நேருஜா, நிசாந்தி ஆகியோரின் பேர்த்தியும் மந்தாகினி, ஆரங்கன், சர்மிலன், கவிஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடக்கீரி,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

# ஹெந்தவிதாரணவிடம் 8 மணிநேர விசாரணை

கொழும்பு, ஜூன் 16
முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேஜர்ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவிடம் நேற்று முன்தினம் எட்டு மணி நேரத்துக்கும் மேல் விசாரணை நடத்தப்பட்டது.
நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் அழைப்பின் பேரில், நேற்றுமுன்தினம் முற்பகல் 9 மணியளவில் விசாரணைக்குச் சென்ற ஹெந்தவிதாரண மாலை 5.30 மணியளவிலேயே விசாரணை முடிந்து வெளியேறிச் சென்றார் எனத் தெரியவருகின்றது.
தேசிய புலனாய்வுப் பணிப்பாளராக இருந்தபோது, அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு பல்வேறு நபர்கள் மற்றும் அமைப்புகளின் சார்பில் முறைகேடான முறையில் வைப்பிலிடப்பட்ட பணம் தொடர்பாகவே விசாரணை நடத்தப்பட்டுள்ளது.
இதேவேளை, முன்னைய ஆட்சிக்காலத்தில் நடந்த கொலைகள், ஆட்கடத்தல்கள் தொடர்பாகவும் ஹெந்தவிதாரண, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-ய)

# மரண அறிவித்தல்

## பெனடிற் யோசப்ராஜா

**(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)**

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிற் யோசப்ராஜா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்) கடந்த 11.06.2017 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற திரேசமலரின் அன்புக் கணவரும், அகிலசாந்தினி (கனடா), வசந்தினி (கனடா), கருணா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2017) சனிக்கிழமை கனடாவில் இடம்பெறும். அன்றையதினம் பிற்பகல் 5 மணிக்கு மிருசுவில் நிக்கொலார் ஆலயத்தில் ஆத்மசாந்தி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தவசிக்குளம், மிருசுவில்.**

தகவல்: **யேசுரட்ணம் (ஜெயம் -சிறியமகன்)**

# நினைவஞ்சலி

**2ஆம் ஆண்டு** | **13ஆம் ஆண்டு**

தோற்றம் 31.07.1932
மறைவு 16.06.2015





தோற்றம் 25.11.1954
மறைவு 14.06.2004

**திருமதி டெய்சி மேரி அக்னெஸ்**
E.K. குமரையா

**பத்திமா பற்றிசியா நவமணி**
ரவீந்திரகுமார்

**ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் உங்கள் நினைவலைகள்
எம்மை விட்டு நீங்காது.**

ஆண்டவரே இவர்களை உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

**99/6, சந்தான மாதா கோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# பழைமையான தபாலகங்களின் மீது கைவைக்கும் எண்ணமில்லை

## தபால் அமைச்சர் ஹலீம் தெரிவிப்பு

கண்டி, காலிகோட்டை மற்றும் நுவரெலியாவிலுள்ள பழைமையான பெருமைமிக்க தபாலகங்களை இடிக்கவோ அல்லது அவற்றை வெளிநாட்டவர்களுக்கு விற்கவோ அரசு முயற்சிக்கவில்லை என தபால் அமைச்சர் ஏ.எச்.எம்.ஹலீம் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்த அமைச்சர் ஹலீம் மேலும் தெரிவித்ததாவது:

மூன்று புராதன தபாலகங்களையும் ஹோட்டல் நிர்மாணத்துக்காக வெளிநாட்டவர்களுக்குக் கையளிக்க அரசு முயற்சிசெய்து வருவதாக வெளிவந்துள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை. அவ்வாறான எண்ணமொன்று அரசுக்குக் கிடையாது.

பயன்படுத்தப்படாமல் பாழடைந்து கிடக்கும் கட்டடங்களை புனரமைத்து நவீனமயப்படுத்தவே அரசு முயற்சிசெய்து வருகின்றது. அதன் பிரகாரம் கண்டி ரயில் நிலையத்துக்கு முன்னாலுள்ள தபால் அமைச்சுக்குச் சொந்த மான பழைய 'கிராண்ட் ஹோட்டல்' கட்டடத்தை நவீனமயப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

எங்களது திட்டத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் தபால் தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்திவருகின்றன. இதன் பின்னால் அரசியல் ஊடுருவல்களும் உள்ளன. எவ்வாறாயினும் நாட்டின் புராதன சொத்துக்களை சேதமாக்கும் எண்ணம் எமக்குக் கிடையாது - என்றார். (து)

# மரண அறிவித்தல்கள்



அன்னையின் மடியில் 24 . 11 . 1949

ஆண்டவன் அடியில் 14 . 06 . 2017

## பிலிப்பையா முடியப்பு (ஜெயக்கொடி)

அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா முடியப்பு (ஜெயக்கொடி) 14.06.2017 புதன்கிழமை அல்லைப்பிட்டியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா - லில்லியம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான அருளப்பா - கிறிஸ் ரீனா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் றஞ்சிதமலரின் (மலர்) அன்பு கணவரும் காலஞ்சென்ற ஜெயரஞ்சன் மற்றும் ஜெயரூபன்(சுவிஸ்), ஜெயயாழினி, ஜெயநளினி(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும் தர்சினி, எமில் சுரேந்திரன், ஜெவ்றி அலன் (Doctor டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ராஜேந்திரம், காலஞ்சென்றவர்களான கிளி, இரட்ணம் மற்றும் மனோன், செல்வரட்ணம், காலஞ்சென்றவர்களான பவளம், ஜீவா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் றெஜீனா, நேசன், வசந்தன், ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் மிறோசன், மெலிசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னார் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**அல்லைப்பிட்டி**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**Suren : 077 6109695, Jeya : 0041764234924**

# மரண அறிவித்தல்



பிறப்பு 14 . 08 . 1972

இறப்பு 15 . 06 . 2017

## செல்லத்துரை ஜெயமோகன்

யாழ்.காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Grevenbroich ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயமோகன் நேற்று (15.06.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகள், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - பாக்கியம் தம்பதிகள் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற செல்லத்துரை (செல்லப்பா) மற்றும் செல்வநாயகி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற ஆனந்த நடராசா மற்றும் மாலினி தம்பதிகளின் அன்பு மருமகனும், அஜந்தாவின் அன்புக் கணவரும், தாரணியின் அன்புத் தந்தையும், நவநீதன்(ஜேர்மனி), யோகசித்ரா (லண்டன்), கங்காதரன் (ஜேர்மனி), தனராஜ் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகராசா, சிவமலர், சுமதி, கிருஷாந்தினி, மதிசூடி, காண்டீபன், சுஜாதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 222 6352, 011 255 2149**



மலர்வு 11 . 08 . 1938

உதிர்வு 14 . 06 . 2017

## வைத்திலிங்கம் நல்லையா

யாழ். சரவணையைப் பிறப்பிடமாகவும் வவுனியா பட்டாணிச்சூரையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நல்லையா 14.06.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னாச்சி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்காச்சியம்மா தம்பதியரின் மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், கோமதி (உமா - பிரான்ஸ்), குகமதி (கௌரி - ஜேர்மனி), மணிவண்ணன் (மதன் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாகரன் (பிரான்ஸ்), திரவியநாதன் (ஜேர்மனி), அனுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் கெங்காதரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தியாகேஸ்வரி, சுப்பிரமணியம், பாக்கியம் மற்றும் விமலா, தேவராசா (குகன் - சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், தருஸ், பிரகாஷ், பகிர்தன், பிரவினா, அபிஷஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.20,
3 ஆம் ஒழுங்கை,
பட்டாணிச்சூர், வவுனியா.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**024 492 0407**

# மரண அறிவித்தல்



## திருமதி சுந்தரவதனா சுந்தரலிங்கம்

யாழ் . திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரவதனா சுந்தரலிங்கம் 12.06.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - லட்சுமி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றகளான கதிரவேலு - தையல்நாயகி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் ராஜினி (ஜேர்மனி), சுகி(ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் கனகலிங்கம் , மகேசன் ஆகியோரின் அன்பு மாமியும் பிரவீனா, பிரியங்கா, பிறின்சிகா, பிரதன்ஜா, மகிந்தா, மொனிக்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி முருகன் வீதி 1st Lane இல் அமைந்துள்ள பிரதன்ஜா இல்லத்தில் இன்று (16.06.2017) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகாக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

(CS/4903)(12)

# நாடெங்கும் இதயநோய் சிகிச்சை நிலையங்கள்

## சுகாதார அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 16

இருதய நோயாளிகளின் சிகிச்சைக்காக நாடெங்கும் சிகிச்சை நிலையங்களை அமைக்க சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

எட்டு மாகாண சபைகளினாலும் நிர்வகிக்கப்பட்டுவரும் பிரதான அரச வைத்தியசாலைகளில் இந்தப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் நாட்டில் ஏற்படும் இருதயநோய் தொடர்பான மரணங்கள் குறைக்கப்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை இருதய நோய்ச் சங்கத்தின் 17ஆவது அமர்வு கொழும்பு 'கிங்ஸ்பரி' ஹோட்டலில் நடந்தபோது அதில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். (த)

# ஜப்பானில் மகிந்தவைச் சந்தித்த பிரதியமைச்சரிடம் விசாரணை

கொழும்பு, ஜூன் 16

சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் அருந்திக பெர்னான்டோ, ஜப்பானில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து கலந்துரையாடியமை தொடர்பாக விளக்கம் கோருவதற்கு அரசு முடிவு செய்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அண்மையில் ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அருந்திக பெர்னான்டோ அங்குவைத்து, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவையும், அவரது மைத்துனரும், ரஸ்யாவுக்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்புகள் தொடர்பான ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

ஏற்கனவே. உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அவரைக் கைது செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் அருந்திக பெர்னான்டோ அவரைச் சந்தித்திருந்தார்.

எனவே, இதுதொடர்பாக செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நீண்டநேரம் விவாதிக்கப்பட்டதுடன் அருந்திக பெர்னான்டோவிடம் விளக்கம்கோருவதற்கும்முடிவு செய்யப்பட்டுள்ளது. (த-ய)

# இலங்கை இடர் உதவிகளுக்கு 22.7 மில்லியன் டொலர் தேவை

## உலக நாடுகளிடம் ஐ.நா. கோரிக்கை

கொழும்பு, ஜூன்16

இலங்கையில் முன்னெடுக்கப்பட வுள்ள அவசர இடர் உதவிகளுக்காக சுமார் 22.7 மில்லியன் டொலர் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் அவசர உயிர் காக்கும் மற்றும் பாதுகாப்பு உதவிகள், வாழ்வாதார உதவிகள், கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் வழங்கப்படவுள்ளன என மனிதாபிமான விடயங்களுக்கான ஐ.நா அலுவலகம் கூறியுள்ளது.

காலி, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் மாத்தறை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களிலுள்ள 3லட்சத்து 74ஆயிரம் மக்களை இலக்காக கொண்டு இந்த அவசரப் பதில் நடவடிக்கைத் திட்டத்தை ஐ.நா முன்னெடுக்கவுள்ளது.

கடந்தமாதம் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் பெய்த கடுமையான மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களால் 15 மாவட்டங்கள் கடுமையாகபாதிக்கப்பட்டிருந்தன. இதில் சிக்கி 212 பேர் உயிரிழந்ததுடன், 79பேர் காணாமல்போயினர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

# தேர்தலைத் தொடர்ந்தும் தள்ளிப்போட அரசு முயற்சி

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 16

பல்வேறு காரணங்களைக் காட்டி உள்ளூராட்சித் தேர்தல்களை நீண்டகாலமாக ஒத்திவைத்துக்கொண்டு வரும் அரசு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் உத்தியோகபூர்வ காலம் முடிவடையுள்ள கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தல்களையும் ஒத்திவைக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதாக கபே அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

சகல மாகாண சபைத் தேர்தல்களும் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும் என்ற காரணத்தைக் காட்டி மேற்கூறிய மூன்று மாகாண சபைக்ளுக்கான தேர்தல்களையும் மேலும் தள்ளிப்போட முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக நாடொன்றில் இவ்வாறான அர்த்தமற்ற காரணங்களை முன்வைத்து தேர்தல்களைத் தாமதிப்பது மக்களின் அடிப்படை மனித உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் மீறும் செயலாகும்.

உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததும் மாகாண சபைத் தேர்தலோ, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலோ உடனடியாக நடத்தப்படவேண்டும் என்பதே சட்டமாகும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் தேர்தலொன்றை ஒத்திவைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால். அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் பிரேரணையொன்று நிறைவேற்றப்படுவ துடன், பொதுமக்களிடம் கருத்துக்கணிப்பொன்றும் நடத்தப்படவேண்டும்.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் இல்லாமல் நொண்டிச் சாக்குகளைக் காட்டி தேர்தல்கள் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டு வருவது மாபெரும் அநீதியாகும்.

எல்லா மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டுமென்பது அரசின் தற்போதைய நிலைப்பாடாக இருக்குமானால், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிந்ததும், எல்லாத் தேர்தல்களையும் ஒரேடியாக நடத்தலாம்.

அதனைத் தொடர்ந்து அவசியமானால் பொதுத் தேர்தலையும், அதில் அரச தலைவர் தேர்தலையும் கூட நடத்தலாம். அதைவிடுத்து அர்த்தமற்ற சாக்குப்போக்குகளைக் கூறித் தேர்தல்களை ஒத்திவைத்துவருவது உண்மையான ஜனநாயகமல்ல எனவும் கபே அமைப்பு கூறியுள்ளது. (த)

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☏ 021- 2227712
Find us on: facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**பெயர்மாற்றம்**

சிவபுரம் கிராஞ்சி பூநகரி, கிளிநொச்சியை வசிப்பிடமாக கொண்ட **குழந்தைவேலு துஷ்பநாதன்** ஆகிய எனது பெயரை இன்று முதல் **குழந்தைவேலு துசியந்தன்** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**குழந்தைவேலு துசியந்தன்**

**பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - புனர்வாழ்வு அதிகாரசபை**

ஆள்களையும், ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் புனர்வாழ்வு அதிகாரசபையின் வெற்றிடங்களாக உள்ள புனர்வாழ்வு உதவியாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஆகிய பதவிகளுக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

**அ) பதவி - புனர்வாழ்வு உதவியாளர் (01 பதவி)**

**மொழி பெயர்ப்பாளர் (01 பதவி)**

(மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் எழுத, வாசிக்க, பேச, நன்றாகத் தெரிந்திருப்பதுடன் கணினி அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**ஆ) கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் அல்லது முகாமைத்துவத் துறைகளில் பட்டம் பெற்றிருத்தல்.

**இ) சம்பள அளவு**

இப்பதவியானது நிரந்தரமானது.ஊழியர் சேமநல நிதியத்துக்கு உரித்தாவதோடு, ஏனைய அரசினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளையும் பெறத் தகுதியுடையவராவார்.

**ஈ) வயது :-** 05.07.2017 ஆம் திகதியில் 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**உ) வெற்றிடங்கள் காணப்படுகின்ற மாவட்டங்கள்**

**01) புனர்வாழ்வு உதவியாளர் - முல்லைத்தீவு ( 01 பதவி)**

மேற்படி மாவட்டத்துடன் ஏனைய மாவட்டங்களிலும் சேவை புரிவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

**02) மொழி பெயர்ப்பாளர் - பிரதான அலுவலகம், கொழும்பு**

விண்ணப்பதாரர்களில் கூடிய கல்வித் தகைமையும் அனுபவமும் கொண்டவர்களை மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களிலும் சேவையாற்றுவோர் தங்கள் திணைக்களத் தலைவர் ஊடாகத் தமது விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் **"தலைவர், புனர்வாழ்வு அதிகாரசபை, இல.356B 2/2, கால்வில் இடம், கொழும்பு - 03"** என்னும் முகவரிக்கு **05.07.2017** ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். குறைபாடுள்ள விண்ணப்பப் படிவங்கள் அல்லது குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் இடப்படும் உறையின் இடதுபக்க மேல்மூலையில் உரிய பதவி தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர், புனர்வாழ்வு அதிகாரசபை, இல.356B2/2, கால்வில் இடம், கொழும்பு -03**

**துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்**

வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 17.06.2017 இல் **இருந்து** 21.06.2017 **வரை**

**ஞானவைரவர் ஆலயம், கலாசாலை வீதி,**
**2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு,**
யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

★ **20.06.2017 செவ்வாய்க்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.**

**பூசை நேரம்:** முற்பகல் **10.30 - 12.30 மணிவரை**
மாலை **5.30 - 6.30 மணிவரை**
**குறிப்பு:** **கலாசார உடையுடன் வருகை தரவும்.**
**தொடர்பு:** **021 221 9127, 077 801 2226**

(CS /4907)

**அறிவித்தல்**

**நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம்**
**ஆதனப் பெயர்மாற்றம்**

407/4 , அரியாலை வீதி, வட்டாரம் - 12

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் -12 இல. 407/4, அரியாலை வீதி, எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனம் எமது பதிவேட்டின் பிரகாரம் M.குமாரசாமி எனும் பெயரில் காணப்படுகின்றது.

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவில் பற்று, அரியாலை கிழக்கு இறை **"வட்டர் வளவு"** நிலப்பரப்பு 14 குளி 09.70 இது நில அளவையாளர் பி.புஸ்பராஜா அவர்களால் வரையப்பட்ட 3524/16.04.2012 ஆம் இலக்க நில அளவை படத்தில் 01 ஆம் இலக்கத் துண்டாக காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனமானது சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திருமதி சுதா கஜேந்திரகுமார் அவர்களால் வரையப்பட்ட 327/12.07.2012 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் குமாரசாமி சண்முகதாஸ் என்பவருக்கு பிதா வழி முதுசமாக வந்தடைந்த ஆதனம் என்றும் அவரது மரணத்திற்குப்பின் அவரது பிள்ளைகளான சண்முகதாஸ் சிவதர்சன், சண்முகதாஸ் பிரியதர்சன் என்பவர்கள் தங்களை வந்தடைந்ததாகவும் குறித்த அறுதி உறுதி, தாய் உறுதிகள் என்பன நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக தொலைந்து விட்டதென்றும் வெளிப்படுத்தியுள்ளனர்.

பின்பு இவ் ஆதனமானது அதே சட்டத்தரணியால் வரையப்பட்ட 342/23.07.2012 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் சண்முகதாஸ் சிவதர்சன், சண்முகதாஸ் பிரியதர்சன் என்பவர்களிடமிருந்து சண்முகலிங்கம் பெண் பரமேஸ்வரி என்பவரை வந்தடைந்தது.

நல்லூர் பிரதேசசபையின் ஆதனப்பதிவேட்டில் குறித்த ஆதனத்தினை தனது பெயரிற்கு மாற்றம் செய்து தருமாறு சண்முகலிங்கம் பெண் பரமேஸ்வரி என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சண்முகலிங்கம் பெண் பரமேஸ்வரி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப் பொறுப் பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்
நல்லூர் பிரதேச சபை
2017.06.16

# தபால் நிலையங்களை சுற்றுலா விடுதிகளாக மாற்றுவது தவறானதா?

## கேள்வி எழுப்புகிறார் ராஜித

கொழும்பு, ஜூன் 16

பழைமை வாய்ந்த தபால் நிலையங்களை ஹோட்டல்களாக மாற்றுவதில் என்ன தவறிருக்கின்றது எனச் சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

தபால் திணைக்களத்திற்கு சொந்தமான பழைமையான கட்டடங்களை சுற்றுலா விடுதிகளாக மாற்றும் முயற்சிக்கு எதிராக தபால் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வரும் நிலையில் ராஜித சேனாரத்ன இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடங்களைச் சுற்றுலா விடுதிகளாக மாற்றுவது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித, இது தவறல்ல எனவும், வெளிநாடுகளில் இவ்வாறு பழைய தபால் நிலையங்கள் சுற்றுலா விடுதிகளாக மாற்றப்பட்டமைக்கான சில உதாரணங்களையும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலிய தபால் நிலையத்தின் பழமை மற்றும் அதன் பெறுமதி தொடர்பில் நாம் அறிவோம். அதேபோல் காலியிலும் பல நூற்றாண்டு பழமை வாய்ந்த தபால் நிலையம் காணப்படுகின்றது. எனினும் அவற்றை அவ்வாறே பேணியவாறு அவற்றை ஹோட்டல்களாக மாற்றியமைப்பதில் என்ன தவறிருக்கின்றது. தபால் நிலையங்களை சுற்றுலா விடுதிகளாக மாற்றுவது இது முதன்முறையல்ல. வொஷிங்டன் நகரின் பென்சில்வேனியா வீதியிலுள்ள டிரம்ப் இன்டர்நெஷனல் ஹோட்டல் 1899ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட தபால் நிலையமாகும்.

1924 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 'த ப்லர்டர்ன் சிங்கப்பூர் ஹோட்டல்'1896 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட தபாலகமே, ஜேர்மனியின் 'த சொபிடெல் மியுனிக் பெயார்போஸ்ட் ஹோட்டல்' பழைய தபால் நிலையமே, எஸ்டோனியாவின் 'த ஹோட்டல் டெலிக்ராப்' நியூஸிலாந்தின் 'த டிஸ்டின்க்சன் டியுனேடின், சுவீடனின் 'க்லெரியன் ஹோட்டல் போஸ்ட்' ஆகியனவும் தபால் நிலையங்களே. நாம் இன்னமும் தீவிற்குள்ளேயே இருக்கின்றோம் - என்றார். (த)

# மருத்துவச் சபையின் நிரந்தரத் தலைவராக காலோ பொன்சேகா

## சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 16

இலங்கை மருத்துவ சபையின் நிரந்தரத் தலைவராகப் பேராசிரியர் காலோ பொன்சேகா நியமிக்கப்படவேண்டுமென அரச மருத்துவர்கள் சங்கம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பேராசிரியர் காலோ பொன்சேகாவின் தலைமைப்பதவியை அவ்வப்போது தற்காலிகமாக நீடிக்கப்பட்டு வருவதை விடுத்து அவரது பதவி நிரந்தரமாக்கப்படவேண்டுமெனச் சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக இலங்கை அரச மருத்துவர் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் நவீன் டீ சொய்ஸா தெரிவித்தார். (த)

# நல்லிணக்கத்தை சீர்க்குலைப்பதற்கு இடமளிக்க முடியாது

## வன்முறைகளைக் கட்டுப்படுத்த அனைவரையும் அணிதிரளுமாறு கூட்டு அரசு பகிரங்க அழைப்பு

கொழும்பு, ஜூன் 16

"நல்லிணக்கம்,அமைதி மற்றும் அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் அரசு ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில், இதனைச் சீர்க்குலைக் கும் வகையில் நாட்டில் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகளுக்கு இடமளிக்க முடியாது" என்று அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

வம்முறைகளும், சமூக விரோதச் செயற்பாடுகளும் இடம்பெறாத வகையில் செயற்பட அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்றும் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் கயந்த கருணாதிலக மேற்கண்டவாறு கூறினார்.

இந்த மாநாட்டில் வன்முறைகள் மற்றும் நல்லிணக்கத்தை சீர்க்குலைக்கும் முகமாக நாட்டில் அண்மையகாலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அவர் மேலும் கூறியதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையின் கீழ் செயற்படும் தேசிய ஒற்றுமை அரசானது, கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற தேர்தல்களில் மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆணைகளுக்கு இணங்க எமது நாடு மீண்டும் கடந்தகால மோதல் நிலைமைகளுக்குத் திரும்பாதிருப்பதை உறுதி செய்தல், நல்லிணக்கம், நிலையான சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி நோக்கி எமது தேசத்தை வழிநடத்தல் என்பவற்றில் மிக உறுதியாக உள்ளது.

அண்மைக்காலமாக இஸ்லாமிய வர்த்தக நிலையங்கள், வீடுகள், இஸ்லாமிய மத வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்து நாம் மிகவும் மனம் வருந்துகிறோம். வன்முறையை ஏற்படுத்தும் வகையில் தனிநபர்கள் மற்றும் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் அருவருக்கத்தக்க பேச்சுக்கள் உள்ளிட்ட சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இத்தகைய சம்பவங்களினால் ஏற்பட்ட வாழ்வாதார இழப்புக்கள் மற்றும் சொத்துச் சேதம் தொடர்பாகவும், குறிப்பாக தனிநபர்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள மன வலி, பீதி தொடர்பாகவும் நாங்கள் மிகவும் கவலை கொண்டுள்ளோம்.

வன்முறைகளைத் தூண்டுதல் மற்றும் இழிவுபடுத்தல் போன்ற விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தனிநபர்கள் மற்றும் குழுக்களின் அருவருக்கத்தக்க உணர்வுகள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவை இலங்கைச் சமூகத்தின் பல்லின இன, மதப் பின்னணிகளுக்கு எதிரானவை என்பதை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

நல்லிணக்கம், சமாதான இருப்பு, சட்ட விதிமுறைகள் தொடர்பான இலங்கை அரசின் உடன்பாட்டை மீள் உறுதி செய்வதோடு, முஸ்லிம் சமூகத்தினர், ஏனைய மதங்கள் மற்றும் நாட்டின் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்படும் வன்முறைகள் மற்றும் வெறுக்கத்தக்க பேச்சுக்களை தூண்டுபவர்களுக்கு எதிராக நாட்டின் சட்டத்திற்கு ஏற்ப, உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்ட நடைமுறை அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்குகின்றோம்.

வன்முறைகளில் ஈடுபடுவோர் மற்றும் வன்முறையைத் தூண்டும் அனைத்து தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு எதிராக சட்டத்திற்கேற்ப, எவ்வித காலதாமதமுமின்றி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இத்தகைய சம்பவங்களின்போது குற்றவாளிகளின் சமூக அந்தஸ்து, இன அல்லது மதப் பின்னணி அல்லது அரசியல் சார்புகள் எவற்றையும் கருதாது, எவ்வித பாரபட்சமுமின்றிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

வன்முறைச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை விரைவாக்குமாறு சட்ட நடைமுறை அதிகாரிகள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்குப் பணிப்புரை வழங்குகின்றோம்.

எமது நாட்டினுள் இத்தகைய வெறுப்பைப் பரப்பி வரும் நபர்களுக்கு எதிராக செயற்பட்டு இந்நிலைமையில் அமைதி மற்றும் நிலையான சமாதானத்துக்கு அழைப்பு விடுத்து வரும் சிவில் சமூகத்தினர் மற்றும் மதத் தலைவர்களுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது நாட்டில் நல்லிணக்கம், சமாதான சகவாழ்வு என்பவற்றை மேம்படுத்து தலை நோக்காகக் கொண்ட முயற்சிகளில் இலங்கையர் அனைவரும் தங்கள் செயற்தகு பங்குபற்றலையும், தலைமைத்துவத்தையும் வலியுறுத்துவதற்கான வாய்ப்பாக இதைக் கருதுகின்றோம்.

கௌதம புத்தரின் போதனைகள் ஒற்றுமை, சகிப்புத்தன்மை, மரியாதை மற்றும் இரக்கம் என்பவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. "வெறுப்பு ஒருபோதும் வெறுப்பைத் தடுக்காது; வெறுப்பு அன்பினால் நீங்குகின்றது" என்பது கௌதம புத்தரின் புகழும் கௌரவமும் நிறைந்த வார்த்தைகளாகும். அத்துடன், இது எல்லோருக்கும் வழிகாட்டக் கூடிய ஒரு நித்திய சட்டமாகும்.

இந்த நாடானது, உலகில் சிறந்த மதங்களால் ஆசீர்வாதிக்கப்பட்டநாடாகும். பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் என்னும் சிறப்பு வாய்ந்த மதங்கள், சமாதான ஒத்துழைப்புக் குத் தேவையான வழிகாட்டுதல்கள், மனித மதிப்புகளை நிலைநிறுத்துதல், நேர்மை மற்றும் கடின உழைப்பு என்பவற்றை வழங்குகின்றன. எனவே, இப்பிராந்தியத்தில் இலங்கை தலைசிறந்த நாடாக மீள்கட்டியெழுப்பப்படும் என்றும் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (த)

# 34 மாணவர்களை வகுப்பில் போட்டு தாக்கினார் பிக்கு

## விசாரணை கோரிப் பெற்றோர் போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 16

தம்புள்ளையிலுள்ள பிரபல பாடசாலையொன்றின் பத்தாம் வகுப்பு மாணவர்கள் 34 பேரை மூன்று பிரம்புகள் அடுத்தடுத்து உடையுமளவுக்கு அடித்துக் கொடுமைப்படுத்திய பிக்கு ஆசிரியர் ஒருவர் மீது விசாரணை நடத்தவேண்டுமென அம்மாணவர்களின் பெற்றோர்கள் கல்வியமைச்சிடம் எழுத்துமூல வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இவர் அந்த வகுப்பின் 18 மாணவிகளையும் 16 மாணவர்களையும் வரிசையில் நிற்கவைத்து மூன்று பிரம்புகள் உடையுமளவுக்கு அடித்துள்ளார் எனவும், இதில் காயமடைந்த மாணவ மாணவியர் சிலர் தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருப்பதாகவும், அடியினால் ஏற்பட்ட தழும்புகள் இன்னமும் பலரது உடல்களில் காணப்படுவதாகவும் பெற்றோர்கள் கடிதம் மூலம் முறையிட்டுள்ளனர்.

பாடசாலையில் சிங்களத்தையும் புத்த தர்மத்தையும் கற்பிக்கும் இவர் இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக பாடசாலை முடிந்ததும் பிரத்தியேக வகுப்புகளை நடத்திவந்தார். கடந்த திங்கட்கிழமை அந்த வகுப்புக்கு வந்த 34 மாணவர்களும் குறிப்புப் புத்தகங்களை கொண்டுவரவில்லை என்பதற்காகவே இவ்வாறு கடுமையான தண்டனையை வழங்கியிருக்கிறார் எனவும், மாணவியொருவருக்கு பத்து அடிகளும் மாணவர் ஒருவருக்கு 13 அடிகளும் வழங்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு கொடுத்தால் பாடசாலையின் கௌரவம் பாழாகிவிடும் என்ற அச்சத்தால் தாங்கள் பொலிஸில் முறைப்பாடு செய்யாமல் கல்வியமைச்சுக்கு முறைப்பாடு செய்திருப்பதாகப் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். (த)

# சிறுவர் அதிகார சபையின் உபதலைவர் பதவி நீக்கம்

கொழும்பு, ஜூன்16

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உபதலைவர் சட்டத்தரணி சுஜீவ சமரசிங்க பணிநீக்கம்செய்யப்பட்டுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின் பேரில் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் அவர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள் ளார்.

இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படக் கூடியவகையில் ஆவணங்களைத் தயாரித்து வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பிவைத்த குற்றச்சாட்டின்பேரிலேயே அவர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள் ளார் எனத் தெரியவருகின்றது. (த-ய)

# விச ரசாயனக் காகிதத்தில் அச்சிடப்பட்ட புத்தகங்கள்

## உடன் மீளப்பெறுமாறு கோரிக்கை

பாடசாலைகளில் தரம் ஏழு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் புவியியல் புத்தகம் மாணவர்களின் ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடிய விச இரசாயனத்தினாலான காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் ஹரித்த அளுத்கே குற்றம் சுமத்தியுள்ளார். தொழில்சார் நிபுணர்களின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பி ட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த விச இரசாயனத்தினாலான காகிதத்தால் அச்சிடப்பட்ட 5 இலட்சம் புத்தகங்களுக்கு அரசால் 15 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. குறித்த இரசாயனத்தினாலான புத்தகத்தி னால் சூழல் பாதிப்பு, மாணவர்களின் ஆரோக்கியத்திற்குச் சீர்கேடு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் தற்போது மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கும் 2 இலட்சத்திற்கும் அதிகமான குறித்த புவியியல் புத்தகங்களை மீளப்பெறுவதற்கு அரச தலைவர் விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (த)



# விரைவில் கைதாவார் ஞானசாரர்

கூறுகிறார் ராஜித

கொழும்பு, ஜூன் 16
ஞானசார தேரரைக் கைது செய்வதில் அரசு தீவிரங்காட்டி வருகின்றது. பொலிஸாருக்கு அதற்கான முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பொலிஸார் அவரைக் கைதுசெய்வார்கள்.

இவ்வாறு சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன நேற்று முன் தினம் தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீதிமன்றத்தை அவமதித்தமை, பொலிஸாருக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் இனவாதக் கருத்துகளையும், மதவாதக் கருத்துகளையும் பரப்பி வருகின்றமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுப் பிடியாணை பிறப்பிக்கப்பட் டுள்ள பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்ய 8 பொலிஸ் பிரிவுகள் களத்தில் இறக்கப்பட்டும் அவர் ஏன் இன்னமும் கைதுசெய்யப்படவில்லை?" என்று ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தபோது மேலும் தெரிவித்ததாவது:

ஞானசார தேரர் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. அமைச்சர்களும், அரசும் அவருக்குப் பின்புலமாக இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர்.

அவருக்கு ஆதரவளிப்பதாகக் கூறப்பட்ட அமைச்சர் சம்பிக்க ரணவக்கே அமைச்சரவைக் கூட்டத்தில் ஞானசார தேரர் குறித்து கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

பொறுப்பற்ற விதத்தில் எவரும் கருத்துகளைக் கூறக் கூடாது. அரசுக்கு ஞானசார தேரரைப் பாதுகாக்கும் தேவை ஏன் உள்ளது? அவரைக் கைது செய்வதற்குப் பொலிஸாருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பொலிஸார் அவரைக் கைதுசெய்வார்கள் என்றார்.

ஞானாசார தேரரைப் பாதுகாப்பதில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவும் பின்புலமாக உள்ளார் எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன? என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர,

அமைச்சர்களுக்கு ஞானசார தேரரைப் பாதுகாக்கும் தேவை எதுவும் கிடையாது. வெறுமனே அஸாத்சாலி அவ்வாறான கருத்துகளைக் கூறக் கூடாது. ஞானசார தேரர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றார். (து)



# அரசியல் கட்டமைப்பை பலப்படுத்த தயாராகிறது முற்போக்குக் கூட்டணி

*18 இல் கூடுகின்றது மையக் குழு; உயர்பீடமும் அமைப்பு*

கொழும்பு, ஜூன் 16
தமிழ் முற்போக்குக் கூட்டணியின்மத்தியசெயற்குழுக்கூட்டம் நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதன்போது அரசியல் உயர்பீடமொன்று அமைக்கப்பட்டு அதற்குரிய உறுப்பினர்கள் தேர்வு இடம்பெறவுள்ளதுடன், கூட்டணிக்குரிய கொடியும் இறுதிப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், கூட்டணியின் அரசியல் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்காகச் சகல மாவட்ட, பிரதேசரீதியாக அரசியல் ஒருங்கிணைப்பாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். மத்திய குழுக் கூட்டத்தில் இது பற்றிக் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

"நாட்டில் உள்ள 25 மாவட்டங்களுக்கும், 313 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் அரசியல் ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்படும் பணி ஆரம்பமாகும். நாடெங்கும் உள்ள கூட்டணி அரசியல் ஆர்வலர்கள் இந்தப் பணியில் இணைந்து கொள்ளலாம்" என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான அமைச்சர் மனோ கணேசன் அறைகூவல் விடுத்துள்ளார்.

அதேவேளை, அபிவிருத்திக்கு அப்பால் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்குரிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது. இது பற்றியும் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என பொதுச் செயலாளர் அ.லோரன்ஸ் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மக்களின் நலனைக்கருத்தில்கொண்டு 2015 ஜூன் மாதம் 3 ஆம் திகதி உதயமான தமிழ் முற்போக்குக் கூட்டணியில் ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியவை பங்காளிக் கட்சிகளாக அங்கம் வகிக்கின்றன.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையைப்பெற்ற கூட்டணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குகின்றது. இந்நிலையில், சகல மாவட்டங்களிலிருந்தும் அரசியல் இணைப்பாளர்களை தமிழ் முற்போக்குக் கூட்டணி இணைத்துக்கொள்ளவுள்ளமையானது, வடக்கு, கிழக்கிலும் அது தனது அரசியல் செயற்பாட்டை ஆரம்பிக்கவுள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது என அரசியல் செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (து)

# உற்சவங்களில் யானைகளை பயன்படுத்த தடையில்லை

அரச தலைவர் மைத்திரி அறிவிப்பு

கொழும்ப, ஜூன் 16
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உற்சவங்களில் யானைகளைப் பயன்படுத்துவதை ஒருபோதும் நிறுத்தப்போவதில்லை என அரசதலைவர் தெரிவித்தார்.

அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்ற, கண்டி தலதா மாளிகை வளாகத்தை அண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க விகாரைகளின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே அரச தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

உற்சவங்களுக்கு யானைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமமான சூழ்நிலை காரணமாகப் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

பின்னவெல மற்றும் யானைகள் காப்பகத்தில் காணப்படும் பழக்கப்பட்ட யானைகளை இதன் பொருட்டு உபயோகிப்பதற்கு தேவையான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்.

தற்போது நீதி மன்றத்தின் பொறுப்பில் காணப்படும் பெரஹறா நிகழ்வுகளுக்குப் பொருத்தமான யானைகளை ஒப்பந்தங்கள் மூலமாக பெற்றுக்கொள்வதற்கு அனுமதியளித்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டும் என அரச தலைவர் மேலும் குறிப்பிட்டார். (து-ய)

# மத்திய வங்கிப் பணப் பரிமாற்றங்கள்; மற்றுமொரு கணக்காய்வுக்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 16
இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் காலப்பகுதியில்மத்தியவங்கியில் இடம்பெற்ற பணப்பரிமாற்றங்கள் பற்றிய மற்றுமொரு கணக்காய்வை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிணைமுறி விவகாரம் தொடர்பில் விசாரணை செய்துவரும் அரச தலைவர் ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஆணைக்குழுவின் அமர்வின்போது அரச கணக்காய்வாளரான காமினி விஜேசிங்கவுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன், இதற்கு முன் நடந்த கணக்காய்வுப் பரிசோதனையின் இரகசியத் தன்மையைக் காப்பாற்றுவதற்காக மத்திய வங்கி, கணக்காய்வாளர் திணைக்களத்துக்கு வழங்காமல் நிறுத்திவைத்த சகல தகவல்களையும் புதிய கணக்காய்வின் போது கணக்காய்வாளர் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கவேண்டுமென ஆணைக்குழு தற்போதைய மத்திய வங்கி ஆளுநருக்கும் உத்தரவிட்டுள்ளது.

மூத்த உயர்நீதிமன்ற நீதியரசர்களான கே.டி.சித்திரசிறி (தலைவர்), பிரசன்ன எஸ். ஜயவர்தன மற்றும் ஓய்வுபெற்ற பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் கந்தசாமி வேலுப்பிள்ளை ஆகியோரைக்கொண்ட ஆணைக்குழுவின் முன்னிலையிலேயே விசாரணை நடந்து வருகின்றது. (து)

# அமைச்சரவை முடிவுகள் ரூபவாகினியில் ஒளிபரப்பு

கொழும்பு, ஜூன் 16
அமைச்சரவையின் முடிவுகள் தேசிய ரூபவாகினியில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படுமென அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி ரங்க கலன்சூரிய தெரிவித்தார்.

முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஒளிபரப்பு ஒரு மணித்தியாலத்துக்கு நீடிக்கும் எனவும், அதன் மூலம் பொதுமக்கள் அமைச்சரவை முடிவுகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளலாம் எனவும் அவர் கூறினார். (து)

# மின்னஞ்சல், இணையத்தளம் மூலம் மக்களின் துன்பங்கள் மைத்திரிக்கு

கொழும்பு, ஜூன் 16
பொதுமக்கள் தங்களது துன்பங்களையும், பிரச்சினைகளையும் அரச தலைவரின் மின்னஞ்சல் மற்றும் இணையத்தளம் மூலமாக அவருக்கு நேரடியாக அறிவிக்கச் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அரச தலைவர் செயலகம் தெரிவித்துள்ளது. சிறிலங்கா மொபிடெல் நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் "அரச தலைவரிடம் சொல்லுங்கள்' என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தச் சேவை, அரச தலைவரிடம் இன்னும் ஓரிரு தினங்களில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத் தலைவர் குமாரசிங்க கூறினார்.

இவ்வாறு கிடைக்கும் முறைப்பாடுகள், பிரச்சினைகள், ஆலோசனைகள் போன்றவை அரசதலைவர் செயலகத்தின் பொதுமக்கள் இணைப்புப் பிரிவின் மூலம் உடனுக்குடன் ஆராயப்பட்டுச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# காணாமற்போனோர் செயலகம்; 21ஆம் திகதி முழுநாள் விவாதம்

கொழும்பு, ஜூன் 16
காணாமற்போனோருக்கான செயலகம் நிறுவும் சட்டவரைவு தொடர்பாக எதிர்வரும் 21ஆம் திகதி முழுநாள் விவாதம் நடத்துவதற்குக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோருக்கான செயலகத்தை அமைப்பதில் காலதாமதம் காட்டப்படுவது தொடர்பில் பல்வேறு தரப்புகளிலிருந்து அரசு மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான சட்டவரைவு நிறைவேற்றப்பட்ட பின்னர், குறித்த செயலகத்தை அமைப்பதற்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் திருத்தச் சட்டவரைவு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால், அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அடுத்த வார நாடாளுமன்ற அமர்வானது எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 23ஆம் திகதி வரை இடம்பெறும். (து)




# 12 பில். டொலர் பெறுமதியான போர் வானூர்திகள் கட்டாருக்கு


## ஒப்பந்தத்தில் அமெ.கைச்சாத்து

ரியாத், ஜூன் 16
வளைகுடா நாடுகளில் நிலவிவரும் பரபரப்பான சூழ்நிலைக்கு நடுவே, அமெரிக்காவிடம் இருந்து 12 பில்லியன் டொலர் மதிப்பிலான எப்.15 ரக ஜெட் வானூர்திகளை வாங்குவதற்கு கட்டார் ஒப்பந்தம் செய்துள்ளது.

ஆயுததாரிகளுக்கு நிதி உதவி செய்கிறது என்று தெரிவித்து, கட்டாருடனான தமது உறவை சவூதி, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம், லிபியா, ஏமன், மாலை தீவுகள் ஆகிய நாடுகள் துண்டித்துள்ளன. மாலைதீவுகளைத் தவிர ஏனைய நாடுகள் கட்டார் தமது வான் மற்றும் கடல் பரப்புக்களை பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ளன. இந்த விவகாரத்தில் அமெரிக்காவும் கட்டாரை கடுமையாகச் சாடி வந்தது. அந்த நாடு ஆயுதக் குழுக்களுக்கு உதவி செய்வதை நிறுத்த வேண்டும் என்றும் எச்சரித்தது.

இந்த நிலையில் கிட்டத்தட்ட 12 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான போர் வானூர்திகளை கட்டாருக்கு விற்கவும் முடிவு செய்துள்ளது. இந்த ஒப்பந்தம் அண்மையில் வொஷிங்டனில் வைத்து கைச்சாத்தானது என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு எடுத்துரைக்கிறது.

முன்னதாக வளைகுடாவில் உள்ள முக்கிய நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவும், அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் கட்டார் மேற்கொண்ட இந்த ஒப்பந்தம் நிலமையை மேலும் பரபரப்பாக்கியுள்ளது. (ம)



> "மாலைதீவு களைத் தவிர ஏனைய நாடுகள் கட்டார் தமது வான் மற்றும் கடல் பரப்புக் களை பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ளன. இந்த விவகாரத்தில் அமெரிக்காவும் கட்டாரை கடுமையாகச் சாடி வந்தது.

# ஈராக் இராணுவத்தின் தா 22 ஆயுததாரிகள் கொல்

பக்தாத், ஜூன் 16
ஈராக்கின் மோசூல் நகரில் அரச தரப்பு நடத்திய தாக்குதலில் 22 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரும் வர்த்தக நகருமான மோசூல் இருந்தது. இதன் மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 22 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.

இதைத் தவிர ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் 4 வாகனங்கள் அழிக்கப்பட்டன. இந்த வாகனங்கள் முழுவதும் இராணுவத் தளபாடங்களால் நிரம்பியிருந்தது என்று சொல்லப்படுகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நடத்திய பதில் தாக்குதலில் இராணுவச் சிப்பாய்கள் மூவர் உயிரிழந்தனர் என்றும் செய்திகள் வெளியாகின.

முன்னதாக, பிரிட்டனை தலைமை

# சகாராவில் சாலை

சகாரா பாலைவனத்தில் சாவின் விளிம்பிலிருந்த 100 குடியேறிகளை வட நைஜரில் உள்ள படையினர் மீட்டுள்ளனர் என்று அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் அடங்கிய அக்குழுவை கடத்தல்காரர்கள் தண்ணீர் மற்றும் உணவுகளின்றி கைவிட்டு சென்றுள்ளனர். குழுவிலிருந்த குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. ஐரோப்பாவை அடையும் முயற்சியில் மத்திய தரைக்கடலை தாண்டுவதற்குமுன் வட ஆபிரிக்காவை அடைய நைஜரிலிருந்து லிபியாவுக்கு செல்லும் இந்த பாதை குடியேறிகளுக்கு மிகவும் முக்கிய பாதைகளில் ஒன்றாக உள்ளது. எனினும், பாலைவனம் ஊடாக செல்லக்கூடிய இந்த பயணம் குடியேறிகளுக்கு ஆபத்தானது. காரணம், சரக்கு வாகனங்களில் சிறியளவிலான உணவு மற்றும் தண்ணீருடன் குடியேறிகள் திணிக்கப்பட்டு கொண்டு செல்லப்ப



# ஆப்கானுக்கு அமெரிக்கா படை உதவி

தலிபன் ஆயுததாரிகளால் அல்லல்பட்டுவரும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தின் படைகளை அதிகரிக்க அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டார். தற்போதைய நிலவரத்தின்படி 8ஆயிரத்து 400 அமெரிக்கச் சிப்பாய்கள் ஆப்கானிஸ்தானில் உள்ளனர். ட்ரம்பின் உத்தரவை அடுத்து இந்த எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. (ம)

# மதிப்பு மி



மட்ரிட், ஜூன் 16
உலகிலேயே விலையுயர்ந்த பன்றித் தொடையை விற்பனை செய்து வருகிறார் ஸ்பெய்னைச் சேர்ந்த எட்வார்டோ டோனட்டோ. பாரம்பரிய முறைப்படி வளர்க்கப்படும் இந்தப் பன்றி இறைச்சியில் சுவையும் சத்துகளும் அதிகம். ஒரு பன்றித் தொடை இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 7 லட்சத்து 50ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

எட்வார்டோ டோனட்டோ 1989ஆம் ஆண்டு வரை கட்டடத் தொழிலில் பெரும் பணக்காரராகத் திகழ்ந்தார். திடீரென்று அவரது நண்பர்கள் இருவர் புற்றுநோயிலும் மாரடைப்பிலும் உயிரிழந்தனர். இவரது மனமும் மாறியது. "எப்போதும் பரபரப்பாக நகரில் தொழில் செய்யும்போது உடல்நிலை பாதிக்கப்படுகிறது. வாழ்வதற்காகத்தான் தொழில் செய்கிறோம். ஆனால் தொழிலிலேயே வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறோம்.

# பங்களாதேஷ் நிலச்சரிவு இடர்; உயிரிழப்பு எண்ணிக்கை 140

டாக்கா, ஜூன் 16
பங்களாதேஷில் சமீபத்தில் பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 140 ஆக அதிகரித்தது.

வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக பங்களாதேஷின் பல இடங்களில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகின்றது. கனமழை காரணமாக ரங்கமாதி மற்றும் பந்தர்பான் ஆகிய மாவட்டங்களில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. ஏனைய பல இடங்களிலும் நிலச் சரிவுகள் ஏற்பட்டன. இந்த நிலச் சரிவுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 140ஆக அதிகரித்தது. எனினும் மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகின்றன. மீட்கப்பட்டடோரில் சிலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)



# ...ன் தாக்குதலில் ...கால்லப்பட்டனர்

...பட்ட தாக்
...கொல்லப்

...ஐ.எஸ்.
...ள் அழிக்
...கள் முழு
...ங்களால்
...ால்லப்படு
...அமைப்பு
...இராணு
...யிரிழந்த
...வெளியா

...தலைமை

யகமாகக் கொண்டு ஈராக்கில் செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகம்,

மேற்கு மோசூலில் உள்ள சிறுவர்கள் வாழ்வதற்காக அனுதினமும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் மோசமான ஆண்டாக இந்த ஆண்டு பதிவாகும்.

இந்த மனிதப் பேரவலத்தைத் தவிர்ப்பதற்கும் வேண்டிய உதவிகள் செய்வதற்கும் உலக நாள்கள் முன்வர வேண்டும் என்று கவலை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



இந்தியாவின் பாரசனா நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தமது வேலையை முடித்துக் கொண்டு தமது இருப்பிடத்துக்குத் திரும்பிச் செல்லும் ஒளிப்படமே இது. இந்தப் படம் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டுள்ளது. இணையத் தளங்களிலும் இது மிகவும் வைரல். (ம)

# லண்டன் குடியிருப்பில் தீ; உயிரிழப்பு 12ஆக உயர்வு

லண்டன், ஜூன் 16

பிரிட்டனின் தலைநகர் லண்டனில் உள்ள குடியிருப்பு ஒன்றில் நேற்றுமுன்தினம் காலை (இலங்கை நேரப்படி 5 மணியளவில்) ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12ஆக உயர்வடைந்தது.

மேற்கு லண்டனில் உள்ள குடியிருப்புத் தொகுதியான கிரன் பெல்லிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. இரண்டாம் மாடியில் ஏற்பட்ட தீ மிகக் குறுகிய நேரத்துக்குள் கட்டடத்தின் 24 மாடிகளுக்கும் பரவியது என்று சொல்லப்படுகிறது. தகவல் கிடைத்து சில நிமிடங்களில் களத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். '40 வாகனங்களும் 200 தீயணைப்புப் படையினரும் இணைந்து கிட்டத்தட்ட 8 மணிநேரப் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். எனினும் 12 பேர் உயிரிழந்துள்ளனர். கிட்டத்தட்ட 70 பேர் தீவிர காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்று சொல்லப்படுகிறது. குடியிருப்குத் தொகுதியில் இருந்த 120 வீடுகள் முழுவதுமாக எரிந்து சாம்பராயின.

இந்த அசம்பாவிதம் ஏற்பட்டபோது கட்டடத்தில் கிட்டத்தட்ட 600 பேர் இருந்தனர் என்று சொல்லப்படுகிறது. இது தொடர்பான கணக்கெடுப்புக்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ம)



# ... வைச் சந்தித்து மீண்டவர்கள்


...ற்குமுன்
...ய நைஜ
...செல்லும்
...க்கு மிக
...ஒன்றாக
...லவனம்
...ந்த பய
...ஆபத்தா
...கனங்க
...னவு மற
...யறிகள்
...செல்லப்ப



டுவர்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு சகாரா பாலைவனத்தில் சரக்கு வாகனம் ஒன்று பழுதடைந்ததை அடுத்து நாற்பதற்கும் மேற்பட்ட குடியேறிகள் தண்ணீரின்றி உயிரிழந்தனர். கடந்த ஜூன் மாதம் 20 குழந்தைகள் உள்பட 34 குடியேறிகளின் உடல்கள் சஹாரா பாலைவனத்திற்கு அருகே நைஜர் எல்லை உடனான அல்ஜீரியாவில் கண்டறியப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ...பு மிக்க பன்றித் தொடை



...லையுயர்ந்த பன்
...விற்பனை
...ஸ்பெய்னைச்
...டோனட்டோ.
...படி வளர்க்கப்
...இறைச்சியில்
...ளும் அதிகம்.
...ட இலங்கை
...ட 7 லட்சத்து
...க்கு விற்பனை

...டோனட்டோ
...வரை கட்டடத்
...பணக்காரரா
...ரென்று அவ
...இருவர் புற்று
...ப்பிலும் உயி
...மனமும் மாறி
...ரபரப்பாக நக
...ய்யும்போது
...க்கப்படுகிறது.
...ான் தொழில்
...ால் தொழிலி
...க்கையைத்
...டுகிறோம்.

போதும் இந்த ஆரோக்கியமற்ற வாழ்க்கை என்று முடிவு செய்தேன். எல்லாவற்றையும் விற்றுவிட்டு, ஹயல்வா கிராமத்துக்கு வந்து சேர்ந்தேன். மலை, காடுகள், மழை, உயிரினங்கள் என்று ரம்மியமாக இருந்தது. 5 ஆண்டுகளை இயற்கையைக் கற்பதிலும் ரசிப்பதிலும் செலவிட்டேன்.

பிறகு நான் சாப்பிடுவதற்காகப் பன்றி வளர்க்க ஆரம்பித்தேன். 2005ஆம் ஆண்டு புது வகை பன்றியை வளர்க்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டது ஸ்பெய்ன் அரசு. மிக மெதுவாக வளரும், கறியும் குறைவாகக் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் எவரும் அதை வளர்க்க விரும்பவில்லை. நான் வளர்த்தேன். என்னுடைய பன்றி களும் அந்தப் பன்றிகளும் சேர்ந்து இன்னொரு புது வகைப் பன்றிகளாக உருவாகின. அப்போது பணம் சம்பாதிக்கும் எண்ணமில்லை. ஆனால் இன்று உலகிலேயே அதிக விலை மதிப்புமிக்க பன்றிக் கறியை விற்பவனாக மாறிவிட்டேன். ஆண்டுக்கு 80 பன்றித் தொடைகளை மட்டுமே விற்பனை செய்கிறேன். பன்றிகள் தினமும் 14 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று இரை தேடுகின்றன. தூய்மையான காற்றை சுவாசிக்கின்றன. 3 ஆண்டுகளில் முதிர்ச்சியடைகின்றன. பத்து வயதை அடைந்த பிறகே இறைச்சிக்குப் பயன்படுத்துகிறேன். உலகிலேயே சுவையான பன்றி இறைச்சி என்று மிகச் சிறந்த சுவைஞர்கள் 10 பேர் சான்றளித்துள்ளார்கள். உணவுக் கண்காட்சியில் 130 நாடுகளைச் சேர்ந்த 45 ஆயிரம் பேர் எனது பன்றிகளின் இறைச்சியை மிகச் சிறந்த பன்றி இறைச்சி என்று தேர்வு செய்திருக்கிறார்கள். 'உலகின் விலையுயர்ந்த பன்றித் தொடை' என்று கின்னஸ் சான்றிதழ் வழங்கியது. அதை நான் விரும்பவில்லை. 'உலகின் மதிப்புமிக்க பன்றித் தொடை' என்று வழங்குமாறு கேட்டுக்கொண்டேன்" என்கிறார் எட்வார்டோ. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# ஆண்டுகள் 3 கடந்தும் தொடரும் அச்சம்

இலங்கையின் வரலாற்றில் இன்னொரு கரும் புள்ளியாக அமைந்த அளுத்கம இனக்கலவரங்கள் இடம்பெற்று இரண்டு, மூன்று வருடங்களாகியுள்ளன.

இந்த மூன்று வருடங்களில் அந்த மக்களுக்கு நீதி வழங்கப்பட்டதா, அதனைவிட அன்றைய அச்சசூழ்நிலை போக்கப்பட்டு அவர்கள்தங்கள்தேசத்தின்ஒரு பகுதியாக கருதும் நிலை ஏற்படுத்தப்பட்டதா என்ற கேள்விக்கு ஏமாற்றமான பதிலே கிடைக்கின்றது.

கடந்த வாரம் ஆங்கில பத்திரிகையொன்றுக்கு கருத்துத் தெரிவித்திருந்த அளுத்கம மக்கள் நாங்கள் மீண்டும்அதுபோன்றவன்முறையொன்று இடம்பெறலாம் என்ற அச்சத்துடனேயே வாழ்கிறோம் எனத் தெரிவித்திருந்தமை முக்கியமானது.

ஜூன் 2014இல் இடம்பெற்ற வன்முறைகளால் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள், சொத்து அழிப்புகள் மனதை விட்டு அகலாதவை.

பௌத்த சிங்கள மக்களின் மனதில் அச்சத்தையும் வெறுப்பையும் விதைப்பதற்கு தொடர்ச்சியச் சில சக்திகள் மேற்கொண்ட விளைவு எவ்வாறானது என்பதை அந்த வன்முறைகள் காண்பித்திருந்தன.

2014 ஜூன் சம்பவத்துக்கான விதை பல காலங்களுக்கு முன்னரே விதைக்கப்பட்டிருந்தது. பல மாதங்களாக முஸ்லிம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட விசமப் பரப்புரைகளின் விளைவாகவே அந்த வன்முறைகள் இடம்பெற்றன.

பௌத்த சிங்கள பெரும்பான்மை சமூகத்தின் அரசியல் பொருளாதார கலாசார நலன்களுக்கு முஸ்லிம் சமூகத்தால் ஆபத்து என பரப்பப்பட்ட பொய்யான ஆதாரமற்ற கருத்துகள் இறுதியில் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.

முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான விசப் பரப்புரைகளையும் வன்முறைகளையும் முன்னெடுத்தவர்கள் பௌத்த மதத்தின் ஒரு மிகச்சிறிய பிரிவினரே என்றபோதிலும்அன்றுஅவர்களைகண்டிப்பதற்குபௌத்த மதத்தின் உயர்பீடத்திலிருப்பவர்கள் தயங்கினர்.

இன்றும் அதேநிலை தொடர்வது வேதனைக்குரியது.

முன்னைய அரசைப்போல இல்லாமல் சிறிசேன அரசு சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான வெறுப்பைத் தூண்டும் பேச்சுகளுக்கு எதிராக சிறிய அளவிலாவதுநடவடிக்கைஎடுக்கமுயல்வதாகஆகக் குறைந்தளவில் நாடகமாவாது ஆடுகின்றது. முன்னைய அரசின்காலத்தில்வெறுப்பை பகைமையைத் தூண்டுபவர்கள் முற்றாக சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்என்று ஒப்பிடும்போது மட்டுமே இந்தஅரசின்நடவடிக்கைமீதுநிம்மதி கொள்ள முடியும். ஆனால் இந்த அரசிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்டது இதுவல்ல என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதனை விட முக்கியமான ஒரு விடயம் நம் கவனத்திலிருந்து தப்பியுள்ளது. அன்றுபோல இன்றும் பௌத்தமதத்தின் உயர்பீடத்தில் இருக்கின்ற மகாநாயக்கர்கள் கடும் மௌனம் சாதிக்கின்றனர். முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பகைமையைத் தூண்டும் கருத்துகளை அவர்கள் உரத்த குரலில் கண்டித்ததைக் காணமுடியவில்லை.

இலங்கை ஆபத்தான பாதையில் பயணிப்பதை நோக்கிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் பௌத்தமத குருமார்களை பௌத்தத்தின் அடிப்படைகளுக்குத் திரும்புமாறு அவர்கள் வேண்[illegible] விடுத்ததைக் காண[illegible]வில்லை.

# காலம் கனியும்வரை காத்திருந்து செயற்படும் அரசியல் உத்தி

ராஜா

“ஓடு மீனோடி உறு மீன்வரும்வரைக்கும் வாடியிருக்குமாம் கொக்கு” என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை உரிய வேளையில் நடத்தாது, தொடர்ந்து அதனைப் பிற்போட்டு வருவதாக அரசின் மீது பல தரப்புக்களாலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன; முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சு மேற்கொண்டு முடித்துள்ளதாகத் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்துக்கான திருத்தங்களுடன் கூடிய சட்ட மூலத்தை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயலரிடம் கையளிக்கும் நிகழ்வில் வைத்து அமைச்சர் பைசர் முஸ்தபா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.



### தேர்தல் பிற்போடப்படுவதாகக் குற்றச்சாட்டு

உள்ளூராட்சித் தேர்தலை அரசு பிற்போட்டு வருவது தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சு மீதும், தேர்தல்கள் ஆணையாளர் மீதும் தொடர்ச்சியாகக்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவந்தன. உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தின்படி எல்லை நிர்ணய அறிக்கையில் சிக்கல்கள் காணப்பட்டதால், அவற்றுக்கான திருத்தங்களை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டிருந்தது. அத்தகைய திருத்தங்களுடன் கூடிய தேர்தல் தொடர்பான சகல வர்த்தமானி அறிவித்தல்களும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதே போன்று குறித்த சட்டத்தில் காணப்பட்ட குறிப்பிட்ட வேறு சிக்கல்கள் சிலவற்றின் மத்தியிலும், திருத்தச் சட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அத்தகைய நடவடிக்கைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு, குறித்த சட்ட மூலத்துக்கான அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டு, தற்போது நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சபை முதல்வரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் குறித்த தேர்தலை நடத்துவதில் எதுவித இடையூறும் ஏற்படப் போவதில்லை. அந்தவகையில் இந்த ஆண்டு முடிவடைவதற்குள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நிச்சயம் அரசால் நடத்தி முடிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அமைச்சர் பைசர் முஸ்தபா அந்த வேளையில் விளக்கமளித்திருந்தார்.

### தோல்வி குறித்த அச்சம் அரசுக்குண்டு என விமர்சிப்பு

குறித்த தேர்தலில் தோல்வியுற்றுவிடுவோம் என்ற அச்சத்தின் காரணமாகவே அரசு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைப் பிற்போட்டுவருவதாகப் பலதரப்புக்களிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, தொகுதிவாரிமுறைமையின்கீழா அல்லது விகிதாரசார முறைமையின் கீழா குறித்த தேர்தல்நடத்தப்படுமென்றஐயம்பொது மக்கள் தரப்பில் நிலவி வருகின்றது. குறித்த தேர்தலைப் பிற்போடுவதற்கான தேவை எதுவும் அரசுக்குக் கிடையாது. கடந்த தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைய தொகுதிவாரிமுறையில் குறித்த தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச தலைவரும் எமக்கு அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவித்த அமைச்சர் பைசர் முஸ்தபா, தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதி தொடர்பாக எதுவித பிரச்சினையும் கிடையாதெனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எது எப்படியோ, குறித்த தேர்தல் பிற்போடப்பட்டு வருவது குறித்து அரசு தரப்பில் இத்தகைய விளக்கங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலும், தேர்தலை நடத்தி அதில் வெற்றியீட்டுவதற்கான உரிய அரசியல் சூழலை எதிர்பார்த்தே அரசு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை இவ்விதம் தொடர்ச்சியாகப் பிற்போட்டு வருகிறது என்பதை அரசியல் அனுபவம் வாய்த்தோர் நன்குணர்ந்துள்ளனர் என்பதே யதார்த்த உண்மை.

### தேர்தல் குறித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரது விளக்கம்

அதே வேளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்யும் சில மாகாணசபைகளது பதவிக்கால முடிவில், குறித்த மாகாண சபைகளுக்குப் புதிதாகத் தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு திகதியொன்றை நிர்ணயிக்கும் எனவும், குறித்த மாகாண சபைகளுக்கான தேர்தல் எந்த வகையிலும் பிற்போடப்பட மாட்டாதெனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவ்விதம் மாகாண சபைகளுக்கான தேர்தலொன்றைப் பிற்போடுவதாயின், அது பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலமோ அல்லது நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலமோ தான் பிற்போடப்படமுடியும். எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார்.

“தேர்தல்கள் ஆணைக்குழுவில் நான் உட்பட மூன்று உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றோம். தேர்தல்களை நடத்துவதற்கான உரிய திகதி குறித்த தீர்மானத்தை நாம் மூவரும் இணைந்தே மேற்கொள்வோம்” எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

வாக்காளர் இடாப்பு வாக்களிப்புக்காக மட்டுமன்றி நாட்டில்பிரஜாஉரிமைக்கு உருத்துக்கோர மற்றும் நிவாரணங்களைப் பெறுவதற்கான உருத்தை நிரூபிக்க பொது மக்களுக்கான பெறுமதி மிக்க ஆவணம். தற்போது வாக்காளர் இடாப்பைத் தயாரிக்கும் பணி முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. அண்மைய இயற்கை பேரிடர் காரணமாக அப்பணி எதிர்வரும் ஜுலை 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை உறுதிப்படுத்திக் கையளிக்க வேண்டியது வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைவரது கடமையாகும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல் அடுத்து நடத்தப்படுமென்பதை மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சர் மகிந்த அமரவீரவும் உறுதிப்படுத்தியுள்ளார். பொதுமக்களது விருப்பின்படி தொகுதிவாரி தேர்தல் முறைமையின் கீழேயே அடுத்துவரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படும். அதேவேளை எத்தகைய குற்றச்சாட்டுக்கும் உட்படாத, தூய்மையான வேட்பாளர்களையே தேர்தலில் களமிறக்கி வெற்றியைத்தேடிக் கொள்வதும், தேர்தல் மூலம் புத்திஜீவிகளான அரசியல்வாதிகளை உருவாக்குவதுமே அரசின் எதிர்பார்ப்பு எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர கருத்து வெளியிட்டிருந்தார். எது எப்படியோ அரசியலில், நேர்மைக்கும், கனவான்தனத்துக்கும் இடமில்லை என்பது அண்மைக்கால அரசியல் சம்பவங்கள் புலப்படுத்தும் உண்மையாகும். அந்த வகையில் இவையாவும் “பேசுப்பல்லக்கு, தம்பி கால்நடை” என்பதற்கொப்ப, அரசியல்வாதிகளது தருணத்துக்கேற்ற கருத்து வெளிப்பாடுகள் என்ற வகையில் கொள்ளத்தக்கவையே.

சேரலாதன்

# சுட்டிக்காட்டி தட்டிக் கேட்டு நேர்வழிப்படுத்துபவை ஊடகங்கள்

"பொய்யான தகவல்களைக் கூறினால் தூக்கி அடித்துக் கொன்றுவிடுவேன்" என ஊடகவிலயாளர்களைப் பார்த்து அமைச்சர் ஜோன் அமரதுங்க மிரட்டினார் எனச் செய்திகள் கசிந்துள்ளன. அமைச்சர் தகாத வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தமக்கு எதிரான செய்திகள் வெளியாகும்போது அரசியல்வாதிகளுக்குச் சினம் ஏற்படுவது வழக்கமான ஒன்றுதான்.

உலகில் உள்ள மக்கள், ஊடகங்கள் வாயிலாகவே உலக நடப்புக்களைத் தெரிந்து கொள்கிறார்கள். ஊடகவியலாளர்கள் இரவும், பகலும் ஓய்வின்றி உழைப்பதன் பயனாகவே இது சாத்தியமாகின்றது. தொழில்களிலேயே ஊடகத்தொழில்தான் மிகவும் கடினமானதொன்று என்பதை எவருமேமறுக்க முடியாது.



ஆனால் ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் தமக்குப் பாதகமான செய்திகள் ஊடகங்களில் வெளிவரும்போது கொதித்துப் போகின்றனர். சினத்தின் உச்சத்துக்கேசென்றுவிடுகின்றனர்.

சிலவேளைகளில் குறித்த செய்தியை வெளியிட்ட ஊடகவியலாளர் காணா மல் போகச்செய்யப்படுகின்றார். அல்லது கொலை செய்யப்படுகின்றார். உலகில் இதுவரை ஆயிரக்கணக்கான ஊடகவியலாளர்கள் எதிராளிகளால் கொலையுண்டுள்ளனர். இந்த வகையில் எமது நாடும் இதற்கு விதிவிலக்காக இருந்து விடவில்லை. அதிலும் கடந்த ஆட்சியில் ஊடகவியலாளர்கள் எதிர்கொண்ட சோதனைகளும், வேதனைகளும் ஏராளம். பலர் கொலை செய்யப்பட்டனர். அதிக எண்ணிக்கையானவர்கள் காணாமற்போயுள்ளனர். இவர்களை இவர்களது உறவினர்கள் இன்னமும் தேடிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

### அரசியல் தலைவர்களுக்கு ஊடகங்கள் என்றால் ஒவ்வாமை

அதீத ஜனநாயக வளர்ச்சி கொண்ட நாடெனக் கருதப்படும் அமெரிக்காவின் அரசதலைவராக அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்ட டொனால்ட் ட்ரம்ப் ஊடகங்களுக்கு எதிரான போக்கையே கடைப்பிடித்து வருகின்றார். அரசதலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இடம்பெற்றபோது ட்ரம்பின் பலவீனங்களை ஊடகங்கள் வெளியிட்டதால் அவர் இந்த நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளார் எனக் கருத முடிகின்றது.

வடக்கு முதலமைச்சர் கூட ஊடகங்களை ஒதுக்கி வைத்து விடுகின்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார். ஊடகங்களில் வெளிவருகின்ற விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க முடியாதநிலையில்அவர்உள்ளதை அண்மைச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வடக்கு மாகாணசபையின் அமைச்சர்களுக்கு எதிரான விசாரணையின் போது ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. பின்னர் விசாரணை அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும்போதும் ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட வேண்டுமென முதலமைச்சர் கேட்டுக் கொண்டார் எனவும், ஆனால் மாகாண சபை உறுப்பினர்களில் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் அவர் பின்வாங்கினார்எனவும்தெரியவருகின்றது. அதேவேளை சில ஊடகங்கள் அவருக்குத் துதிபாடுவதையேவழக்கமாகக் கொண்டிருக்கின்றன. இதைத்தான் முதலமைச்சர் விரும்புகின்றாரோ என்பது தெரியவில்லை.

### ஊடகங்களின் விமர்சனங்களுக்கு அச்சப்படுகின்றனர் அரசியல்வாதிகள்

ஊடகங்களின் கடுமையான விமர்சனங்களுக்கு முகம்கொடுக்க முடியாமல்பதவிகளைப்பறிகொடுத்த ஆட்சியாளர்களும் இல்லாமலில்லை.

ஆனானப்பட்ட அமெரிக்காவின் அரச தலைவராக இருந்த ஒருவரே இவ்வாறு பதவியை இழந்திருக்கின்றார்.

தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்ட விவகாரத்தில் மாட்டிக் கொண்ட முன்னாள் அமெரிக்க அதிபர் றிச்சாட் நிக்ஸன் ஊடகங்களின் விமர்சனங்களை எதிர்கொள்ள முடியாத நிலையில் தமது பதவியைத் துறக்க நேரிட்டது. வேறு சில நாடுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன.


உயிரைத் துச்சமென மதித்துப் போர் முனைகளில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பலர் தமது இன்னுயிர்களை இழந்திருக்கின்றனர். பயங்கரவாதிகளும் தமக்கு எதிரான ஊடகவியலாளர்கள் பலரைக் கொன்றிருக்கின்றனர். இதில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினர் முதன்மையானவர்கள். இவர்கள் கொடிய வழிமுறைகளைக் கையாண்டு பல ஊடகவியலாளர்களைக் கொன்றுள்ளனர்.


### ஊடகங்கள் ஜனநாயகத்தின் ஆணிவேர்

ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதில் ஊடகங்கள் முக்கிய பணிகளை ஆற்றி வருகின்றன. ஊடகங்கள் ஜனநாயகத்தின் ஆணிவேரெனக் கருதப்படுபவை. அரசு ஒன்றின் குறைகளை ஊடகங்கள் சுட்டிக் காட்டுவதன்மூலமாக அவற்றைக்கட்டுப்படுத்த முடியும். ஆனால் ஆட்சியாளர்களக்கு இது உவப்பாக இருப்பதில்லை. இதன் காரணமாகவே ஊடகவியலாளர்களுக்குத் தீங்கிழைக்கப்படுகின்றது.

இதேவேளை நடுநிலையைக் கடைப்பிடித்துச் செய்திகளை வெளியிட வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. ஆனால் பக்கச் சார்பான முறையில் செய்திகளை வெளியிடுகின்ற ஊடகங்களின் எண்ணிக்கை இன்று அதிகரித்துக் காணப்படுகின்றன. அதிலும் அரசுகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் ஊடகங்களைக் கொண்டிருக்கும்போது பக்கச்சார்பான செய்திகள் வெளிவருவதைத் தவிர்க்க முடியாது. ஆனாலும் சில ஊடகங்கள் தாமாகவே பக்கச்சார்புடன் செய்திகளை வெளியிட்டு மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி வருகின்றன. ஊடகத் தர்மத்துக்கு இது நேர் விரோதமானது. ஊடகங்கள் தொடர்பாக மக்கள் நம்பிக்கை இழப்பதற்கும் இது காரணமாகிவிடுகின்றது.

ஊடகவியலாளன் ஒருவனின் பேனாவுக்கு உள்ள ஆற்றல் அளப் பரியது. அவன் தனது எழுத்தைச் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதைப்போன்று ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் மதிப்பளிக்கத் தவறக் கூடாது.





## ஆசிரியருக்கான கடிதம்

### இறைவழிபாட்டில் அமைதி அவசியமானது

யாழ். குடாநாட்டின் இந்துக் கோவில்களில் 'திருவிழா சீசன்' ஆரம்பமாகிவிட்டது. வருடாந்தத் திருவிழா வரிசையில் கொடியேற்றம் முதல் தீர்த்தோற்சவம் வரையான திருவிழாக்கள், அலங்காரத் திருவிழாக்கள், போதாதற்கு குடமுழுக்கு உற்சவங்கள் என இவை தடபுடல்படும்.

நகரப் புறங்களை விட கிராமப்புறங்களின் கோயில்களில் இடம் பெறும் இத்தகைய திருவிழாக்கள் களை கட்டுவது வழக்கம். தத்தம் பகுதிகளிலுள்ள கோயில்கள் மீது, அங்கு கோயில் கொண்டிருக்கும் தத்தமது இஷ்ட தெய்வங்கள் மீது தீவிர பக்தியும் நம்பிக்கையும் வைத்திருக்கும் பக்தர்கள், திருவிழாக் காலங்களில் விரதமிருந்தோ, தூய்மை பேணியோ, தத்தமது கோவில் திருவிழாக்களில் பத்தி பூர்வமாகக் கலந்து கொள்வதன் மூலமோ, ஆண்டவன் அனுக்கிரகம் வேண்டி வழிபடுவது இன்று நேற்று என்றல்லாது, ஆண்டாண்டு காலமாகத் தொடரும் வழக்கம்.

இறைவழிபாடுகள் மனிதர்களை நல்வழிப்படுத்துபவை; அலைபாயும் மனதுக்கு கவலையால் வாடும் மனதுக்கு, ஒத்தடம் தருபவை; மன ஆறுதலை அளிப்பவை; இதில் எவராலும் குறைகாண இயலாது; குறைகாண முயல்வதும் தவறு,

இதில் மனதை வருத்தும், நெருடும்

விடயம் இதுதான். கால ஓட்டத்தில் நாம் பல வழிகளிலும் மாற்றங்களால் உள்வாங்கப்பட்டிருக்கிறோம். அடியார்களுக்கு அமைதியையும் ஆறுதலையும் ஏற்படுத்தவேண்டிய இத்தகைய கோவில் உற்சவங்களில், குறித்த பயன்பெற இயலாத அளவுக்கு ஒரு சில கோவில் நிர்வாகத் தரப்பினர்களும், திருவிழா உபயகாரர்களும் திருவிழாக்களில் ஆடம்பரத்துக்கும் கேளிக்கைக்கும் முன்னுரிமை வழங்கி "குளிக்கப்போய்ச் சேறு பூசிக் கொள்ளும்" விதத்தில் பக்தர்களின் மன அமைதிக்கும், ஆறுதலுக்கும் இடையூறு ஏற்படுத்துவது குறித்து கவலையடைய வேண்டியுள்ளது.

எனது கிராமத்திலுள்ள கோயில் உற்சவத்தின்போது மனது பொறுக்காது மேற்குறித்த நிலைப்பாட்டை விமர்சிக்கப்போய், வீணான மனஸ்தாபத்துக்கு ஆளான கவலை இதனைப் பதிவு செய்ய உந்துதல் அளித்தது.

யதார்த்தத்தை உணர்ந்து, எமது தமிழ்ச் சமூகத்தின் இன்றைய கையறு நிலையைக் கருத்தில் எடுத்து எம்மவர்கள் கோவில்களில் ஆடம்பரங்களையும் கேளிக்கைகளையும் தவிர்த்து உண்மையான பக்தி மேம்பாட்டுடன் இறைவனை அமைதியான, அடக்கமான விதத்தில் ஏற்றிப் போற்றி இறை அருள் பெற்றிடமுயல்வோமே!

கு.ரகு
கோப்பாய்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

### அபிவிருத்தி இலக்குகள் அடைய

# மாகாண சபைகளில் வினைத்திறன் தேவை

*அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு*



தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாட்டில் உள்ள அனைத்துமாகாண சபைகளினதும்செயற்பாடுகள்ஒழுங்கமைவு பெற வேண்டும் என்பதான கருத்துக்கள் அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர்களின் 33 ஆவது மாநாடுஅண்மையில்ஹபரண சினமன் லொஜ் ம்ண்டபத்தில் இடம்பெற்றபோதேஇந்தக்கருத்துக்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் கருத்துக்களைத்தெரிவித்துள்ள அவர்,

''எமது நாட்டினது ஒன்பது மாகாண சபைகளும் வெவ்வேறு திசைகளில் செயற்படுவதனால் நாட்டின் பொது அபிவிருத்திஇலக்குகளைஅடைவதில் பெரும் சிக்கல் நிலமைகள் தோன்றியுள்ளது. மக்கள்பிரதிநிதிகளாகப்பொறுப்புக்களைநிறைவேற்றுவது அனைவரினதும் கடமையாகும். மக்களுக்கான வினைத்திறனான சேவையினை வழங்காதிருப்பதால் மக்கள்எம்மீதுவெறுப்படைவதுடன் மனஅழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர்.

நாட்டின் தேசிய அபிவிருத்தி இலக்குகளை வினைத்திறனான முறையிலே அடைந்து கொள்வதற்கு மாகாண சபையின்செயற்பாடுகள்அனைத்தும் ஒழுங்கமைவுடன் இருக்க வேண்டும். அரசுக்கும், மாகாண சபைகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பும் சீர் செய்யப்பட வேண்டும். அரசமைப்புச்சட்டம் மற்றும் அது சார்ந்த அதிகாரம் என்பன வேறுபட்டிருந்தாலும் எமது நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே மக்களுக்கானசேவைகளைநாம்வழங்க வேண்டும்" - என்றார்.

> ❝ நாட்டின் தேசிய அபிவிருத்தி இலக்குகளை வினைத்திறனான முறையிலே அடைந்துகொள்வதற்கு மாகாண சபையின் செயற்பாடுகள் அனைத்தும் ஒழுங்கமைவுடன் இருக்க வேண்டும்.

---

# 'மில்லேனியம் சலஞ் கோப்பரேசன்' உடன்படிக்கைக்கு இலங்கை தெரிவு

*பொருளாதார வளர்ச்சியின் ஊடே வறுமையை எதிர்ப்பதற்கு ஒருங்கிணைவான முயற்சி*

'மில்லேனியம் சலஞ் கோப்பரேசன்' பணிப்பாளர்கள் சபையினால் ஐந்து வருட நன்கொடைக்கான 'மில்லேனியம் சலஞ் கோப்பரேசன்' உடன்படிக்கைக்கு இலங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளதான தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பொருளாதார வளர்ச்சியின் ஊடாக வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளை மில்லேனியம் சலஞ் கோப்பரேசன் அமைப்பின் சிரேஷ்ட உயர் அதிகாரிகள் இலங்கையில் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

> “நல்லாட்சி, ஜனநாயக உரிமைகளை மதிப்பதில் ஊழலுக்கு எதிராக போராடல் என்பதான தர நிர்ண்யங்கள் உள்ளடங்கலான அடிப்படையில் நாடுகள் தெரிவு செய்யப்படுகின்றன.”

இது சார்ந்த கலந்துரையாட்லகளை மேற்கொள்ளவென மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அதிகாரிகள் இலங்கை அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் தனியார் துறையின் தலைவர்களை சந்தித்ததுடன் கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள வர்த்தகப் பிரதிநிதிகளையும், அவர்களின் வணிகம் சார் செயற்பாடுகளையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியார் முதலீடுகள் எவ்வாறான மாறுதல்களை குறிப்பாக இலங்கையின் அபிவிருத்தி குறைந்த பகுதிகளில் தொழில்களை, வாழ்க்கைத் தொழில் பயிற்சிகளை மற்றும் முதலீடு, தொழில்சார் கல்விக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளன என்பதனை அறிந்து கொள்ளும் விதமாக கிளிநொச்சியில் அமைந்துள்ள கார்கில்ஸ் மற்றும் மாஸ் ஹோல்டிங்ஸ் தொழிற்சாலைகளுக்கும் பிரதிநிதிகள் குழு விஜயம் செய்துள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அதுல் கேஷப்,

“எம்.சி.சி உடன்படிக்கைக்கு இலங்கை தெரிவு செய்யப்பட்டமையானது நாட்டில் நீதி, ஜனநாயக ஆட்சி மற்றும் பொருளாதாரச் சுதந்திரம் வலுப்படுத்தப்படல் அதேபோன்று மக்களின் முதலீடு சார் செயல் நிலைகளில் காணப்படும் உள்ளார்ந்த உயர்வு நிலை என்பவற்றில் இலங்கை வெளிப்படுத்திய தேர்ச்சி ... என்றாகும்” - என்

---

# கிழக்கு மாகாணத்தில் லங்கா சதோசவின் இரு புதிய கிளைகள்



லங்கா சதோசவின் விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான லங்கா சதோசவின் புதிய கிளைகள் இரண்டு கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பிரதேசங்களில் கடந்த 10 ஆம் திகதி தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதான தகவல்தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 478 ஆவது கிளை கொக்கட்டிச்சோலையிலும், 479 ஆவது கிளை காத்தான்குடியிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புதிய கிளைகளை ஆரம்பித்து வைத்துக் கருத்துரைத்த அமைச்சர்,


“லங்கா சதோசவின் வலையமைப்பானது உறுதி நிலையில் இருப்பதுடன் வினைத்திறனோடு வளர்ந்து வருகிறது. அவற்றைத் தனியார் மயமாக்கும் திட்டம் எம்மிடமில்லை. லங்கா சதோசவை நான் பொறுப்பேற்றுக் கொண்டதன் பிற்பாடு பல அம்சங்கள் உள்வாங்கி முன்னேற்றப் பாதையில் பயணிக்கச் செய்தேன்.

லங்கா சதோசவின் விரிவாக்கம் என்பது அரசுக்குச் சொந்தமான பல்பொருள் அங்காடி முறைமையை வலுப்படுத்துவதும், தனியார் மயமாக்குவதும் அல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இவை நுகர்வோர் சேவைக்கு மட்டுமன்றி நாட்டில் ஏற்படுகின்ற இயற்கை இடர் அழிவுகளின் போதும் பேருதவிகளை மக்களுக்காகச் செய்து கொடுத்துள்ளது. மக்களுக்கான உலர் உணவுகளை வழங்குவதன் மூலம் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரின் போதும் இரத்தினபுரி மாவட்டத்திற்கு 10 மில்லியன் ரூபாய் தொகை மதிப்பீடுடையதான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக அதிகாரிகள் அவற்றைப் பொறுப்பேற்றுக்கொண்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

லங்கா சதோசவின் வருடாந்த விற்பனை வருமானம் என்பது 30 பில்லியன் ரூபாவாக உள்ளது. 2016ஆம் ஆண்டில் ஏற்பட்ட மொத்தச் செலவில் 93 வீதமானவை மூலதன மேம்பாட்டு திட்டங்களுக்காக செலவிடப்பட்டது. மேலும் எஸ்.எம்.இ வியாபார நிறுவனங்களு டன் இணைந்து கொண்டு 8 ஆயிரம் வரையான கிளை நிறுவனங்களை எதிர்காலத்தில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். தற்போதுள்ளதான 379 கிளைகள் என்ற வலையமைப்பை நடப்பாண்டின் டிசெம்பர் மாதத்திற்குள்ளாய் 500 ஆக விரிவுபடுத்தத் தீர்மானித்துள்ளோம்" - என்றார்.

---



# ஊழல் மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிக்கின்றன

*தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு*

கூட்டாட்சி அரசு தனது பணிகளை ஆரம்பித்ததன் பிற்பாடு தற்போது மேற்கொண்டுவருவதான பெரிய ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் அரச தலைவர் ஆணைக் குழு முன்பாக அதிகளவான ஊழல் மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதான தகவல் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் 49 முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளையே இதுவரை நிறைவு செய்துள்ளதாகவும், ஏனையவை அனைத்தும் தற்போது வகைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவை தொடர்பிலான விசாரணைகள் விரைவுபடுத்தப்படும் என்பதான கருத்துகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

> ❝ இதுவரையான காலப் பகுதியில் 15 ஆயிரத்து 599 முறைப்பாடுகள் பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் அரச தலைவர் ஆணைக் குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. ❞

மேலும் இதுவரை நிறைவடைந்துள்ளதான விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதான விடயங்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்கப் பெற்றதான முறைப்பாடுகளில் ஆதாரமற்றதான 180 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

---


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

15/6/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 24.91 | 6,694.64 | 6,669.73 |
| S&P SL20 | 27.64 | 3,900.30 | 3,872.66 |
| வியாபாரப்புரள்வு | | 1,884,444,420 | 1,056,876,930 |
| உள்நாடு:- கொள்வனவு | | 1,007,797,250 | 671,034,300 |
| விற்பனை | | 952,185,410 | 689,963,650 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 876,647,100 | 385,842,624 |
| விற்பனை | | 932,258,940 | 366,913,312 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| செலான் வங்கி | SEYB.N | 92.00 | 6,399,712 | 575,986,860 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 178.20 | 3,103,739 | 552,791,506 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 139.00 | 1,522,710 | 210,283,339 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 140.00 | 756,648 | 105,767,350 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 244.90 | 247,879 | 60,429,634 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 68.70 | 560,655 | 37,101,373 |
| லங்கா ஒறைக்ஸ் லீசிங் | LOLC.N | 108.40 | 193,926 | 20,711,784 |
| யூனைட்டட் மோட்டார் | UML.N | 80.00 | 256,585 | 20,525,757 |
| சிலோன் ஹோரல் ஸ்ரோஸ் | CCS.N | 840.00 | 23,454 | 19,771,602 |
| பீப்பிள் லிச்ங் அன் பைனான்ஸ் | PLC.N | 18.00 | 888,700 | 16,009,416 |

- பங்குலாபம் -

லங்கா ஐ ஓ சி - ரூபா. 1:25
ஏசியா சியாக கொமோடிட்டி - ரூபா. 0:10 சதம்
ஹற்றன் நஷனல் வங்கி - உரிமைப்பங்கு திகதி 6 July 2017.

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 241 |
| விலை உழைப்பு | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.7 |

கே.எஸ்.சிவாஞானராஜா

# திரவியங்களோடு தித்தித்த அருள் ஞான வியாபக பஞ்சரத்தினம்

உருவேறத் திருவேறும்
உணர்வூறத் தமிழ் ஊறும்
குருமாறத் தலைமாறும்
குடியேறக் கொடியேறும்
கருமேகம் மழைதூவும்
கலைத்தாகம் நிலைமேவும்
பெரும் யாகம் நிறைவேறும்
நிலை பேறாய் அருள் ஊறும்
இசையாறு பேறாகும்!




பாலஸ்தாபனஞ் செய்யப்பட்ட மூர்த்திகள் மீண்டும் இருப்பிடம் செல்வதற்காய் ஆற்றப்படும் கிரியைகள் ஏராளமானவை. தாராள குணமுடையவை. நூற்றுக் கணக்கான அந்தணச் சிவாச்சாரியார்களின் வேத,மந்திர உச்சாடணங்களால் கும்பத்தில் எழுந்தருளிய மூர்த்திகரம் மீண்டும் கருவறையில் எழுந்தருளும் மூலமூர்த்திக்கு உரிய தாகிட வேதாகம, ஒப்பாசார, ஆசார ,நாத ,கீத, வாத்திய, நாட்டியக் குரல் விரல் வார்ப்புக்களோடு எடுத்துச் சென்று அருள் உருவேற மந்தங்கள் ஒருமுகமாய் லயித்து அபிஷேகிக்கும் பெருவிழாவே மகா கும்பாபிசேகமாகும்.

உரிய முறைப்படி தகுதி வாய்ந்த சிவாச்சாரியார்கள் மனம், வாக்கு, காயங்களினால் ஒன்றுபட்டு மந்திரம், பாவனை, கிரியை வழிபாடுகளை நிகழ்த்தி மூர்த்திகளில் திருவருள் பாலிக்க அனுகூலம் செய்யும் போது கீதம், வாத்தியம், நிருத்தியம் அர்ப்பணமாக ஒன்றுசேர்க்கப்படுகிறது.

மேலும் நூற்றெட்டுத் திரவியங்களினால் திரவியாபிசேகம் நடைபெறும் போது இசையாபிசேகமும், நாதாபிசேகமும் கலந்து ஓமகுண்ட, கும்ப,பட்ச உத்தம, மகாயாக பிரதிஷ்டா பரிபாலனப் பேறுகளுக்கு நீடித்த வரங்களையும்,வாழ்வையும், அற்புதங்களையும், அதிசயங்களையும் ஈந்து பெரிதுவக்கும் மாண்பியம் மேன்மையுறுகிறது. இந்த நிலையில் கடந்த 2 ஆம் திகதி வெள்ளியன்று கொக்குவில் மணியர் பதியில் முருகனுக்கு

தி யி ன் பஞ்சரத்தினபதியானது கொக்குவில் இசை வேள்வியில் நனைந்தது.இன்புற்றிருந்தது.

**பஞ்சரத்தினம்**

தங்கம், வெள்ளி, காசு, சொத்து, சுகம், பதவி எல்லாவற்றிலும் பார்க்க அதியுச்ச பேரின்பம் தரக்கூடியவை தியாகராஜ சுவாமிகள் இராமனை அனுபவித்துப் பாடிய பஞ்ச இரத்தினங்கள் எனப்படும் பேறுடைய கீர்த்தனைகளாகும். இந்திய மண்ணில் விளைந்த இந்த இரத்தினங்கள் தமிழ் மொழியில் இல்லாவிடிலும் அனைத்தும் மிளர்வுடைய தேன் சொட்டும் சுவையுடையவையாகும்.


“கனத்த சிற்றின்பத்தால் அலைந்து உலைந்து மோசம் போய் என்னை இழந்தேன். உன்னையிழந்தேன். எல்லாவற்றிலும் நீயோ பெரியவனாயிருக்க நானோ தான் பெரியவன் என்று அகங்காரங் கொண்டு இறுமாப்படைந்தேன் இராமா….! மதம் பொறாமை, காமம், கருமித்தனம், மோகம், சிற்றின்பம் என்பவற்றிற்கு அடிமையாகிப் பெண்களுக்காகச் சிலகாலமும், சொத்திற்காகச் சிலகாலமும், பணம் திரட்டுவதற்காகச் சிலகாலமும், புகழுக்காகச் சதாகாலமும் அருமந்த மானிடப் பிறப்பினைத் வீண்விரயம் செய்து விட்டேன் இராமா..! என்னைக் காப்பாற்றி மீட்டெடுப்பாயாக, நல்வழிப்படுத்துவாயாக..! என்று தானே தனக்குச் சொல்வதாக ஆங்காங்கே தியாகராஜ சுவாமிகள் இராமபிரானிடம் வேண்டுதல்களை விண்ணப்பிக்கின்றார். உண்மைதானே, கலியுகத்தில் ஆசைக்கோர் அளவில்லை. எல்லாவற்றுக்கும் ஆசை. இல்லறத்திற்கும் ஆசை. துறவறத்துக்கும் ஆசை, இல்லறத்திலிருந்து கொண்டு துறவறத்திலும், துறவறத்திலிருந்து கொண்டு இல்லறத்திலும் நாட்டம் கொள்வது ஆகவே ஆகாது. எந்த ஒரு ஆணையும், எந்த ஒரு பெண்ணையும் சரியான இறைவழியில் பயணிக்கச் செய்வதற்கு வாய்த்த இசையமுதுதான் பஞ்சரத்தினங்களாகும். நாட்டை, கௌளை, ஆரபி, ஸ்ரீ ராகம், வராளி ஆகிய ஐந்து இராகத்திலமைந்த கீர்த்தனைகளையும் மிகுந்த பயபக்தியோடு திரவிய அபிசேகத்தின் போது பாடியவர் திருமதி ஞானகுமாரி சிவனேசன் ஆவார். முழுக்க முழுக்க அதை மனனமாக்கிய இவர் மகாவித்துவான் ஐயாக்கண்ணு தேசிகரிடமும்,இசைப்புலவர் சண்முகரத்தினத்திடமும், வித்துவான் கல்யாண கிருஷ்ண பாகவதரிடமும், மகாராஜபுரம் சந்தானத்திடமும் இசையை முறையாகக் கற்றவர். ஆதலால் ஏராளமான இசை உருப்படிகள் அவரிடம் பொக்கிசமாகப் பொதிந்துள்ளன. தமிழ், தெலுங்கு உருப்படிகள் தீட்டிய வாள்போல நன்கு பரீட்சயமாகியுள்ளன. அவற்றுள் பஞ்சரத்தினங்களாகிய பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை மிகுந்த வாலாயமாகப் பாடக் கூடிய வாண்மையோடு இருப்பவர் சங்கீதரத்தினம்,கலாபூசணம் திருமதி ஞானகுமாரி சிவனேசன் ஒருவரே. இசை மேவலின் உச்சத்தில் இருப்பவர்களுக்குக் கூட மனனம் சரியாக இல்லாது பார்த்துப்பாட வேண்டிய நிலையில் ஞானகுமாரி அம்மா பார்க்காமலே பாடும் ஆற்றல் கொண்டவர். கடுமையான பயிற்சியும் உழைப்பும் இத்தகு மேன்மையை அவரிடத்தே தனித்துவம் செய்துள்ளது. கூடவே செல்வி காயத்திரி சிறிஸ்கந்தவேலும் இணைந்து பாடியமை நல் இசையின் கேண்மைக்கு அருமருந்தாக இருந்ததெனலாம். சுருதி வேந்தன் அ.ஜெயராமனின் வயலின் அனுசரணையும் மிருதங்க வித்துவான் கி.அனந்தகோபனுடன் ஒன்றித்த மிருதங்க இசையின் லாவண்யமும், கு.சுஜந்தனின் மோர்ச்சிங்கின் லய நர்த்தனப் பிரவாகிப்பும், கலாபூசணம் சிவனேசன் ஐயாவின் கந்தரனுபூதியின் ஒப்புவித்தலும் வேண்டிய வரங்களை அடியார்களுக்குத் தானமாக ஈந்து கொக்குவில் மணியர் பதிக்கு வாழ்வளித்தார். இதைவிட வேறு என்ன பேறு எமக்கு வேண்டும்.


> கலியுகத்தில் ஆசைக்கோர் அளவில்லை. எல்லாவற்றுக்கும் ஆசை. இல்லறத்திற்கும் ஆசை. துறவறத்துக்கும் ஆசை, இல்லறத்திலிருந்து கொண்டு துறவறத்திலும், துறவறத்திலிருந்து கொண்டு இல்லறத்திலும் நாட்டம் கொள்வது ஆகவே ஆகாது. எந்த ஒரு ஆணையும், எந்த ஒரு பெண்ணையும் சரியான இறைவழியில் பயணிக்கச் செய்வதற்கு வாய்த்த இசையமுதுதான் பஞ்சரத்தினங்களாகும்.

திரவிய அபிசேகங்களோடு தித்திக்க நடைபெற்ற கீதநாதாஞ்சலி நிகழ்வு ஐந்தாம் நாளினை தனித்துவம் செய்து கொண்ட பஞ்சரத்தினக் கீர்த்தனைகளின் தேன் சொட்டிய இசை அமுதூட்ட விருந்தோம்பலாக அமையப்பெற்றிருந்தது. மணியர்ப










# 2017 ஆனி மாத பலன்



## தனுசு

அதிக உழைப்பு இல்லாமல் திறமையைக் கொண்டே முன்னேறும் தனுசு ராசியினரே, இந்தக் காலகட்டத்தில் ராசியாதிபதி குருவின் சஞ்சாரத்தால் எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். தடைப் பட்ட பணம் வந்து சேரும். விரயாதிபதி செவ்வாய் ராசியைப் பார்ப்பதால் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மையும் ஏற்படும். உங்களது செயல்கள் மற்றவர்களைக் கவரும் விதத்தில் இருக்கும். ஆனால், மனதில் ஏதாவது கவலை இருந்து கொண்டிருக்கும். மற்றவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் ஸ்தானாதிபதியான புதன் ஆறாமிடத்தில் சஞ்சாரம் செய்தாலும் தனஸ்தானத்தை ராசிநாதன் குரு பார்ப்பது சிறப்பு. தொழில் வியாபாரம் சுறுசுறுப்படையும்.

வியாபார விரிவாக்கம் செய்வது பற்றி ஆலோசனை மேற்கொள்வீர்கள். பாக்கியாதிபதி சூரியனின் சஞ்சாரத்தால் அரசாங்கம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் காரிய அனுகூலம் கிடைக்கப் பெறுவார்கள். புத்திசாதூரியத்தால் காரிய நன்மை பெறுவார்கள்.

குடும்பாதிபதி சனியின் சஞ்சாரத்தால் குடும்பத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். பிள்ளைகள் உங்களது சொல்படி நடப்பது மனதுக்கு இதம் அளிக்கும். செயல் திறன் அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் நன்மை ஏற்படும். பெண்களுக்கு உங்களது செயல்களுக்கு மற்றவர்களிடம் இருந்து பாராட்டு கிடைக்கும். பயணங்கள் மூலம் சாதகமான பலன்கள் உண்டாகும்.

கலைத்துறையினருக்கு என்றோ செய்த ஒரு வேலைக்கு இப்போது பாராட்டுக் கிடைக்கலாம். மனம் விட்டுப் பேசி எடுக்கும் முடிவுகள் குடும்ப முன்னேற்றமடைய உதவும். அடுத்தவர் ஆச்சரியப்படும் வகையில் சாமர்த்தியமாகக் காரியங்களை செய்து வெற்றி பெறுவீர்கள். அரசியல் துறையினருக்கு தடைபட்டு வந்த காரியங்களில் தடை நீங்கும். ராசியாதிபதி சனியின் சஞ்சாரத்தின் மூலம் சாமர்த்தியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். உங்கள் செயல்களுக்கு தடைகளை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகிச் செல்வார்கள். மாணவர்கள் கல்வியில் திறமை வெளிப்படும். ஆசிரியர்கள் பாராட்டுவார்கள். சக மாணவர்கள் மத்தியில் மதிப்புக் கூடும்.

**பரிகாரம்:**
விநாயகரை அறுகம்புல் மாலை போட்டு வணங்க எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**அதிர்ஷ்ட கிழமைகள்:**
செவ்வாய், வியாழன்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1586 -ஸ்கொட்லாந்து அரசிமேரி ஸ்பெய்னின் இரண்டாவது பிலிப்பை தனது வாரிசாகவும் அடுத்த அரசராகவும் அங்கீகரித்தார்

1779 -ஸ்பெய்ன் பெரிய பிரித்தானிய இராச்சியத்துக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது.

1836 -லண்டன் உழைக்கும் மனிதர் சங்கம் தொடங்கப்பட்டு, சாட்டிஸ்ட் இயக்க எழுச்சிக்கு வித்திட்டது.

1903 -போர்ட் மோட்டர் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது.

1911 -நியூயோர்க் எடிகொட்டில், ஐபிஎம் கணனி நிரற்படுத்தல் பதிவுக் கம்பனியாக உருவாக்கப்பட்டது.

1915 -பிரிட்டிஷ் பெண்கள் நிறுவகம் உருவாக்கப்பட்டது.

1940-லிதுவேனியாவில் கம்யூனிஸ்ட் அரசு நிறுவப்பட்டது.

1990-ஆயிரக் கணக்கான மக்கள் பலாலியில் இடம்பெயர்வு.

1990-காங்கேசனில் போர்க் கப்பல் சேதம் விடுதலைப் புலிகள் 5 பேர் உயிரிழப்பு.

1990-காங்கேசன் பகுதியில் கடும் மோதல்.

1992-ராஜீவ் கொலை வழக்கு விசாரணை: இந்திய பொலிஸாருக்கு விசா வழங்க மறுப்பு.

1992- உடுகம்பொலவைப் பிடிக்க தனிக் கொமாண்டோ படை.

1992-திருமலைத் தமிழ் கிராமங்களில் ஊர்காவற் படை அட்டகாசம்.

2010-புகையிலையை முற்றாகத் தடை செய்த முதல் நாடாகியது பூட்டான்.

2012- 469 நாள் விண்வெளிப் பயணத்தைப் பூர்த்தி செய்து கொண்டு ஐக்கிய அமெரிக்காவின் றொபேற்றிக் போயிங் * 37B விண்கலம் புவிக்குத் திரும்பியது.

**நாளை**

**ஆனி-03**
சனிக்கிழமை -17.06.2017
திதி: அட்டமி மு.இ.11.58
நட்சத்திரம்: பூரட்டாதி பி.ப. 02.48
சுபநேரம்:02.53-04.23 வரை
ராகுகாலம்:08.53-10.23 வரை

# அவசரத்தில் எடுத்த தவறான முடிவு

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கு அவசர அவசரமாக முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு, ஆளுநரிடம் கடிதமும் கையளிக்கப்பட்டு விட்டது. அவசரத்திலும் ஆத்திரத்திலும் எடுக்கும் எந்தவொரு முடிவும் சரியாக அமையாது. அதைப்போன்றுதான், முதலமைச்சரை நீக்குவது என்று எடுக்கப்பட்ட முடிவும் பொருத்தமானது அல்ல.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை தொடர்பிலாவாதப் பிரதி வாதங்கள் கடந்த ஒரு வாரமாகவே நடந்து வந்தது. வடக்கு மாகாண முதலமைச்சரே, விசாரணை அறிக்கை தொடர்பில் முடிவெடுக்க வேண்டும் என்றுமுழுப்பொறுப்பும்அவர்மீதுசுமத்தப்பட்டிருந்தது. முதலமைச்சர் விக்னேஸ் வரன் தன்னை இந்தச் சிக்கலிருந்து விடுவித்துக் கொள்ள, நான்கு அமைச்சர்களையும் மாற்றுவது என்ற முடிவுக்கு வந்திருந்தார்.

இங்கேதான் பிரச்சினை ஆரம்பமானது. விசாரணை அறிக்கையில் முதல்வர் என்ன முடிவும் எடுக்கலாம். ஆனால் விசாரணை அறிக்கை குற்றவாளிகளாக இனங்காட்டாதவர்கள் மீது, குற்றவாளிகளாகஇனங்காட்டப்பட்டவர்கள்போன்று நடவடிக்கை எடுக்க முடியாது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. நான்கு அமைச்சர்களையும் மாற்றும் முடிவைக் கைவிடுமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலிந்து, வடக்கு முதலமைச்சருக்கு அழைப்பெடுத்து தெரிவித்திருந்தார். இதன் பின்னர் விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின்தலைவர்மாவை.சேனாதிராசாவுடன் பேசிய போது அவரும் அமைச்சர்கள் நால்வரையும் மாற்றும் முடிவுக்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்.

ஆனால்வடக்குமுதலமைச்சர்விக்னேஸ்வரனோ தனது முடிவிலிருந்து பின்வாங்கவில்லை. நால்வரையும்மாற்றும்திட்டத்தைக்கைவிடவில்லை. ஆனால் அதனை வேறு வடிவில் சபைக்குத் தெரிவித்தார். குற்றம்சாட்டப்பட்ட வர்கள் தங்கள் பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பிப்பது எனவும், மற்றைய இருவர் மீதும் மீண்டும் விசாரணை நடத்தப்படும் என்றும், அவர்கள் அதுவரை விடுப்பில்இருக்கவேண்டும்என்றும்குறிப்பிட்டிருந்தார். இதனால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முதலமைச்சரை மாற்றும் முடிவை அவசர அவசரமாக இரவோடு இரவாக எடுத்துள்ளது. கட்சித் தலைமையின் கட்டளையை மீறி விட்டார் என்பதற்காக இந்த முடிவை எடுத்துள்ளார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், நடுநிலை வகிக்கப் போகின்றேன் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தபோது கட்சித் தலைமை பேசாமல்தான் இருந்தது.

இதன் பின்னரும், விக்னேஸ்வரனை முதலமைச்சராக தான் தெரிவு செய்தது சரி என்று இரா.சம்பந்தன் கூறியிருந்தார். இப்படியானதொரு நிலையில், தனது பேச்சை மீறி விட்டார் என்பதற்காக முதலமைச்சரை மாற்றும் முடிவு எடுத்திருப்பது சரியல்ல.

வடக்கு மாகாண சபை இன்னமும் 15 மாதங்களைத்தான் அதன் ஆயுளாகக் கொண்டிருக்கின்றது. அதற்குள் இன்னொருவரை மாற்றி சபையின் வினைத்திறனை அதிகரிக்க முடியும் என்பதெல்லாம் பொய்க்கதையாகத்தான் இருக்க முடியும்.

ஆளுநரிடம் கொடுத்த கடிதத்தை மீளப் பெற்று, எஞ்சிய 15 மாதங்களையும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் இயங்க அனுமதிப்பதுதான் சிறந்தது. அவசரத்திலும், ஆத்திரத்திலும் எடுக்கும் முடிவுகள் இறுதியில் ஆபத்தாகவே அமையும்.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** தன்னம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும்.

**இடபம்:** உங்களின் பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிச் செல்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

**மிதுனம்:** சிலர் தவறான ஆலோசனை சொல்லலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம் உண்டாகும். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**கடகம்:** குடும்பத்தில் பணத்தேவை அதிகரிக்கும். தகுதிக்கு மீறி எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை ஏற்படலாம். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**சிங்கம்:** கடந்த கால விஷயங்களை நண்பரிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். குடும்பத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும்.

**கன்னி:** அனைவரிடமும் அன்புடன் பழகுவீர்கள். பேச்சிலும், செயலிலும் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** நீண்ட நாள் முயற்சி நிறைவேற வாய்ப்பு உண்டாகும். நண்பர்கள் தேவையான உதவியை மனமுவந்து வழங்குவர். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வருமானம் திருப்தியளிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்வரும் சிரமங்களை தாமதமின்றி சரி செய்யவும். நல்லவர்களின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வருமானம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபார வளர்ச்சி பெற தகுந்த பணிபுரிவீர்கள். வருமானம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். பொது இடத்தில் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கும்பம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக்கும். உயர்வு, தாழ்வு கருதாமல் அனைவரிடமும் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி பணி நிறைவேறும்.

**மீனம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். அடுத்தவர் பார்வையில் அதிக பணம் செலவழிக்க வேண்டாம். உடல்நலனில் அக்கறை தேவை.

**ராணி பாரதி** @writernagarani

பெண்களை அவர்களது சுதந்திரத்தை தேர்ந்தெடுக்க விட்டால் அடிமைதனத்தை தான் தேர்ந்தெடுத்து வந்து நிற்பார்கள்...



# குறும்படம் இயக்குகிறார் வெங்கட் பிரபு!

திரைப்படங்களை இயக்கி வந்த வெங்கட் பிரபு தற்போது ஒரு குறும்படத்தை இயக்க உள்ளார். இதை அதிகாரபூர்வமாகத் தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார். 'சென்னை 28' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகம் ஆனவர் வெங்கட் பிரபு. இவர் அலட்டிக் கொள்ளாமல் ஜாலியாக படப்பிடிப்பை நடத்தி படம் எடுப்பதையே வழக்கமாகக் கொண்டவர். 'சரோஜா', 'கோவா', 'மங்காத்தா', 'பிரியாணி', 'மாஸ் என்கிற மாசிலாமணி', 'சென்னை 28 2' ஆகிய படங்களை இயக்கிய வெங்கட் பிரபு தற்போது குறும்படம் இயக்கும் முடிவை அறிவித்துள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்ட கீச்சகப் பதிவில், "குறும்படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை ஏற்கனவே இருந்தது. அது இப்போது நிறைவேறியுள்ளது.

ஆர்.கே.குமார் சமூக கருத்தை சொல்லக்கூடிய வலுவான ஒரு கதையைச் சொன்னார். அது 15 நிமிடங்களுக்கும் குறைவாகவே இருந்தது. அதைக் குறும்படமாக எடுக்க உள்ளேன். இதில் சம்பத் நாயயகனாக நடிக்கிறார். ஷ்ரேயன் ஒளிப்பதிவு செய்ய, யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். பிரவீன் எடிட்டிங் பணிகளை மேற்கொள்கிறார். ஜெயசிறி கலை இயக்கப் பணிகளை கவனித்துக் கொள்கிறார். விரைவில் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது. முதல் குறும்படமும் கூட, அதற்கு உங்களின் ஒத்துழைப்பு தேவை" என்று தெரிவித்துள்ளார் வெங்கட் பிரபு.

**பிளாஸ்டிக் அரிசியைக் கண்டு பிடிக்கத்தான் தமிழன் அரிசியை சமைக்கும் முன்...**



**தண்ணீரில் ஊற வைத்தான் என்பது எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?**

**இன்றைய குழந்தைகள்**



**நான் குழந்தையாக இருந்த போது**



**ஏய் நீதானடி என் புருஷனின் சின்ன வீடு?**
**ஐயோ, இல்லக்கா! நான் இல்ல!**




**யாருகிட்டடி காது குத்துற? நீ போட்டிருக்கிற கொண்டையை என் புருஷனைத் தவிர வேற யாராலும் போட முடியாதுடி...**



**ஒருத்தர் சவூதிக்கு போகும் போது இத கொண்டு போயிரிக்காரு பாவம் எயாபோட்ல ஸ்கான் பண்ணினவன் சொல்லியிருக்கலாம்...**

எந்த மனது நல்லது நினைக்கிறதோ, எந்த மனிதன் மற்றவர்களும் நன்றாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறானோ, அந்த மனிதன் நன்றாகவே இருப்பான். இதை பின்பற்றினால் வாழ்க்கை சிறக்கும்...!

**பசங்க கையில பழங்கள் கிடைச்சா கம்முனு தின்னுட்டு போயிடுறாங்க...**



**இந்த பொண்ணுங்கதான் முகத்துல பூசலாமா தலையில தேய்க்கலாமான்னு ஆராய்ச்சி பண்றாங்க...**

மகனைப் பெற்று மருமகளிடம் விற்று வேலைகாரியாய் ஆவது அம்மா .. மகளைப் பெற்று மருமகனிடம் விற்று பிச்சைகாரனாய் ஆவது அப்பா.



திருமணம் முடிந்தது. மாமனார் மருமகளிடம் சொன்னார், "அம்மா, என் பையனிடம் கொஞ்சம் எச்சரிக்கையாய் இரு. அவனுக்கு வாய் கொஞ்சம் நீளம்". மருமகள் சொன்னாள், "பரவாயில்லை மாமா, எனக்கு கை கொஞ்சம் நீளம்".

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | 1 | | | |
| | 1 | 7 | | 6 | | 3 | 5 | |
| 6 | | | | | | | | 9 |
| | | 8 | 3 | | 6 | 2 | | |
| | | | 2 | | 5 | | | |
| | | 3 | 4 | | 9 | 6 | | |
| 3 | | | | | | | | 7 |
| | 4 | 5 | | 9 | | 8 | 2 | |
| | | | 1 | | 4 | | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 6 | 5 | 9 | 2 | 3 | 4 |
| 9 | 3 | 4 | 8 | 2 | 1 | 6 | 5 | 7 |
| 6 | 2 | 5 | 3 | 7 | 4 | 1 | 9 | 8 |
| 4 | 6 | 1 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 |
| 7 | 9 | 3 | 5 | 1 | 6 | 8 | 4 | 2 |
| 5 | 8 | 2 | 7 | 4 | 3 | 9 | 1 | 6 |
| 3 | 1 | 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 9 |
| 2 | 5 | 6 | 1 | 9 | 7 | 4 | 8 | 3 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 5 | 7 | 6 | 1 |

## வாழை தன் கதை கூறல் (சுயசரிதை)



- நான் தான் வாழை.
- என்னை உங்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும்.
- நான் கதலி இனத்தைச் சேர்ந்தவள்.
- நான் செழிப்பான செம்மண்தோட்டத்தில் வளர்கிறேன்.
- என்னை வளர்க்கும் தோட்டக்காரர் மிகவும் நல்லவர்.
- அவர் எனக்கு நல்ல பசனை இட்டு தினமும் நீர் பாய்ச்சி என்னை வளர்க்கிறார்.
- எனக்கு நல்ல உணவு கிடைப்பதால் நான் செழித்து வளர்கிறேன்.
- எனது இலைகள் பசுமையானவை. நான் பத்து அடி உயரம் வரை வளர்ந்துள்ளேன்.
- நான் வாழைப்பொத்தி (வாழைப்பூ) ஈன்று பெரிய குலை தள்ளி நிற்கிறேன்.
- குலையில் உள்ள காய்கள் விரைவில் கனிகளாக மாறும்.
- என்னைச் சுற்றி என்பிள்ளைகள் (குட்டிகள்) பல அளவுகளில் வளர்ந்து நிற்கிறார்கள்.
- நான் தள்ளிய குலையே பழுத்ததும் எனக்கு எமனாக அமைந்து விடும்.
- குலையை வெட்டியதும் என்னை வளர்ப்பவர் என்னையும் வெட்டிச் சாய்த்து விடுவார்.
- நான் இறந்தாலும் என்னைச் சுற்றி வளர்ந்திருக்கும் என் பிள்ளைகள் எங்கள் பரப்பரையைப் பெருகச் செய்து மனிதருக்கு பயன் கொடுப்பார்கள்.
- தமிழரின் பண்பாட்டில் நான் இடம் பெறாத மங்கள நிகழ்வுகளே கிடையாது.
- ஆனாலும் என்ன கொடுமை? நாரும், இலையும், பூவும், காயும், பழமும் கொடுத்துதவும் எங்களை பயன் கிடைத்ததும் இந்த மனிதர்கள் கொன்று விடுகிறார்களே! இது நியாயமா? நீங்கள் கூறுங்கள்.




ஒட்டகச்சிவிங்கியின் தலையையும்
உடலையும் சரியாகப் பொருத்துங்கள்





## ஆத்திசூடி

நேற்றைய தினம் (15/06.2017) புதிய ஆத்திசூடியிலிருந்து 1-20 வரையானவையும் அவற்றுக்கான விளக்கமும் தரப்பட்டன. இன்று 21-40 வரையானவை கொடுக்கப்பட்டுள்ளன. ஔவையார் பாடிய ஆத்தி சூடியே முதலில் எழுதப்பட்டது. புதிய ஆத்திசூடியைப் பாரதியார் பாடியுள்ளார். ஔவையாரைப் பின்பற்றி பாரதியார் காலத்துக்கு பொருந்தும் வகையாகவே புதிய ஆத்திசூடியைப் பாடியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 21. கைத் தொழில் போற்று | – | கைகயினால் செய்யக் கூடிய சிறு தொழில்களை விரும்பிச் செய். |
| 22. கொடுமையை எதிர்த்து நில் | – | பெருந் துன்பங்களை, தாங்கொணா இன்னல்களை எதிர்த்து தைரியத்துடன் போராடு. |
| 23. கோல் கைக் கொண்டு வாழ் | – | ஆயுதம் தாங்கி வாழ்வாயாக |
| 24.கௌவியதை விடேல் | – | விரும்பிப் பற்றியதை, எடுத்துக் கொண்டதை நழுவ விடாதே |
| 25. சரித்திரந்தேர்ச்சி கொள் | – | முறையான உண்மையான வரலாற்றை தெளிவாக அறிந்து கொள். |
| 26. சாவதற்கு அஞ்சேல் | – | இறப்பதற்கு அச்சப்படாதே |
| 27. சிதையா நெஞ்சு கொள் | – | குழம்பி நிற்காத மனத் திண்மை பெறு. |
| 28. சீறுவோர்ச் சீறு | – | வீணான கோபங்களை வளர்த்துக் கொண்டு எதிர்ப்போரை நீயும் எதிர்த்திடு. |
| 29. சுமையினுக்கு இளைத்திடேல் | – | உன் மேல் சுமத்தப்படுகின்ற பிரச்சினைகளுக்கு பயந்து தளர்ந்து போகாதே. |
| 30. சூரரைப் போற்று | – | மகாத்தான வீரச் செயல்களைச் செய்பவர்களை மதித்து புகழ்ச்சி செய் |
| 31. செய்வது துணிந்து செய் | – | செய்ய நினைக்கின்ற செயல்களை ஆராய்ந்து பின்னர் துணிவுடன் மேற்கொள். |
| 32. சேர்க்கை அழியேல் | – | சேர்ந்து வாழும் முறைமையை அழித்து விடாதே. |
| 33. சைகையிற் பொருளுணர் | – | உடலுறுப்புக்களால் வெளிப்படுத்தப்படும் சைகைகளின் உள் வெளிப்பொருள்களை உணர்ந்து கொள். |
| 34. சொல்வது தெளிந்து சொல் | – | சொல்லுகின்ற கருத்துக்களை ஆராய்ந்து தெளிவானதன் பின்னர் சொல்ல வேண்டும். |
| 35. சோதிடந்தனையிகழ் | – | இறந்த கால, நிகழ் கால, எதிர் காலம் பற்றி கணித்துக் கூறும் சோதிடத்தை நம்பாதே. |
| 36. சௌகரியந்தவறேல் | – | பல்வேறு நலன்கள் உனக்குக் கிடைக்குமாயின் அவற்றைத் தவறவிடாதே! |
| 37. ஞமலி போல் வாழேல் | – | நாயினைப் போல வாழாதே. |
| 38. ஞாயிறு போற்று | – | கதிரவனின் நலன்கள் உணர்ந்து கதிரவனைப் போற்று. |
| 39. ஞிபிரென இன்புறு | – | வண்டினைப் போல இன்பமாக இரு. |
| 40. ஞெகிழ்வ தருளின் | – | இளகிப் பேசு, உருக்கமாகப் பேசு அன்பு, இரக்கம், கருணை காட்டு.. |

## உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள்

- **முன்னிலைப்படுத்துங்கள் :** உறவுகள் மிக முக்கியமானவை. நமக்கு முக்கியமான உறவுகள் முன், எமது வேலை வசதி, விருப்பங்கள் எல்லாம் இரண்டாம் பட்சமே.
- **சுதந்திரம் கொடுங்கள் :** மற்றவர்களுக்கு தனிப்பட்ட விடயங்களில் சுதந்திரம் கொடுப்பது என்பது மிக முக்கியமானது. ஒத்த இயல்புடையவர்களை நண்பர்களாகக் கொண்டிருப்பது மிகவும் நல்லது. நன்றாகப் பழகிய பின்புதான் ஒருவரைப் பற்றி அபிப்பிராயம் கொள்ள வேண்டும். அதன் பின்பே நட்பு வலுப்படும்.
- **பரஸ்பர நம்பிக்கை :** சந்தேகம் உறவுகளைக் கெடுக்கும். திறந்த மனதுடன் இருங்கள். ஒருவரை ஒருவர் நம்புங்கள். நேர்மையாகவும் இருங்கள். இருவருக்கான கருத்து வேறுபாடுகள் பற்றியும் பேசுங்கள்.
- **மதித்தல் :** ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்வோம். ஒருவரை விட இன்னொருவர் அதிகமாக சம்பாதிக்கவும். செய்வோம். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு திறமை இருக்கும். பணத்தை வைத்து திறமையை மதிப்பிட முடியாது. ஆகவே ஒருவரை ஒருவர் மதித்து நடக்க வேண்டும்.
- **மன்னிப்பு :** அனைவருமே தவறு செய்பவர்கள் தான். அதற்காக அற்புதமான உறவைக் கெடுத்து கொள்ளாதீர்கள். மன்னித்து விடுங்கள்.
- **வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள் :** அன்றாட வேலைகளில் நீங்களும் பங்கெடுங்கள். மற்றவர்கள் தான் எப்பொழுதும் செய்ய வேண்டுமென்று விட்டு விடாதீர்கள்.
- **தவறுகளை ஏற்றுக் கொள்ளுங்கள் :** தவறுகள் செய்தால் 'ஆமாம்' என ஏற்றுக் கொள்ளுங்கள். மறைக்க முயன்றால் உறவுகள் பாதிக்கப்படும். தவறு செய்து விட்டேன் என க் கூறி மன்னிப்புக் கோருவதுசிறந்தது.
- **முக்கிய நாள் நினைவிருக்கட்டும்:** நண்பர்களின் பிறந்த நாள், திருமண நாள் என்பன நினைவில் இருக்கட்டும். மறந்து போய் விடும் என்றால் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

## ஒரு கன்னத்தில் அடித்தால்....

தருமலிங்கம் தனது புதிய மோட்டார் வண்டியில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தார். வீதி ஓரமாக சனம் குழுமி நின்றது. இவரது வண்டியை சிலர் மறித்து "ஐயா நமது சோதியை ஒரு மோட்டார் வண்டி மோதி விட்டுப் போய் விட்டது. தலையில் நல்ல அடி. நல்லா குருதி போகிறது. கொஞ்சம் உங்கள் வண்டியில் ஏற்றி உதவுவீர்களானால் சோதியை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கலாம் ஐயா" என்றனர். "இதோ பாருங்கள். என்னுடையது புதிய வண்டி. கடந்த வாரம் தான் வாங்கினேன்" இதில் இவனை ஏற்றினால் என் வண்டி என்னாகும்? உங்களுக்கு மூளையிருக்கா? போய் ஏதாவது மாட்டு வண்டி பிடித்து மருத்துவமனையில் சேருங்கள்" என்று கூறி விட்டு வேகமாகச் சென்று விட்டார் தருமலிங்கம். பாவம் சோதிலிங்கம். வேறொரு வாகனம் பிடித்து வைத்தியசாலைபோவற்கு முன்யே அதிக குருதிப் போக்கு ஏற்பட்டு அவன் உயிர் போய் விட்டது. எல்லோரும் ஒரே ஊர்க்காரர்கள் அவர்கள் எல்லோர் மனதிலும்இந்த துக்க சம்பவம் மிக ஆழமாகப் பதிந்து விட்டது.



காலங்கள் கடந்து போயின. அந்தக் கிராம மக்களின் வாழ்வில் பொருளாதார நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு கொண்டிருந்தன. ஏழையாயிருந்தவன் பணக்காரனானான். பணக்காரன் பரம ஏழையானான். இந்த மாற்றம் தருமலிங்கத்தாரரையும் விட்டு வைக்கவில்லை. பெரிய பணக்காரான அவர் தொழிலில் பெரு வீழ்ச்சி கண்டார். இப்போது அவரது வேலையாள்கள், உறவினர்கள் சுற்றத்தார் என்று எல்லோரும் அவரிடமிருந்து தூரத்தே போய் விட்டனர். பணமிருந்தால் கூடி வரும் உறவுகளெல்லாம் அது இல்லையென்றால் எட்டிப்போய் விடுவது இன்று வழமையானதாகி விட்டது. உறவுகளால் தனிமைப்படுத்தப்பட்ட தருமலிங்கம் ஏழையாக தன் மனைவியோடு வாழ்ந்து வருகையில் இருதய நோய்க்கு ஆழானார். அடிக்கடி நெஞ்சு வலி ஏற்பட்டு வந்தது. அவரைப் பார்வையிட்ட மருத்துவர் மருந்துகளைக் கொடுத்து, நோய் ஆரம்ப நிலைதான். ஒழுங்காக மருந்துகளை எடுத்து கவனமாக இருக்கும் படி கூறியிருந்தார்.

ஒரு நாள் திடீரென அவருக்கு மீண்டும் நெஞ்சு வலி ஏற்பட்டது. மருந்துக்கும் நின்றபாடில்லை. எவரிடமாவது ஒரு வண்டி பிடித்து மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு செல்வதற்கு அவர் மனைவி முயன்றும் ஏழ்மை நிலையில் இருந்த அவர்களுக்கு எவரும் உதவ முன்வரவில்லை. அவர் பணக்காரனாக இருந்த வேளை ஊர் மக்களுடன் பழகிய விதமானது அவருக்கு எவரும் உதவிக்கு செல்ல விடாது தடுத்து விட்டது.எல்லோரும் தள்ளி நின்று வேடிக்கை பார்த்தனர். ஆயினும் அவர்களுக்குள் ஒரு இளைஞன் முன்வந்து, தனது மாட்டு வண்டியில் அவரை மருத்துவமனையில் சேர்த்தான். அவர் மயக்கநிலையில் இருந்து கண் விழித்தார். அவர் பக்கத்தில் மனைவியும் அந்தஇ ளைஞனும் நின்றிருந்தனர். அவனை சிறிது .அடையாளம் கண்டு கொண்ட தருமலிங்கம் அவனது கைகளைப் பற்றி நீ... நீ... என்று நா தழுதழுத்த வேளை "ஐயா நான் சோதிலிங்கத்தின் மகன் மூர்த்தி" என்றான். "தம்பி நான் உன் அப்பா.... என்று சொல்ல வாயெடுத்தார். "ஐயா எனக்கு எல்லாம் தெரியும் அப்பாவின் உயிர் பிரிகையில் நான் கூடவே இருந்தேன்" அதையெல்லாம் நான் பறந்து விட்டேன்.ஐயா என்றான் மூர்த்தி. தருமலிங்கம் தனது தவறுகளை உணர்ந்து மனம் வருந்தி கண்ணீர் சொரிந்தார்.

**கறுத் (து) இன்னா செய்தவக் கண்ணும் மறுத் (து) இன்னா**
**செய்யாமை மா (சு) அற்றார் கோள் (குறள் – 312)**

**பொருள் : கோபம் கொண்டு ஒருவன் துன்பங்களைச் செய்தாலும் அவனுக்கு மீண்டும் துன்பம் தருவனவற்றைச் செய்யாதிருத்தல் மனத் தூய்மை உடையவரது கொள்கையாகும்.**

## சிறு வியாபாரிகளுக்கான அழைப்பு


வேலம்பராய் கண்ணகை அம்மன் ஆலயத்தினுடைய வருடாந்தமகோற்சவம்21.06.2017கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து10 தினங்கள் நடைபெறவுள்ளது. இக் காலத்தில் ஆலயத்தில் கடைகளை அமைத்து வியாபாரம் செய்யவிரும்பும் சிறு வியாபாரிகள் 17,18 ஆனி 2017 ஆகிய தினங்களில் பி.ப.2.00 மணிமுதல் 5.00மணிவரைஆலயத்திற்குநேரடியாகவருகைதந்து தங்கள் இடங்களை பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**வேலம்பிராய் கண்ணகை அம்மன் ஆலயம், நாவற்குழி.**

**செயலாளர், பரிபாலன சபை.**




## மரண அறிவித்தல்



### இராசையா செகராஜசிங்கம்

மானிப்பாய் வடலித்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், மறவன்புலோ மேற்கு, சாவகச்சேரியை வதிவிடமாவும் மாவத்தை கணேஸ்வரம் அளவெட்டியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராசையா செகராஜசிங்கம் (ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) நேற்று (15.06.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியகலாநிதி இராசையா - அன்னபூரணம் தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மங்கையற்கரசியின் அன்புக்கணவரும் ஜனதீபா (ஆசிரியர்), ஜயந்தி (சிறைசாலை உத்தியோகத்தர்), ஜனார்த்தனன், ஜெயமதி ஆகியோரின் அன்புத்தந்தையும் கஜேந்திரனின் மாமனாரும் கரிஷ்னி, கபிஷ்னி, டினுக்ஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற தங்கராசா (இ.போ.ச), சிவபாதம் (ஓய்வூதியர் கல்வித்திணைக்களம்), இராசநாயகம், இரத்தினவல்லி, இராசேஸ்வரி (கணக்காளர், தென்மராட்சி ப.நோ.கூ. சங்கம், கைதடி) ஆகியோரின் சகோதரரும் பாக்கிய லட்சுமி (இளைப்பாறிய தபால்அதிபர்), காலஞ்சென்ற சவுந்தலா தேவி மற்றும் இந்திரன், காலஞ்சென்ற தெய்வேந்திரராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2017) வெள்ளிக்கிழமை பி,ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் (அளவெட்டி) நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அளவெட்டி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## கூறுவிலை கோரல்


இலங்கை மின்சாரசபை யாழ்.ஒளி மின் நிலையததில் பணிபுரியும் பயிலு நர்கள் தங்குவதற்கான விடுதி ஒன்றைப் பெறுவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரங்கள் மற்றும் மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் 06.07.2017 பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 06.07.2017 பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் ஒளி மின்நிலையம். இலங்கை மின்சாரசபை. சுன்னாகத்தில் திறக்கப்படும்.

**கேள்விப் பத்திரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-**
**பிரதம பொறியியலாளர், யாழ்ஒளி மின்நிலையம்,**
**இலங்கை மின்சார சபை,**
**சுன்னாகம், 40075.**
**தொலைபேசி இல:- 021 224 2400/ 021 224 2247**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**தோற்றம்**
**08.03.1962**
**மறைவு**
**17.05.2017**

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் நடராசா பாஸ்கரன்

அவர்கள் கடந்த (17.05.2017) புதன்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் 31 ஆம் நாள் இன்றாகும். அவரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திப்பதோடு அவரின் மறைந்த செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும் துயர் பயின்றோர்களுக்கும் இறுதிச்சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டோருக்கும் அன்னார் நோய்வாய்பட்டிருந்த போது வைத்திய உதவி புரிந்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் முன்னின்று உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முருகபவனம்**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**
**021 320 1140**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சிவகுமாரன் பங்குஜன்



பிறப்பு 10.07.1998 இறப்பு 14.06.2017

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் Solothurn சுவிற்சர் லாந்தினை (சுவிஸ்) வதிவிடமாகவும் கொண்ட கனகலிங்கம் சிவகுமாரன் - பவளராணிதம்பதியரின் அருமைப் புதல்வன் பங்குஜன் கடந்த (14.06.2017) புதன்கிழமை இரவு 10.15 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னார் கோண்டாவில் காலஞ்சென்ற செல்லையா கனகலிங்கம் - அன்னபாக்கியம் மற்றும் ஆசிகுளம் பவானந்தம் - செல்வநாயகி ஆகியோரின் அன்புப் பேரனும் சிவகுமாரன் சிந்தனா (சுவிஸ்)வின் அருமை அண்ணனும் க. சுப்பிரமணியம் - புஸ்பராணி, க.திருஞான மூர்த்தி - ஜெயலட்சுமி (வவுனியா), க.லிங்கமூர்த்தி - காஞ்சனா, க.சச்சிதானந்தமூர்த்தி குலராணி (ஜேர்மனி), மனோரஞ்சன்பவாணி (லண்டன்), சந்திரசீலன் - பாமினி (வவுனியா), தயாளன் - பவளகுமாரி (பிரான்ஸ்), சதீஸ் - சசிரேகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் காலஞ்சென்ற சிவலிங்கம் - பரமேஸ்வரி (சுதுமலை), இராசகுலசிங்கம் - தனலட்சுமி, பாஸ்கரன் - சரோஜா (கோண்டாவில்), சிறீரமேசன் - பவளராணி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மருமகனும் சு.தினேஷ்குமார் (சுதுமலை), சு. பிரசாத்குமார் (கோண்டாவில்), செல்வரூபன் கஜந்தி, லி.கிஷேக், ச. அபீரன், ச.அனுசன், ச.அஸ்வின் (ஜேர்மனி), தி.ரவிராஜ் (ஆஸ்திரேலியா), தி.இன்பகுமார், சு.உஷாயினி, சர்மிலன் ரேவதி, சு.மனோஜ்குமார், ச.சங்கீதா, ச.தக்சனன் (வவுனியா), ம.கிருஷன் (லண்டன்), த.விஷ்னுதன் (சுதுமலை), ச.கஸ்மிகா, ச.கிருத்திகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிறீதர் சசிலதா (சுதுமலை), கருணாகரன் வினோதினி (லண்டன்), ரஜிசன் யசோதினி (கோண்டாவில்), சிறீராகவன் சிறீவித்தியா, ஹித்தேந்திரன் சிவாயனி (கனடா), பா.தனதன், பா.தக்ஷாயினி (கோண்டாவில்), சி.ஸிரோமி, சி.அபிநயா, சி.அஸ்வினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.05.2017 திங்கட்கிழமை சுவிற்சர் லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குளங்கரை ஒழுங்கை, கோண்டாவில்.**

**தகவல்: மா.லி.பாஸ்கரன்.**

**021 205 3337, 077 155 5309**

## மரண அறிவித்தல்கள்



**அன்னைமடியில் 28.02.1942**

**ஆண்டவன் அடியில் 14.06.2017**

### கிறிஸ்ரோஸ்ரம் இம்மானுவேல்

(ஓய்வு பெற்ற பொறியியல் விரிவுரையாளர்) Bsc (Eng) Cey

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் கிறிஸ்ரோஸ்ரம் அவர்கள் 14.06.2017 புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்ரோஸ்ரம் - மேரிரோசலின் தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான அன்ரனி - புஸ்பம் தம்பதியினரின் அன்பு மருமகனும், சாளற் பத்மினியின் அன்புக் கணவரும்,சிறாணி, ரொஷான் காடினர், அனுஷா, டயானா ஆகியோரின் அன்புத் தந்தையும் யூட் மேவின்,துஷித் யோன்தாசன்,பசில் தர்சிதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிறயன், ஷோன், ஆத்மிகா ஆகியோரின் ஆசைப் பேரனும், சின்னமலர் ஸ்ரனிஸ்லொஸ், அன்னமலர் யேசுரட்ணம், காலஞ்சென்ற தனிநாயகம், சேவியர், எமில்ராஜன், றஞ்சினி சேவியர், துரைநாயகம், காலஞ்சென்ற சௌந்தரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லொஸ், யேசுரட்ணம் சேவியர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை சனிக்கிழமை (17.06.2017) பி.ப 3.00 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்று அச்சுவேலி சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"புஸ்பவிலா"**
**சங்கானை வீதி, அச்சுவேலி.**
**தொ.பே. 077 227 5469**
**076 6000 998**

**தகவல்: குடும்பத்தினர்.**

### நாகேஸ்வரி மார்க்கண்டு



**தோற்றம் 1936.07.26 மறைவு 2017.06.15**

திருநெல்வேலியைப் பிறப்பிட மாகவும், நவாலி வடக்கினை வசிப்பிடமாக கொண்ட சிவகுரு ஒழுங்கை, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாக கொண்ட கதிரவேலு - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்புமகள் நாகேஸ்வரி மார்க்கண்டு நேற்று (15.06.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் ஸ்ரீமகேந்திராசா, ஸ்ரீசயந்தரராசா, குனேஸ் வரி ஆகி யோரின் சகோதரியும் தமயந்தி, றோசா, பத்மினி (லண்டன்), ஸ்ரீதர் (CTB சாரதி), மஞ்சுளா, திருவேணி, றோகினி (லண்டன்) ஆகியோரின் தாயாரும் நிர்மலன், ரதி, வேந்தாராஜா, சதீஸ்குமார், ரகுவரன், இராஜேஸ்வரன் ஆகியோரின் மாமியும் பிரகாஷ், பிரதீப், பிரசாத், பிரதாப், பிரசாந், வேதிகா, தர்சிகா, சாரங்கன், சஞ்ஜீவிதா, மிருஷன், உமாகாந்தன், ஹரிகரன், டிரோஜா, சோபனா, நிரோயன், பிரியதர்சன், விதுஷன், துளசி, கிவிஷன், கவிஷன், கம்சன் ஆகியோரின் பேர்த்தியும் பிரணவனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாச்சிமார் வீதி,**
**நவாலி வடக்கு, மானிப்பாய்.**
**075 033 4536, 021 225 6839**

**தகவல்: குடும்பத்தினர்.**

## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டம்

23.04.2017 இல் கோரமில்லாத காரணத்தால் நடைபெறாத இரண்டு கிளைகளுக்கான கூட்டம் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் குறித்த நேரத்தில் நடைபெறவுள்ளது. எனவே கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமுகமளிக்கத் தகைமையுடைய அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவர்களும் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்றுக் கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**காலம் :- 18.06.2017 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் :- முற்பகல் 10.00 மணி**

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 11 | வேதக்கோயிலடி (அடைக்கல நாயகி ) | றோமன் கத்தோலிக்க தமிழ்-கலவன் பாடசாலை, ஆனைக்கோட்டை. |
| 02 | 21 | பரமேஸ்வராச் சந்தி | சிவசக்தி சனசமூக நிலையம் |


நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. **021 222 2143** **- செயலாளர் -**

## வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம்
## மாதகல் ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் - 13**
**உத்தேச ஆதன இல - 80A**
**வீதி - உடையார் ஒழுங்கை**
**கிராம சேவையாளர் பிரிவு - J/155**

வட்டாரம் 13 உடையார் ஒழுங்கை, உத்தேச ஆதன இல. 80A இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது தென் மேற்கு) பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரிய விளானிறை "**மக்கில்குழி**" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு குளி 16 கொண்ட இவ்வாதனம் கட்டுடையைச் சேர்ந்த பர்ணாந்து இராயப்புவும் பெண் லொறனாவும் ஆகிய இவர்களால் இளவாலை மேற்கு இளவாலைச்சேர்ந்த சத்தியாப்பிள்ளை வசந்தகுமாரும் பெண் நீத்தா யோக ராணியும் அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. இ.த. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6047 ஆம் இலக்க 07.12.2016 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்து வதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.

நில அளவையாளர் திரு. A.லோகநாதன் அவர்களால் வரையப்பட்ட 423 ஆம் இலக்க 12.03.2017 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "**மக்கில்குழி**" நிலப்பரப்பு 0 குளி 16 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரிசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சந்தியாப் பிள்ளை வசந்தகுமாரும் பெண் நீத்தா யோகராணியும் எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகிறேன்.




**செயலாளர்**
**வலி. தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

## இலங்கையில்...

விடுத் துள்ள பயண எச்சரிக்கை குறிப்பி லேயே இவ்வாறு கூறியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் தீவிரவாத அச்சுறுத்தல் பற்றிய பிரிட்டன் அரசின் மதிப்பீட்டில் எந்த மாற்ற மும் இல்லை. 2009ஆம் ஆண்டு மே மாதம், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இராணுவ் மோதல்கள் முடிவுக்கு வந்தன. 2011 இல் அவசரகாலச் சட்டவிதிகள் தளர்த்தப்பட்டன.

ஆனால், நாட்டின் சில பகுதிகளில் இன்னமும் இறுக்கமான இராணுவ நடைமுறைகள் உள்ளன. 2014ஆம் ஆண்டு ஏப்ரலில் விடுதலைப் புலி செயற்பாட்டாளர்கள் எனக் குற்றம்சாட்டி மூன்று பேரை இராணுவத்தினர் நெடுங்கேணியில் சுட்டுக்கொன்றனர்.

இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டம், குற்றச்சாட்டுகள், விசாரணையின்றி நீண்டகாலத்துக்குத் தடுத்துவைக்கும் அதிகாரத்தை அளித்துள்ளது.

எனவே, இலங்கை செல்லும் பிரிட்டன் குடிமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். எந்நேர மும் பிரிட்டன் தூதரகத்துடன் தொடர்பை வைத் துக் கொள்ள வேண்டும் என்றுள்ளது.

(த-ய)

## 50 திருமண வாழ்த்து

**வேலுப்பிள்ளை**
**இராமர்**
**இராமர் பரமேஸ்வரி**
தம்பதிகளின்
வாழ்க்கைப்
பயணத்தில்
இருவரும்
இணைந்து




ஐம்பதாவது அகவை எய்துள்ளீர்கள்
என்றும் இனிதே வாழ கடவுளின் அருளாசி
உங்களுக்கு கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.
**உங்கள் ஆசிக்காக,**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## பனைசார் உணவு உற்பத்தி பயிற்சி மற்றும் பனைமர உற்பத்திகளுக்கான அழகு உருப்பயிற்சி வழங்கல்

**பனை அபிவிருத்திச் சபையினால் பனைசார் உணவு உற்பத்தி மற்றும் பனை மரம்சார் அழகு உரு உற்பத்திகளுக்கான பயிற்சி வழங்கப்படவுள்ளது.**

1. மூன்றுமாத காலம் இப்பயிற்சி வழங்கப்படும்.
2. பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா மூவாயிரம் (3000/- வழங்கப்படும்.
3. பயிற்சி பெறுவோருக்கான வயதெல்லை 18 - 45 வருடங்கள்
4. மரவேலை, உணவு உற்பத்தி சார் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. பயிற்சிகள் யாவும் சபையின் யாழ் - காரைநகர் மற்றும் வவுனியா - புளியங்குளம் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

மேற்படி பயிற்சியினைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பொருத்தமான விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30.06.2017 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கவுள்ள பயிற்சி நெறியினைக் குறிப்பிட்டு அனுப்பவும்.

**தலைவர்,**
**பனைஅபிவிருத்திசபை,**
**தேசிய வீடமைப்பு செயலகம்,**
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்.** **15.06.2017**

## Lanka Skill Development Academy

U.K Approved Academy

### லங்கா திறன் அபிவிருத்தி நிலையம்

சுற்றுலா விடுதி முகாமைத்துவம் மற்றும் கேக் ஐசிங். அழகுக்கலை
முகாமைத்துவ கற்கை நெறி
யாழ். மண்ணில் புதிய பிரிவுகள் ஆரம்பம். 21.06.2017 புதன்கிழமை

ABC awards
Recognised Centre



**Hospitality Training Program Education Towards Employment**
**Application Are Invited For Admission In Hospitality**
**Training Program 1 Year Short Term Courses**
**. Front Office Operation & Service**
**. Housekeeping & Guest Service Food Preparation & Cooking**
**. Food & Beverage Service (Food & Drinks Including Bar Service)**
**. Cake Icing (3 Month Courses)**
**. Beauty Culture (3 Month Courses)**



அனைத்து பாடநெறிகளும் செய்முறை விளக்கதுடன் கற்பிக்கபடும்
*Classes Will We Start 21.06.2017 Wednesday*

மேலதிக தகவல்களுக்கு காலை 09.00 மணிதொடக்கம் 2.30 மணிவரை அலுவலகத்திற்கு நேரில் வருகைதரவும்
151/11 sivaraja Avanue Palay Road Thirunelvelly Jaffna.

*Email:Lanka.Jaffna2015@Gmail.com* *WWW.Abc Awards.Co.Uk* *WWW Reph.Co Org.Uk*
*Facebook:LankaSkill Development Academy.* *P. NU : 021 312 7815, 0778153187, 0768449720*

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு

**ஊர்க்கோழிக்குஞ்சு, கினிக்கோழிக்குஞ்சு, பெண்டம், வாத்து என்பன விற்பனைக்கு உண்டு. ஊர்முட்டைகள் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு**

**076 941 9807**

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் இரண்டாம், மூன்றாம் மாடிகளைக்கொண்ட சகல வசதிகளுடன் கூடிய (தனியார் / நிறுவனங்கள்) வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு,

**077 393 8891 / 071 154 4479**

### விற்பனைக்கு

பான்ஸி(Fancy) கடை தளபாடங்கள் (கண்ணாடி அலுமாரிகள்)(Show cass) பான்ஸி பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உள்ளது.மொத்தமாக கொள்வனவு செய்பவ்ரகள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு **077 117 533**

### மரண அறிவித்தல்

**திருமதி**
**மாணிக்கம் சீனியர்**



மாவை கலட்டியைப் பிறப்பிடமாகவும், V.C.C மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம்சீனியர் நேற்று(15.06.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரன் சீனியரின் அன்பு மனைவியும் அற்புதராசா காலஞ்சென்ற கணேசராசா மற்றும் ஆனந்த ராசா (யாழ். பல்கலைக்கழகம் பௌதீக துறை), புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி, ஜெகராஜா (யுனைற்றெர்ஸ் மோட்டோர்ஸ், நாவற்குழி) ஆகியோரின் அன்புத்தாயும் தேவராணி, இந்திரகுமார், வர்ணகுல சிங்கம், கோமதி ஆகியோரின் அன்பு மாமியும் கஜேந்தினி, நதியா, கயன், ஜெனிசனா, மாதுரி, ஜெரூசன், கிளிண்டா, தனேஸ்வரன், சந்தோஸ், கேதுசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## இணக்க...

கட்சி தயாரில்லை. இதனை தமிழ் அரசுக் கட்சி சார்பிலான மாகாண அமைச்சர்களும் உறுப்பினர்களும் நேற்றுத் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டனர். இதையடுத்து முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்கொண்டுசெல்லும் நடவடிக்கைகளில் கட்சி தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது. (உ)

## விக்கிக்கு...

தெரிவித்துள்ளது. தமிழ் மக்கள் பேரவையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மாகாண சபையின் நிர்வாகச் சிக்கலாகவோ அல்லது கட்சி உறுப்பினர்களின் பதவி மோகம் காரணமாக எழுந்த உட்கட்சி பிரச்சினையாகவோ இனியும் கருத முடியாது என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'தமிழர் இனப்பிரச்சினை தொடர்பிலான அரசின், கபட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தடையாக இருந்தமைக்காக, தமிழர்களின் கோட்பாடுகளை சமரசமின்றி முன்கொண்டு சென்றமைக்காக அவர் மீது இந்த நெருக்கடியை அரசும் அரசு சார்ந்தவர்களும் கொண்டு வந்திருக்கின்ற நிலையில், இனத்தின் நலன் சார்ந்து இந்தக் கொள்கைகளை முன்கொண்டு சென்றமைக்காக அவர் இலக்கு வைக்கப்பட்டாரோ? அந்த கொள்கைகள் மக்களின் கொள்கைகளே என்பதை மீண்டும் வெளிப்படுத்தும் நோக்குடன், பொது மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவை கோருகின்றது.

முதலமைச்சர் முன்கொண்டுசெல்லும் எமது அரசியலின் அடிப்படைக் கொள்கைகளுக்கு பின்னால் எமது மக்கள் எப்போதும் அணிதிரண்டு வருவார்கள் என்பதை நாம் எமது அணிதிரள்வுகள் மூலம் அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். சகல உள் புற அழுத்தங்களையும் தாண்டி எமது தேசத்தின் அடிப்படை அரசியற் கோட்பாடுகளுக்கு தலைமையேற்று முன்கொண்டு செல்லுமாறு தமிழினத்தின் பெயரால் மக்களின் முதல்வருக்கு அழைப்பு விடுக்கிறோம்' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## அமைச்சர்...

தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் தற்போதைய நிலமை தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல், வவுனியாவில் நேற்று நடைபெற்றது. ரெலோ அமைப்பின் மையக் குழு உறுப்பினர்கள் பலரும் அதில் கலந்து கொண்டனர். கலந் துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாகிய ரெலோ அமைப்பின் சார்பில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட பா.டெனீஸ்வரன் வெற்றி பெற்றிருந்தார். கட்சி ரீதியாக அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்ட போது ரெலோ சார்பில் அவருக்கு மீன்பிடி அமைச்சர் பத்வி வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கட்சியுடனேயே இதுவரை இணைந்து செயற்பட்டும் வந்திருந்தார்.

வடமாகாண போக்குவரத்து அமைச்சர் மீதும் ஊழல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில் சாட்சியங்கள் சமூகமளிக்காமையால் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை. வடக்கு மாகாண முதலமைச்சர் விசாரணைக் குழுவை நிறுவி விசாரணைகளை மீள மேற்கொள்ளப் போவதாகவும் அமைச்சரை ஒரு மாத விடுமுறையில் இருக்குமாறும் தெரிவித்திருந்தார். தனது அமைச்சுப் பதவியை காப்பாற்ற அவர் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக கையொப்பமிட்டிருந்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாட்டுக்கு எதிராக ரெலோ அமைப்பு தீர்மானம் நிறைவேற்றித் தமது உறுப்பினர்களை கூட்டத்துக்கு அழைத்திருந்தது. போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் அதில் கலந்து கொள்ளாது தமிழ் அரசுக் கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

முதலமைச்சருக்கு எதிராக கையெழுத்திட்டமை தொடர்பில் விளக்கம் கோரியுள்ளோம். அது கிடைத்துதும் எமது கட்சியின் மையச் செயற்குழு இது குறித்து முடிவு எடுக்கும்" என்று ரெலோவின் செயலாளர் நாயகம் ந.சிறீகாந்தா மேலும் தெரிவித்தார். (வ-5,402)

## பொருத்து...

சந்தித்து, இந்த வீடு அமைக்கப்படுவதன் நன்மை பற்றி விளக்கமளித்துள்ளனர். மீள் குடியேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் கொழும்பு ரேனுகா விடுதியில் நேற்று இரண்டரை மணி நேரம் நடைபெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சின் மீளாய்வுக் கூட்டத்துக்கு மாவட்டச் செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக நேற்றைய கூட்டத்தில், சுமார் அரை மணி நேரம் மீள்குடியேற்ற அமைச்சால் முன்னெடுக்கப்படும் வேலைகளின் முன்னேற்ற மீளாய்வு ஆராயப்பட்டது.

இதன் பின்னர் பொருத்து வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ள மிட்டல் நிறுவனத்தினர், அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் செயற்பாடு நடைபெற்றது. பொருத்து வீடு அமையப் பெறுவதால் ஏற்படும் நன்மைகள், தமது நிறுவனத்தால் இதுவரை எந்தெந்த நாடுகளில் பொருத்து வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பிலும் இதன் போது அவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

'6 ஆயிரம் பொருத்து வீடுகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் அது நடைமுறைப்படுத்தப்படும்' என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் இதன்போது கருத்துத் தெரிவித்துள்ளார். (வ-5)

## வடக்கு...

லிருந்து அறியமுடிகின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 15 பேரும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 6 பேரும் இணைந்து எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆளுநரிடம் ஒப்படைத்தனர். இதனால், வடக்கு மாகாண அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வெளிநாட்டுத் தூதரகங்கள் வடக்கு மாகாண சபை மீது தமது கழுகுப் பார்வையைச் செலுத்தியுள்ளன. (து)

## நம்பிக்கையில்லா...

அது துணிச்சலுடன் செயற்படவேண்டும் என்பதற்காகவே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதர வாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கையொப்பமிட்டது என்று அதன் வடக்கு மாகாண உறுப்பினரான யாசீன் ஜவாகீர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதில் ஜயதிலக்க, ஜவாகீர் ஆகியோர் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குச் சார்பாகக் கையொப்பமிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜவாகீர், வடக்கு மாகாண சபையில் மாற்றம் அவசியம் என நீண்ட நாட்களாகவே வலியுறுத்தி வருகின்றோம். அதன் அசமந்தமான நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம் அவசியம். எனவேதான், ஜனநாயக ரீதியிலான மாற்றத்துக்கு ஆதரவளிக்கப்பட்டுள்ளது. இது பற்றி அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (து)

## சிறுமிகள்...

வேண்டியும் உடுவிலில் நாளை சனிக்கிழமை கவனவீர்ப்புப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உடுவில் பிரதேச செயலக இந்து சமய அபிவிருத்திக் குழுவும், உடுவில் பிரதேச அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மூன்று சிறுமிகள் பாலியல் வதைக்கு, உட்படுத்தபட்டிருந்தனர். இந்தச் சம்பவம் பெரும் அதிர்வலையைத் தோற்றுவித்திருந்தது.

இந்த நிலையில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு, மருதனார்மடம் சிறி ஆஞ்சநேயர் ஆலய முன்றலிருந்து கவனவீர்ப்புப் பேரணி ஆரம்பமாகி, காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்று உடுவில் பிரதேச செயலகத்தைச் சென்றடையவுள்ளது.

இதில் பொதுமக்களைக் கலந்து கொண்டு ஆதரவு தெரிவிக்குமாறு ஏற்பாட்டாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-5,28)

## யாருக்குமே...

பார்ப்போம்" இவ்வாறு கண்ணீர் மல்கத் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் இல்லத்துக்கு முன்னால் அவருக்கு ஆதாரவாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இன்று எனக்கு முன்னால் கூடியுள்ள உங்கள் அன்பு என்னை வியக்க வைக்கின்றது. நான் என்னால் முடிந்தளவில் மக்களுக்கான சேவையை மேற்கொண்டு வருகின்றேன். ஆனால் இந்தளவுக்கு மக்களின் அன்பு எனக்கு இருப்பதை இப்போதுதான் உணர்கின்றேன். பல அரசியல் காரனங்களுக்காகப் பல நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாம் இவ்வளவு காலமும் அரசியலுக்கு அடிமைப்பட்டு மக்களின் நன்மைகள், தேவைகள், ஏக்கங்களை புரிந்துகொள்ளாது இருந்து விட்டோம்.

உதரணத்துக்கு ஒரு வைத்தியசாலைக்கு தேவையான கருவியை ஊழல் செய்து குறைந்த தரத்தில் வாங்கினோமானால் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் மக்களையே சென்றடைகின்றது. மக்களுக்கு வேண்டுவதாகக் கூறி ஊழல் செய்வதால் அதன் முழுத் தாக்கமும் மக்களுக்குத்தான் சென்றடைகின்றது.

எங்களுக்கு வருமானம் கிடைக்கின்றது. பணம் கிடைக்கின்றது. வசதிகள் கிடைக்கின்றன என்ற காரணத்தால் நாம் செய்வது தாற்பரியம் விளங்காமல் போய்விடுகின்றது. இவ்வாறன ஊழல் சம்பவங்கள் தொடர்பாக நான் நடவடிக்கை எடுத்த போது, அது பலரால் விரும்பப்படவில்லை. ஆனால் விருப்பத்துக்கு மாறாக மக்களின் நலன் கருதி நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய தேவைகள் இருந்தன.

அந்த நடவடிக்கைகள் எனக்கு அரசியல் ரீதியாக பல பிரச்சனைகளை உருவாக்கிவிடுமோ? என்ற பயம் இருந்தது. ஆனால் அந்தப்பயம் எனக்கு தற்பொழுது போய்விட்டது. நான் இனியாருக்கும் அஞ்சத் தேவையில்லை. என்னுடைய பலம் மக்களின் அன்பே ஒழிய அரசியல் ரீதியான பலம் எதுவும் நான் சேர்த்திருக்கவில்லை.

பொதுமக்களுக்கு செய்யும் எனது சேவையே எனக்கு இருக்கும் பலம். ஆகவே நடப்பதை இருந்து பார்ப்போம்.

நான் எனது கடமைகளை செய்யும்போது சிலருக்கு பிரச்சனைகளை கொடுக்கலாம். ஆனால் நான் அதனை நினைத்துக் கவலைப்படுவதில்லை. நான் ஊழல் சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை சிலருக்குப் பிடிக்கவில்லை போல இருக்கின்றது. நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறைகூறியிருப்பார்கள். நடவடிக்கை எடுத்த படியால் ஏன் நடவடிக்கை எடுத்தீர்கள்? எனக் குறை கூறுகின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் என்னுடன் பேசினார். இரண்டு அமைச்சர்கள் தகுந்த உத்தரவாதத்தை தந்தால், கட்டாய விடுமுறை தொடர்பான அறிவிப்பைப் பரிசீலிக்கலாம் என அவரிடம் தெரிவித்துள்ளேன்" என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (வ-8)

## முதல்வர்...

கட்சி உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில் லாப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே சுமார் 300 இளைஞர்கள் நேற்று மாலை 3 மணியளவில் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் முன்பாக ஒன்றுகூடினர்.

இந்தப் போராட்டத்தின்போது "மீட்பராக வந்த முதல்வரை துரோகத்தால் அழிப்பதா", "விக்னேஸ்வரனே எங்கள் முதல்வர்", " மக்களின் தெரிவை மறுக்க நீங்கள் யார்" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (வ-8)

## பதவியில்...

சி.வி.விக்னேஸ்வரன் தயாராகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருடன் தொலைபேசியில் நடத்திய பேச்சின்போது அவர் இந்த இணக்கத்துக்கு வந்திருந்தார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிணக்கை, பிளவைத் தீர்த்து முதலமைச்சர் பதவியில் விக்னேஸ்வரனைத் தொடர வைப்பதற்கான முயற்சியில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் நேற்று ஈடுபட்டார். பிரச்சினை குறித்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் தான் பேசினார் என்று அவர் தெரிவித்தார்.

இதனை அடுத்து முதலமைச்சருடனும் பேசிய சித்தார்த்தன் தனது தொலைபேசி வழியாகவே அவர்கள் இருவரையும் உரையாட வைத்தார். அப்போது அமைச்சர்களான ப.சத்தியலிங்கம் மற்றும் பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கு எதிரான மேலதிக விசாரணையை நடத்துவதற்காக அவர்களைக் கட்டாய விடுமுறையில் செல்ல முதலமைச்சர் விதித்த நிபந்தனை சட்டவலுவற்றது என்பதைச் சம்பந்தன் சுட்டிக்காட்டினார். அதனை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் அந்த நிபந்தனையைத் தளர்த்துவதற்குத் தான் இணங்குகிறார் என்று தெரிவித்தார்.

அதேநேரம் அமைச்சர்கள் இருவரும் விசாரணையில் தலையிட மாட்டார்கள் என்ற உத்தரவாதக் கடதாசியை அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கவேண்டும் என்று நிபந்தனை விதித்தார். இதனை அடுத்து இந்தப் பிரச்சினை இணக்கமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் உதயன் பத்திரிகைக்கு நம்பிக்கை வெளியிட்டார்.

எனினும் இந்த இணக்கம் குறித்து தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடனும் பேசுமாறு சித்தார்த்தனிடம் சம்பந்தன் கேட்டுக்கொண்டார். ஆனால் அவர்கள் இருவருக்கும் இடையில் அத்தகைய கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தகவல்கள் எதுவும் இல்லை. இதனால் இணக்க முயற்சி வெற்றியளிக்கவில்லை. (உ-5)

## தமிழ்...

கட்சிக்கும் இடையிலான பிளவுக்கு முக்கிய காரணமாக இருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதலமைச்சர் பதவியில் தொடரும் வகையில் அமைச்சர்கள் ப.சத்தியலிங்கம் மற்றும் பா.டெனிஸ்வரனுக்கு எதிரான மேல் விசாரணையின்போது அவர்கள் இருவரும் கட்டாய விடுமுறையில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்த விக்னேஸ்வரன் தயாராக இருந்தபோதும் வெறும் பதவிக்காக மட்டும் இத்தகைய ஒரு இணக்கத்துக்குப் போவதற்கு கட்சி ஒருபோதும் தயாராக இல்லை.

இன்னும் ஒருபடி மேலேபோய் தாம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான அமைச்சரவையில் இனிமேல் பதவி வகிக்க விரும்பவில்லை என்று இரு அமைச்சர்களும் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்கள் என்றும் அறியக் கிடைத்தது.

அவர்கள் பதவியில் தொடர்வதற்கு முதலமைச்சர் இணக்கம் தெரிவித்தால்கூட அவர்கள் அதனை ஏற்பதற்குத் தயாரில்லை என்பதே இன்றைய நிலை என்கின்றன கட்சி வட்டாரங்கள். தற்போதிருக்கும் அமைச்சரவையை மாற்றிவிட்டு புதிதாகத் தான் உருவாக்க முயன்ற அமைச்சரவையில்கூட தமிழ் அரசுக் கட்சிக்கு இடமளிக்கும் எண்ணம் முதலமைச்சருக்கு இருக்கவில்லை என்றும் அவை தெரிவிக்கின்றன.

அவ்வாறு தமிழ் அரசுக் கட்சியை விலக்கி முதலமைச்சர் ஏன் செயற்படுகிறார் என்பதற்கான விளக்கத்தையும், எதிர்காலத்தில் அவர் அவ்வாறு செயற்படமாட்டார் என்கிற உத்தரவாதத்தையும் வழங்காத வரையில் விக்னேஸ்வரனுக்கும் கட்சிக்கும் இடையில் இணக்கம் ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியங்கள் ஏதுமில்லை என்றே உறுதியாக அறியக் கிடைக்கிறது. (உ)

## விக்கியின்...

நேற்றிரவு ஆளுநரிடம் கையளித்ததாக மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழ் அரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஆளுநரிடம் கையளித்திரிந்தனர். இதனையடுத்து வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையையடுத்து முதலமைச்சரின் பதவி தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு ஆதரவான மனுவை நேற்றிரவு ஆளுநரிடம் கையளித்திருக்கின்றனர்.

"மனுவில் கூட்டமைப்பைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் 15 பேர் ஒப்பமிட்டு கையளித்திருக்கின்றோம். இதனைப் பெற்றுக் கொண்ட ஆளுநர், உட்கட்சி விரிசலை முடிந்த வரை கட்சிக்குள் பேசித் தீர்க்க முயற்சிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுங்கள் என்று கேட்டுள்ளார் என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

(வ-101)

## மாகாணமட்ட கரம் தொடர்: 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில், 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கும், மன்னார் சித்தி விநாயகர் கல்லூரிக்கும் இடையிலான காலிறுதி ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய அணியும் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணியும் மோதின. முதலிரு ஒற்றையர் ஆட்டங்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய அணி.

பிறிதொரு காலிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் வவுனியா சைவப் பிராகாச மகளிர் கல்லூரி அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

வேறொரு காலிறுதி ஆட்டத்தில் வவுனியா அல் இக்பால் வித்தியலாய அணியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும் மோதின. முதலாவது செற்றை விக்ரோறியாக் கல்லூரி அணி 20:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற்றை 16:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அல் இக்பால் அணி தனதாக்கியது. மூன்றாவது செற்றை வவுனியா அல் இக்பால் வித்தியாலய அணி 17:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

(ம-23)



# மகுடம் சூடியது சென். ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில், 20 வயது ஆண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரயில் நேற்று இந்த இறுதிப்போட்டி நடைபெற்றது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இரண்டு ஒற்றையர் ஆட்டங்கள் ஓர் இரட்டையர் ஆட்டம் என்பவற்றைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸின் சார்பில் சஜீவனும், சென். ஜோன்ஸின் சார்பில் அபினாஸூம் மோதினர். 25:05 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அபினாஸ் வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸின் சார்பில் றொசாந்தும், சென். ஜோன்ஸின் சார்பில் எல்சன் டெனுசனும் மோதினர். 25:01 என்ற புள்ளிகளின் அடிப்படையில் டெனுசன் வெற்றிபெற்றார். முதலிரு ஒற்றையர் ஆட்டத்தையும் கைப்பற்றியதை அடுத்து இரட்டையர் ஆட்டத்துக்கு வேலையில்லாமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது சென். ஜோன்ஸ் கல்லூரி.

### வவுனியா தமிழ் மத்தி. மூன்றாவது இடம்

20வயது ஆண்கள் பிரிவு மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா வீரபுரம் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. 2:1என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம். (ம-23)

# இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பரிவினருக்கான தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இன்றும் சில ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் 15வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி மோதவுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 17வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 3.40 மணிக்கு இடம்பெறும் 20வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

(ம-23)

### பாடசாலைகளுக்கு இடையிலான கரம்

## 17 வயது பெண்கள் பிரிவு காலிறுதியாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. 17 வயது பெண்கள் பிரிவு அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. இதன் முடிவுகள் வருமாறு.

ஓர் காலிறுதி ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதல் இரு செற்களையும் முறையே 17:3, 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் வெற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. முதலிரு செற்களையும் முறையே 25:0, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி.

பிறிதொரு காலிறுதி ஆட்டத்தில், மன்னார் பெரியமடு மகா வித்தியாலய அணியும், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியும் மோதின. 2:1 என்ற செற் கணக்கில் மன்னார் பெரியமடு மகா வித்தியாலய அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், யாழ்ரன் கல்லூரி அணியும் மோதின. 2:1என்ற செற் கணக்கில் மெதடிஸ்த பெண்கள் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# பாடசாலைகளுக்கான மாகாண மட்ட கரம் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி வசம் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில், 17 வயது ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா வீரபுரம் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. இரண்டு ஒற்றையர் ஆட்டங்கள் ஓர் இரட்டையர் ஆட்டம் என்பவற்றைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சார்பில் நிவேதிகனும், வவுனியா வீரபுரம் மத்திய மகா வித்தியாலய அணியின் சார்பில் அசோக்கும் மோதினர். 25:0 என்ற புள்ளிகளின் அடி[illegible] நிவேதிகன் வெற்றிபெ[illegible]

இரண்ட[illegible]ர் ஆ[illegible]தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சார்பில் மதுசனும், வவுனியா வீரபுரம் மத்திய மகா வித்தியாலய அணியின் சார்பில் சரத்குமாரும் மோதினர். 17:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மதுசன் வெற்றிபெற்றார். முதலிரு செற்களையும் கைப்பற்றிய காரணத்தால் மூன்றாவது செற்றுக்கான தேவை இல்லாமல் போனது. 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து மன்னார் அல் அசார் மகா வித்தியாலய அணி மோதியது. 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது வவுனியா தமிழ் மத்திய மகா வ[illegible]த்தியாலய அணி.

(ம-23)






## சதுரங்கத் தொடர்

யாழ்ப்பாணம், ஜூன் 16
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17வயது 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான சதுரங்கத் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நாளையும் (சனிக்கிழமை) நாளைமறுதினமும் (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெறவுள்ளது. [illegible]3)




மேற்கிந்தியத் தீவுகள் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் மழையால் கைவிடப்பட்டதை அடுத்து தொடர் 1:1 என்று சமநிலையானது. முதலாவது ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானும் இரண்டாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ரோகித் சர்மாவுக்கு கட்டாய ஓய்வு




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் இருந்து ரோகித் சர்மா கட்டாய ஓய்வின் அடிப்படையில் நீக்கப்பட்டார்.

மினி உலகக்கிண்ணத் தொடர் முடிந்த பின்னர் இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும், ஓர் ரி-20 ஆட்டமும் நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. ரோகித் சர்மா, பும்ரா இருவருக்கும் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. பதில் வீரர்களாக குல்தீவ் யாதவ், ரிசப் பன்ட் ஆகிய இருவரும் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்திய அணி விவரம் - கோக்லி (தலைவர்), தவான், பன்ட், ரகானே, டோனி, யுவராஜ், கேதர் யாதவ், பாண்டியா, அஸ்வின், ஜடேயா, சமி, உமேஸ் யாதவ், புவனேஸ்வர் குமார், குல்தீப் யாதவ், டினேஸ் கார்திக். (ம)

## சரஸ்வதியின் வலைப்பந்தாட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தத்திட்டமிட்ட வலைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளன. காலை 8.30 மணிதொடக்கம் நடைபெறவுள்ள ஆட்டங்களில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி, அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழக 'பி' அணி, யூனியன் விளையாட்டுக் கழக அணி, வின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி, சண்டிலிப்பாய் இந்து அணி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி, யாழ். ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி, அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி ஆகிய 9அணிகள் பங்கு பற்றுகின்றன. (ம-23)

# நான் உயிர்வாழ்வதே பெரிய சாதனைதான்

## யுவராஜ் உருக்கம்



இந்திய அணியின் சகலதுறை வீரரான யுவராஜ், பன்னாட்டு ஒருநாள் அரங்கில் தனது 300ஆவது ஆட்டத்தை நிறைவுசெய்துள்ளார். இது ஓர் சாதனையாகப் பார்க்கப்படும் நிலையில், தான் உயிர்வாழ்வதே பெரிய சாதனைதான் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மினி உலகக்கிண்ணத் தொடரின் நேற்றைய அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவும், பங்களாதேஷும் மோதின. இந்த ஆட்டம் யுவராஜின் 300ஆவது ஒருநாள் ஆட்டமாக அமைந்தது. இது தொடர்பில் பல பல கிரிக்கெட் ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

"இன்று நான் உயிர்வாழுகிறேன் என்றால் அதுதான் மிகப்பெரிய சாதனை. அதற்கு முன்னால் 300 ஆட்டங்கள் என்பது ஒரு சாதனையாக நான் கருதவில்லை. மீண்டும் என்னால் கிரிக்கெட் களத்துக்குத் திரும்ப முடியுமா என்ற சந்தேகம் வலுவாக இருந்தது. அவற்றில் இருந்து மீண்டு, மீண்டும் அணியில் இடம்பிடித்தமை மிக முக்கியமானது. பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் மட்டுமல்லாது உள்ளூர் ஆட்டங்களிலும் முழுமனதுடனேயே விளையாடுகிறேன்" என யுவராஜ் மேலும் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்ற யுவராஜ் முக்கிய காரணமாக இருந்தார். அதன் பின்னர் அவருக்கு புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதிதீவிர சிகிச்சை வழங்கப்பட்டு அவர் அதிலிருந்து மீண்டார். அணியிலும் இடம்பிடித்துக் காட்டினார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக யுவராஜ் தற்போது ஓர் அறக்கட்டளையை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார். அவரது துடுப்பு மட்டையில் உள்ள விளம்பரமும் புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்துக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையிலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பாகிஸ்தான் மிரட்டும் ஸ்ரெய்ன் நம்பிக்கை

மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்று தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்துவீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் நம்பிக்கை தெரிவித்தார்.

லீக் சுற்றில் பாகிஸ்தான் அணி தனது முதல் ஆட்டத்தில் இந்தியாவிடம் படுதோல்வி அடைந்தது. அதன்பிறகு தென்னாபிரிக்கா, இலங்கையை வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியில் இங்கிலாந்தை துவம்சம் செய்து இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. இங்கிலாந்தை இங்கிலாந்தில் வைத்து வீழ்த்துவ தென்பது மிகவும் கடினமான காரியம். அதை பாகிஸ்தான் செய்ததால் அந்த அணிக்கும் வாய்ப்பு அதிகம் என்று கருதப்படும் நிலையில் இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரெய்ன்.


"பாகிஸ்தானுக்கு வாழ்த்துக்கள். விலகல் சுற்றுக்களில் விளையாடும்போது தரவரிசையில் எத்தனையாவது இடத்தில் இருக்கிறோம் என்பது பெரிய விடயம் அல்ல. ஜாம்பவான் அணி எப்படி விளையாடுமோ, அப்படிவிளையாடிபாகிஸ்தான் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளது. இறுதியிலும் அந்த அணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தும் என ஸ்ரெய்ன் மேலும் தெரிவித்தார். (ம)






மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்துக்கு முதல் அணியாக பாகிஸ்தான் தகுதி பெற்றிருந்த நிலையில் அந்த அணி நேற்று கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டது. இது தொடர்பான ஒளிப்படங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளது. இறுதியாட்டத்துக்குத் தயார் என்பது போன்ற கருத்துக்களும் அதில் பதிவிடப்பட்டுள்ளன. (ம)

# இந்தியா - பாகிஸ்தான் இறுதியில் பலப்பரீட்சை



மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷைத் தோற்கடித்து இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது இந்திய அணி. பாகிஸ்தான் அணி ஏற்கனவே இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றிருந்த நிலையில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிண்ணத்துக்காக மல்லுக்கட்டவுள்ளன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. பங்களாதேஷின் ஆரம்ப வீரர்களாக தமீம் இக்பால் மற்றும் சர்க்கர். ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார் சர்க்கர். வழக்கமாக இந்தியாவுக்கு எதிராக சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தும் ரகுமானால் நேற்று முடிந்தது 19 ஓட்டங்கள் மட்டுமே.

இக்பாலுடன் இணைந்தார் ரகிம். இந்தியாவுக்கு சிறிது நடுக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இணைப்பாட்டம் அரங்கேறியது. இணைப்பாட்டம் 100ஆனது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். அணி 154 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இக்பால் 70 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். வீழ்த்தியவர் கேதர் யாதவ். அவர் ரகிமையும் ஆட்டமிழக்கச் செய்தார். நியூசிலாந்துக்கு எதிராக சதம் விளாசிய சகிப் அல் ஹசன் நேற்று 15 ஓட்டங்களுடன் அடங்கிப்போனார். முடிவில் 264 ஓட்டங்களில் கட்டுப்பத்தப்பட்டது பங்களாதேஷ்.

பந்துவீச்சில் கேதர் யாதவ், புவனேஸ்வர் குமார், பும்ரா மூவரும் தலா 2 இலக்குகளையும், ஜடேயா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ரோகித், தவான், கோக்லி, யுவராஜ், டோனி, பாண்டியா இவ்வாறான துடுப்பாட்டப் பலத்தைக் கொண்ட இந்திய அணிக்கு 265 ஓட்டங்கள் என்பது ஒரு இலக்கே அல்ல. ஆரம்ப வீரர்களாக ரோகித் மற்றும் தவான். இருவருமே அணியை வெற்றிபெற வைக்கக்கூடிய அடித்தளத்தை பலமாக அமைத்தனர். மினி உலகக்கிண்ணத் தொடரின் ஜாம்பவானாக விளங்கும் தவான் நேற்றும் 46 ஓட்டங்களைக் குவித்தார். அணி 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தவானை வீழ்த்தினார் மோர்ரசா.

வந்தார் கோக்லி. ரோகித் - கோக்லி கூட்டணி மிகச் சிறப்பாக அடித்தாடியது. சராசரி 6.50இற்கும் அதிகமாகப் பேணப்பட்டது. சதம் கடந்தார் ரோகித் சர்மா. கோக்லியும் மிகச் சிறப்பாக அடித்தாடினார். 31.4 பந்துப் பரிமாற்றங்களில் 200 ஓட்ஙட்களைத் தொட்டது இந்தியா.

அதிரடி தொடர்ந்தது. முடிவில் 59 பந்துகள் மீதமிருக்க ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 9 இலக்குகளால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது இந்திய அணி.

**இந்தியா - பாகிஸ்தான்**
**ஞாயிறன்று இறுதியில்**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் இங்கிலாந்தை அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது பாகிஸ்தான். நாளைமறுதினம் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதவுள்ளன. இந்த இரு அணிகளும் சாதாரமான ஓர் ஆட்டத்தில் மோதுவது என்றாலே எதிர்



பார்ப்புக்கள் எகிறும். இறுதியாட்டத்தில் மோதவுள்ளன என்றால் கேட்கவும் வேண்டுமா. சமூக வலைத்தளங்களில் தற்போதே வாக்குவாதங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன.

(ம)

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு தங்கி இருந்து வேலை செய்ய பணிப் பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு

077 472 4075

**வேலையாள்கள் தேவை**

எமது நிறுவனத்தில் கட்டட வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவைப்படுகிறார்கள்.

1) மேசன்
2) மின் ஒட்டுநர் (Welder)
3) மரவேலை செய்பவர்கள் (Carpenter)
4) உதவியாளர்

16.06.2017 வெள்ளிக்கிழமை காலை நேரடியாக சமுகம் தரவும்.

லக்ஷ்மி ரஜென்சி, 23/1, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0214935555

**வேலையாள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் மின்சாதன உபகரணங்கள் விற்பனை செய்யும் பிரபல விற்பனை நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை.
(ஆண்/ பெண் இருபாலாரும்)

077 875 9532

**க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான பொருளியல் பாடக் கருத்தரங்கு**

காலம் :- 18.06.2017 (ஞாயிற்றுக்கிழமை)
இடம் :- கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்
நேரம் :- காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை.
வளவாளர் :- வே.கருணாகரன்
(பிரபல்ய பொருளியல் ஆசிரியரும் பொருளியல் நூல் எழுத்தாளரும்)
அனைத்துப் பாடங்களும் துரித மீட்டல் இடம்பெறும்.
( புதிய தேசிய வருமானக் கணிப்பீடு நடைமுறை விடயங்கள் உட்பட )
ஏற்பாடு:- MB கணக்கீட்டுக் கல்லூரி, கைதடி.
தொடர்பு :- 077 015 0738
அனுமதி வரையறையற்றது.

**கனடாவில் நிரந்தர குடியேறல் வேலைவாய்ப்பு கல்வி கருத்தரங்கு**

குறுகிய காலத்தில் கனடா செல்ல ஒரு அரிய சந்தர்ப்பம்
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்
நாள்-17-06-2017
சனிக்கிழமை
முற்பதிவு அவசியம்
V2 Travels
0768226236
49 A சப்பல் லேன்
யாழ்ப்பாணம்

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

முன்பள்ளி ஆசிரியர் தெரிவு
பிரதி ஞாயிறு
11.00 → 3.00
சுங்க பரிசோதகர்
பிரதி சனி
12.30 → 4.00
முகாமைத்துவ உதவியாளர்
பிரதி ஞாயிறு
11.00 → 2.00
வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதி சனி
10.00 → 2.00
SLAS
பிரதி ஞாயிறு
9.00 → 4.00
தொடர்புகளுக்கு,
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு,
(யாழ், ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கிஅருகில்)

**கட்டார் நாட்டில் கட்டட நிர்மாணத்துறையில் அதியுயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்பு உடனடியாக காணப்படுகின்றது**

| | Salary | No'S |
|---|---|---|
| Civil Forman | 2000 QR | 10 |
| Shuttering carpenter | 1300 QR | 30 |
| Steel Fixer | 1200 QR | 25 |
| Mason | 1300 QR | 30 |

✔ தங்குமிடம், மருத்துவம் இலவசம் ✔ உணவு கொடுப்பனவு 300 QR
✔ 8 மணி நேர வேலை ✔ வயது 20- 40
✔ கைவசம் விசா உள்ளதால் 2 வாரத்தில் பயணம்.
✔ நேர்முகப் பரீட்சை 20ஆம் திகதி எமது தலைமை நிறுவனத்தில் இடம்பெறும்.

Jobs Lanka International - 077 721 5291

**டிப்பர் விற்பனைக்கு**

கோப்பாய் பிரதேசத்தில் நல்ல நிலையிலுள்ள டிப்பர் விற்பனைக்குண்டு.
வகை - லங்கா அசோக் லேலண்ட
ஆண்டு - 2011
வாகன இல. LK X X X X

076 426 2053

**சிறுநீரகம் தேவை**

50 வயதுடைய பெண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு B+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

076 533 8317

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1372
சீட்டிழுப்பு திகதி 2017.06.15
வெற்றி இலக்கங்கள் 11 48 57 63
ஆங்கில எழுத்து B
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 13,368,504/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 2017.06.19 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SUPER BALL**
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 663
சீட்டிழுப்பு திகதி 15.06.2017 வியாழக்கிழமை
எழுத்து U
இலக்கம் 03 19 54 70
சுப்பர் ஜக்பொட் ரூ. 48, 692, 764/=
வெல்லப்படவில்லை
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 17.06.2017 ஆம் திகதி சனிக் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

**Development Fortune**
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 48
சீட்டிழுப்பு திகதி 15.06.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 36 40 45
சுப்பர் இலக்கம் 03
அதிர்ஷ்ட மாதம் பெப்ரவரி

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 12, 524, 434/= | ரூ. 2, 764, 823/= | ரூ. 1, 167, 344/= |

17.06.2017 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம் 29 . 09 . 1930
மறைவு 17 . 05 . 2017

அமரர் மகாலக்சுமி செல்வரட்ணம்

17.05.2017 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

" யோகஸ்தி "
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.